24 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம் ™
VLAMBARAM ™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978


RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969

நதி 24 | பாலம் 19 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | OCTOBER 01, 2014

# தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டுகள் சிறை!

## ரூ100 கோடி அபராதம், முதல்வர் பதவி பறிப்பு!

வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்த வழக்கில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டுகாலம் சிறைத் தண்டனையுடன் ரூ100 கோடி அபராதம் விதித்து பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் செப்ரெம்பர் 27, 2014 தீர்ப்பளித்துள்ளது. ஜெயலலிதா கடந்த 1991 முதல் 1996 வரை தமிழக முதல்வராக பதவி வகித்த


J Jayalalith

காலத்தில் மாத வருமானம் ரூ1 ஊதியமாக பெற்றார். ஆனால் இந்த காலத்தில் வருமானத்துக்கு அதிகமாக ரூ66.65 கோடி சொத்து குவித்தார் என்று சென்னை நீதிமன்றத்தில் 1996-ம் ஆண்டு சுப்பிரமணியன் சுவாமி வழக்குத் தொடர்ந்தார். அப்போது தொடங்கி சுமார் 18 ஆண்டுகள் வரை இந்த வழக்கு சென்னை மற்றும் பெங்களூரில் அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களில் நடைபெற்றது. குற்றம் சாட்டப்பட்ட ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நேரில் சமூகமளித்து விளக்கமளித்திருந்தனர்.

இந்நிலையில், பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி மைக்கேல் டி.குன்ஹா, பரப்பன அக்ரஹாரம் பகுதியில் உள்ள நீதிமன்ற வளாகத்தில் செப்ரெம்பர் 27, 2014 இந்த சொத்துக் குவிப்பு வழக்கின் தீர்ப்பை வெளியிடுவதாக அறிவித்திருந்தார். இந்த நிலையில் நீதிமன்றத்தில் ஜெயலலிதா, சசி-கலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் சமூகமளித்திருந்தனர். செப்ரெம்பர் 27, 2014 பிற்பகல் 2.15 மணியளவில் செய்தியாளர்களிடம் பேசிய அரசு வழக்கறிஞர் பவானி


O Panneerselvam

சிங், இந்தவழக்கில் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் குற்றவாளிகள் என்று நீதிபதி குன்ஹா தீர்ப்பளித்ததாக தெரிவித்தார். மாலை 5 மணியளவில்தான் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய 4 பேருக்கும் 4 ஆண்டுகாலம் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. அத்துடன் இந்த வழக்கில் ஜெயலலிதாவுக்கு ரூ100 கோடி அபராதம் விதிக்கப்பட்டது. சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு தலா ரூ10 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. 4 ஆண்டுகாலம் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதால் ஜெயலலிதாவின் முதல்வர் பதவி உடனடியாக பறிபோய்விட்டது. அதேபோல ஜெயலலிதாவின் எம்எல்ஏ பதவியும் உடனடியாக ரத்தாகிவிட்டது. 4 ஆண்டு சிறை தண்டனை என்பதால் இந்த நீதிமன்றத்தில் உடனடியாக ஜாமீனும் கிடைக்காது. இதனால் நீதிமன்றத்தில் இருந்து அவர்கள் அப்படியே சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அடைக்கப்பட்டனர்.

குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட உடனேயே பெங்களூர் பொலீசார் ஜெயலலிதாவை தங்கள் பொறுப்பில் எடுத்தனர். முன்னதாக சிறைச்சாலை வளாகத்திலுள்ள மருத்துவமனையில் ஜெயலலிதாவுக்கு மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டன. அதேபோல, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோருக்கும் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது. அதன்பிறகு சிறையில் அடைக்கப்பட்டனர். சிறப்பு நீதிமன்றம் அமைந்துள்ளது பெங்களூரில் என்பதால் நீதிமன்ற எல்லைக்கு உட்பட்ட சிறையில் ஜெயலலிதா உள்ளிட்ட மூவரும் அடைக்கப்பட்டுள்ளனர். எனவேதான் சென்னை சிறைக்கு அழைத்து வரவில்லை என்று சட்ட வல்லுநர்கள் தெரிவித்தனர். சிறையில் அடைக்கப்பட்ட ஜெயலலிதாவை பெங்களூரில் இருக்கும் மருத்துவமனைக்கு அன்று இரவு அழைத்துச் சென்றார்கள். அங்கு அவருக்கு முழு மருத்துவ பரிசோதனை செய்த பிறகு அவர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார்.

கர்நாடக உயர்நீதிமன்றத்தில்தான் இவர்கள் இனி ஜாமீன் மனு அப்பீல் செய்யமுடியும். ஆனால் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் செப்ரெம்பர் 29ஆம் திகதி தொடங்கி ஒக்ரோபர் 5ஆம் திகதி வரை தசரா விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஒக்ரோபர் 5ஆம் திகதிக்கு மேல்தான் ஜாமீன் மனு மீதான விசாரணை நடைபெறும். எனவே கர்நாடக உயர் நீதிமன்றத்தை

தொடர்ச்சி 04ஆம் பக்கம்


Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc.

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி

Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd.
Company#10214

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

THE TRUSTED MORTGAGE SPECIALISTS
"I Work for you Not for the Bank"
MORTGAGE ALLIANCE
The Guardian
•I will arrange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage??? "When banks says no We says yes" @ interest rate starting from 6.99%+.

Thayalan Goblakrishnan
(M12001612)
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Some Terms & Conditions May Apply
Contact: 416.575.3211
E-Mail: thaya.gobal@gmail.com







CELEBRATING 25 Years

Vlambaram Publications inc.

# 25 ஆவது ஆண்டில் விளம்பரம் நடத்தும் உலகளாவிய போட்டி

றொறொன்ரோவில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் விளம்பரம் பத்திரிகை 25வது வருடத்தை (1991 - 2015) முன்னிட்டு நடத்தும் தமிழ் சமூக-இலக்கிய-வரலாற்றுப் போட்டி. போட்டிக்கான படைப்புக்கள் பின்வரும் முகவரிக்கு ஜனவரி முதலாம் திகதி 2015க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். அஞ்சல் உறையில் அல்லது மின்னஞ்சல் பொருள் பகுதியில் '25வது ஆண்டு விளம்பரப் போட்டி' என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி
Vlambaram Publication Inc.
GTA Square,
5215 Finch Ave. East, #201
Toronto ON, M1S 0C2
மின்னஞ்சல் முகவரி:vlambaram@sympatico.ca

போட்டியில் வெற்றிபெற்ற மூன்று படைப்புக்களை தவிர ஏனையவற்றிற்கு எவ்வித பணமும் வழங்கப்பட மாட்டாது. ஆனால் சிறந்ததென நடுவர்களால் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் விளம்பரம் பத்திரிகையிலும் விளம்பரம் மற்றும் தமிழ்வணக்கம் இணையத்தளங்களிலும் பிரசுரிக்கப்படலாம்.

படைப்புக்கள் முன்னர் பத்திரிகைகள், இணையங்கள் உட்பட்ட மற்றைய ஊடகங்கள் எதிலும் பிரசுரமாகியிருக்கக் கூடாது. இதனை எழுத்தாளர் படைப்பின் முகப்பகுதியில் உறுதிப்படுத்த வேண்டும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் விளம்பரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.

போட்டி 1
குறுநாவல் போட்டி

9,000-12,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

போட்டி 2
திரைப்படக் கதைப் போட்டி
(Script Writing)

1500-2000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

போட்டி 3
கவிதைப் போட்டி

60-100 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

போட்டி 4
கட்டுரைப் போட்டி

பின்வரும் தலைப்புக்களில் ஒன்றில் கட்டுரையை எழுதி அனுப்பலாம்.

1. புகலிட பொருளாதாரத்தில் தமிழரின் பங்கு
2. தமிழரின் கலையும் பண்பாடும்
3. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழரின் பங்கு
4. மருத்துவமும் தமிழரும்

1,500 - 2,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

நன்கொடை: போட்டி 1இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 1,000, 500, 300 வழங்கப்படும்.
நன்கொடை: தனித்தனியே போட்டி 2, 3, மற்றும் 4இற்கும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 500, 300, 200 என வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 8.5"-11" (A4) தாளில் 11pt எழுத்துரு அளவில் தமிழ் unicode font இல் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்புபவர்கள் word ல் ஆக்கத்தை பதிவு செய்து இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சலின் முகப்பில் ஆக்கத்தை பதிவு செய்ய வேண்டாம். படைப்பாளியின் முழுப்பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் உறுதிப்படுத்தலும் படைப்பின் முன் பகுதியில் தனித்தாளில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். போட்டி உலகில் வாழும் தமிழர்கள் அனைவருக்குமானது. விளம்பரம் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களோ விளம்பரத்தின் எழுத்தாளர்களோ இப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது.

# ஊவா முடிவுகள் சொல்லும் பாடம்!

AABS DON VALLEY PEST CONTROL INC.
Please Call @ 647-931-7124 OR 1-800-816-6406
ABDV PEST CONTROL
The Name You Can Trust

Licensed Graduate Exterminator, Insured and 10 years Experience Free Inspection, Free Estimates & Guaranteed services in GTA and out of GTA We control Cockroaches, Bedbugs, Mice, Flea, Wasps/Bees, Earwigs ,Carpenter ants and other ants, Fruit Flies, Drain flies, Silver fish, Centipedes, Spiders etc. We provide pest control services for Residential, Commercial, Industrial, Food Warehouses, Food Processing and Packaging industries.

இலங்கையில் அண்மையில் நடைபெற்ற ஊவா மாகாணசபைக்கான தேர்தல் அவதானிகளால் முக்கியமான ஒன்றாக பார்க்கப்படுகின்றது. அடுத்து வரப்போகின்ற ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்ற தேர்தல் குறித்த ஒரு கருத்துக் கணிப்பாகவே இத்தேர்தலை ஆளும் மற்றும், எதிர் தரப்புக்கள் நோக்கின. அது மட்டுமல்லாமல், இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்று விரும்புகின்ற மேற்கு நாடுகளும் இத்தேர்தல் முடிவுகளை ஊன்றி கவனித்து வருகின்றன.

இத்தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் முன்னணியே வெற்றி பெற்றிருந்தாலும் கூட அதன் செல்வாக்கு சரிந்து வருகின்றமையினையும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் செல்வாக்கு அதிகரித்துள்ளமையும் இத்தேர்தல் முடிவு வெளிப்படுத்தியிருக்கின்றது. பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களை உள்ளடக்கிய ஊவா மாகாணசபைக்குரிய 34 ஆசனங்களில் 2 போனஸ் ஆசனங்கள் அடங்கலாக 19 ஆசனங்களை ஆளுங்கட்சி வென்றுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி 40 வீதமான வாக்குகளுடன் 13 ஆசனங்களை வென்றுள்ளது. ஏனைய இரண்டு ஆசனங்களையும் ஜே.வி.பி பெற்றுள்ளது.

2009-ம் ஆண்டு இம்மாகாணசபைத் தேர்தல் முடிவுகளின் படி, 72.32 வீதமான வாக்குகளை வென்றிருந்த அரசாங்கக் கூட்டணி 25 ஆசனங்களை வென்றிருந்தது. இம்முறை 51 வீதமான வாக்குகளை பெற்றுள்ளது. குறிப்பாக, 2009-ம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலில் ஆளுங்கட்சி வென்றிருந்த வாக்குகளில் இம்முறை 21 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஆதரவு 18 வீதத்தால் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டின் இறுதியில் நடந்த தென் மாகாணசபை மற்றும் மேல் மாகாணசபை தேர்தல் முடிவுகளிலும் ஆளும் கட்சிக்கு இதுபோன்ற சரிவு நிலையே காணப்பட்டுள்ளது.

முஸ்லிம் வாக்குகளை இலக்கு வைத்து கூட்டாக ஜனநாயக தேசிய முன்னணியின் கீழ் வேட்பாளர்களை நிறுத்திய அரச சார்பு முஸ்லிம் அரசியல் கட்சிகளான சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் படு தோல்வியினையே அடைந்துள்ளன.

ஆளும் கட்சியினருக்கு மக்கள் மத்தியிலிருந்து வந்த செல்வாக்கு கணிசமாக குறைந்து வருவதையே இவை புலப்படுத்துகின்றன. அரசாங்கத்தின் மீது தென்னிலங்கை மக்கள் அதிருப்தி கொண்டு வருகின்றனர் என்பதையும் இது வெளிப்படுத்தியுள்ளது.

இதைவிடவும், போர் வெற்றி தொடர்பான கவர்ச்சி தற்போது நிறம் மங்கி வருவதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். போர் முடிவிற்கு பின்னர் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்ற தேர்தல் ஆகியவற்றில் தென்னிலங்கை மக்களின் பெரும்பான்மை வாக்குகளை 'போர்வெற்றி'யே பெற்றுக் கொடுத்தது. ஒவ்வொரு ஆண்டும் போர் வெற்றி விழாவை அரசாங்கம் தென்னிலங்கையில் நடத்தி வருகின்றமைக்கு பிரதான காரணம் அதன் வசீகரம் மக்கள் மத்தியில் குறைவடையாமலிருக்க வேண்டும் என்பதே. தென்னிலங்கை சிங்கள மக்களும் கடந்த தேர்தல்களில் அந்த மயங்கத்திலேயே இருந்தனர். வட பகுதிக்கான சுற்றுலாக்களை ஏற்படுத்திக் கொடுத்து போரின் வெற்றிக்களங்களை அரசாங்கம் அவர்களுக்கு காண்பித்தது. இன்று இந்நிலைமை படிப்படியாக குறைவடைந்து செல்கின்றது. தெற்கிலுள்ள மக்கள் மயக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு வருவதை ஊவா மாகாணசபை தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கின்றது.




**- விகிர்தன் -**

முஸ்லிம்களும் இப்போது விழிப்படைந்து வருகின்றமையினையும் இத்தேர்தல் முடிவு சொல்லியுள்ளது. முஸ்லிம்கள் மீதான அண்மைக்கால தாக்குதல்கள், அதற்கு முஸ்லிம் கட்சிகள் மேற்கொண்ட நடவடிக்கை என்ன என்பது குறித்தெல்லாம் அவர்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

இத்தேர்தல் முடிவானது, முஸ்லிம்களின் பிரதான கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் அரசிலிருந்து விலகவேண்டும் என்கிற அழுத்தத்தை அக்கட்சிக்கு கொடுத்திருக்கின்றது. முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களே இந்த அழுத்தத்தை கட்சி தலைமைக்கு கொடுத்து வருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியை தெற்கில் மக்கள் புறக்கணித்து வருகின்றமைக்கு பிரதான காரணமாக அதன் உட்கட்சி பிரச்சினையே இருந்து வருகின்றது. ரணில் விக்கிரமசிங்க தலைமை மாற்றத்திற்கு இடம் கொடாமையும், ஆளுமை மிக்கவர்களிடம் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படாமையும் இதற்கு பிரதான காரணங்களாகும். இம்முறை இந்த ஊவா தேர்தல் முடிவிற்கு பின்னர் கட்சிக்குள் சில மாற்றங்களை மேற்கொள்ளும் முடிவை எடுப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சித் தலைமை மக்களால் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றது.

'ஊவா மாகாணசபைத் தேர்தலின் மூலம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டும்' என்று கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்று ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது. கள்ள வாக்கு, அச்சுறுத்தல்கள் மற்றும் தேர்தல் முறைகேடுகளை எதிர்கொண்டு பொதுமக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்துள்ளதை ஐக்கிய தேசிய கட்சி தற்போது உணர்ந்து வருகின்றதை அக்கட்சியினர் வெளியிட்டுள்ள கருத்துக்களிலிருந்து அறிய முடிகின்றது.

இலங்கையில் நீண்ட காலமாகவே, ஒரு பெரும்பான்மை கட்சி ஆட்சிக்கு வருவதானால், சிறுபான்மை மக்களின் ஆதரவு இன்றியமையாத நிலை காணப்பட்டு வந்தது. போரின் பின்னரான கால கட்டத்தில் தான் தனியே சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றே ஆட்சியமைக்க முடியும் என்கிற நிலை ஏற்பட்டது. நாட்டில் பிரதான கட்சிகளாக உள்ள சிறி லங்கா சுதந்திர கட்சிக்கும், ஐக்கிய தேசியக்கட்சிக்கும் சிங்கள மக்களின் வாக்குகள் பிரிகின்ற போது தமிழர்களினதும் முஸலிம்களினதும் வாக்குகளே ஆட்சியை தீர்மானிக்கும் நிலை முன்னர் நிலவியது. போரின் பின்னரே இந்நிலை மாறியது.

மீண்டும் அவ்வாறானதோர் நிலைமை ஏற்படுகின்ற போதே நாட்டில் ஜனநாயகம் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதே பலரதும் கருத்து. மக்களின் ஏகபோக தெரிவு ஒரு பக்கத்திற்கு செல்லும் போது அந்த மக்களின் ஆதரவை பயன்படுத்தி ஆளும் தரப்பு பின்னர், சர்வாதிகாரத்தை நோக்கி செல்ல முற்படும். சட்டம், நீதி, சர்வதேச ஒழுங்குகள் எல்லாமே இதனால் மீறப்படும் என்பதற்கு தற்போதைய இலங்கை நல்ல உதாரணமாகும்.

தமிழ் மக்கள் இன்று, மத்தியில் யார் ஆண்டால் என்ன என்று அக்கறையின்றி இருந்து விட முடியாது. இலங்கையில் மாறி மாறி பெரும்பான்மையினரே ஆட்சிக்கு வருவர் என்பது தெரிந்த விடயமே ஆனாலும், அந்த ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக சிறுபான்மையினராகிய தமிழ் முஸ்லிம் மக்கள் இருக்க வேண்டும். அப்போதுதான் ஆளும் தரப்பிடம் பேரம் பேசி தங்கள் உரிமைகளைப் பெற முடியும். இதற்கு தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமை பிரதானமானது.

இவ்வகையில் ஊவா மாகாண தேர்தல் முடிவுகள் இலங்கையின் சிறுபான்மை மக்களையும் அடுத்து வரும் நிலைமைகளை கையாளும் நிலைமைக்கு உந்தி விட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6


# இறப்பிற்கு பின்.....?



## சத்குரு வாசுதேவ்

சற்றே புதிரான ஒரு கேள்வியாய் தெரிந்தாலும் வாழ்வின் மர்மங்களை நம் கண்களுக்கு உணர்த்தும் வாழ்க்கை இரகசியம் இது. முற்றிலும் புரியாவிட்டாலும் கைவிளக்காய் நம்மை சிறிய வெளிச்சத்திற்கு கூட்டிச் செல்கிறது சத்குருவின் இந்த கேள்வி-பதில் பகுதி…

**கேள்வி - யோகா என்பது கலையா? விஞ்ஞானமா?**

சத்குரு: துவக்கத்தில் அது ஒரு திறன். தொடர்ந்த பயிற்சி மூலம் அந்தத் திறன் கைவரப் பெற்றதும் அது ஒரு விஞ்ஞானமாகிறது. அந்த விஞ்ஞானத்தின் நுட்பங்களைப் புரிந்து, மிகத் தேர்ச்சி பெற்றதும் ஒரு கட்டத்தில் அது கலையாகிறது.

கலை என்ற வார்த்தையில்கூட யோகா முழுமையாக அடங்கிவிடாது. ஆழமாகப் போகப்போக, அது ஒருவித சாதுர்யமான தந்திரமாவதை வேண்டுமானால், கலை என்று சொல்லலாம்.

**கேள்வி - உடலை விட்டு நம் உயிர் நீங்கியபின், அதன் அடுத்த கட்டம் என்ன?**

சத்குரு: உடலைவிட்டு உயிர் எப்படி நழுவி வெளியேறுகிறது என்பதைப் பொறுத்துத்தான் அதன் அடுத்த கட்டம் அமையும்.

பொதுவாக ஒருவரது உயிர் பிரிந்ததும், அவர் இனி இல்லை என்கிறோம். அப்படிச் சொல்வது சரியில்லை. உண்மையில் அவர் இனி உங்கள் அனுபவத்தில் இல்லை என்பதே சரி. அவர் வேறு ஏதேதோ விதத்தில் அங்கே இருக்கிறார்.

உடலை எந்தவிதத்திலும் காயப்படுத்தாமல், சிதைக்காமல் முழு உணர்வுடன், ஒரு ஆடையை உதறுவது போல், உங்கள் உடலைவிட்டு உயிர் வெளியேறுமானால், அதை மஹாசமாதி என்கிறோம். அந்த நிலை அடைந்தவர்களுக்கு உயிர்ப் பயணம் அத்துடன் ஒரு முடிவுக்கு வருகிறது. ஒன்றுமில்லாததிலிருந்து துவங்கிய பயணம் அந்த ஒன்றுமில்லாததுடன் கலந்து ஐக்கியமாவதுடன் வாழ்க்கையின் வட்டம் முழுமையடைகிறது!

**கேள்வி - கௌதம புத்தர் பெரும்பாலும் நிர்வாணமாக இருந்தார் என்பது உண்மையா? பண்டைய யோகிகள் ஏன் உடைகளைத் துறந்து நிர்வாணமாக இருந்தார்கள்? உடைகளற்று இருப்பது தியான நிலைக்கு ஒரு வழியா?**

சத்குரு: கௌதம புத்தர் சமூகத்துடன் பல விதங்களில் இயங்கிக்கொண்டு இருந்ததால், அவர் நிர்வாணமாக இல்லை.

வனங்களிலும் மலைகளிலும் பல ஆண்டுகள் தொடர்ந்து ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடும் யோகிகள் எத்தனை காலத்துக்குத் தங்கள் உடைகளைப் பாதுகாக்க முடியும்? அந்த உடைகள் நைந்து பயனற்றுப் போனால், விலங்குகளைக் கொன்று அவற்றின் தோல்களை ஆடைகளாக அணிய வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுவார்கள். அதனால் யோகிகள் தங்கள் உடைகள் பற்றி கவலைப்படவில்லை.

தவிர, ஆன்மீகப் பாதையில் யோகிகள் பயணம் செய்கையில் உடல் பற்றிய கவனத்தை வெகு குறைவாகவே வைத்திருக்க விரும்புவார்கள். நீங்கள் கம்பியூட்டரில் வேலை செய்கையில், தேவையற்ற விடயங்களை மினிமைஸ் செய்து வைத்திருப்பது போல், யோகிகள் தங்கள் உடல் பற்றிய கவனத்தைக் குறைத்து வைத்திருப்பார்கள். வெளியாருக்குத்தான் அவர்களுடைய நிர்வாணம் பற்றிய கவனமே இருக்கும். யோகிகளுக்கு அவர்களுடைய உடல் பற்றிய கவனமே இருக்காது.


## *4 Day Inner Engineering Program*

led by an Isha teacher trained by Sadhguru
Coming to Toronto
***November 13th to 16th, 2014***

***TIMINGS:*** Thursday November 13: 6:30pm – 9:30pm
Friday November 14: 6:30pm – 9:30pm
Saturday November 15: 8:30am – 7:00pm
Sunday November 16: 7:30am – 7:00pm
Vegetarian lunch provided on Saturday; Vegetarian breakfast & lunch on Sunday.
Attendance for all sessions is required.
***VENUE:*** The Princess Banquet, 3330 Pharmacy Ave., Scarborough, ON M1W 3V8
***CONTACT:*** Email: toronto@ishafoundation.org Phone: 416-300-3010
On line registration: www.innerengineering.com/live/toronto


## தமிழக முதல்வர்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

அனுகி ஜாமீன் பெறும்வரை சிறையில் தான் ஜெயலலிதா உள்பட 4 பேரும் அடைக்கப்பட்டிருப்பர்.

பெங்களூர் சிறப்பு மாஜிஸ்திரேட் கோர்ட் சொத்துக் குவிப்பு வழக்கில் தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைக்குமாறும், ஜாமீன் வழங்குமாறும் கோரி ஜெயலலிதா சார்பில் செப்ரெம்பர் 29, 2014 கர்நாடக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி டி.எச். வகேலாவிடம் ஜெயலலிதாவின் வக்கீல்கள் மனு அளித்தார்கள். தற்போது கர்நாடக உயர்நீதிமன்றத்திற்கு தசரா விடுமுறை என்பதால் வழக்கமான பெஞ்சில் அந்த மனுவை விசாரிக்க முடியாது. அதேசமயம், விடுமுறைக் காலத்தில் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் மட்டும் சிறப்பு பெஞ்ச் செயல்படும் என்று தகவல்கள் கூறுகின்றன. இருப்பினும் இந்த இரண்டு கோரிக்கைகளும் உடனடியாக ஏற்கப்படும் வாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது. எனவே உயர்நீதிமன்றத்தில் மனு தள்ளுபடி செய்யப்பட்டால், உடனடியாக உச்சநீதிமன்றத்தை அனுகுவது குறித்த நடவடிக்கைகளிலும் ஜெயலலிதாவின் வழக்கறிஞர்கள் ஈடுபட்டுள்ளனர். 2 ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருப்பதால் உடனடியாக ஜாமீன் தர மாட்டார்கள். ஏன் உச்சநீதிமன்றத்திலுமே கூட எடுத்த எடுப்பிலேயே ஜாமீன் கிடைக்கவும் வாய்ப்பில்லை என்கிறார்கள் சட்ட நிபுணர்கள். இதற்காக தொடர் சட்டப் போராட்டத்தில் ஜெயலலிதா ஈடுபட நேரிடும் வாய்ப்புகளே அதிகம் உள்ளன.

நான்காண்டுகள் சிறை தண்டனை பெற்றுள்ள ஜெயலலிதா இன்னும் இரு பொதுத் தேர்தல்களில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951, பிரிவு 8 (3)ன்படி நீதிமன்றத்தால் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் சிறை தண்டனை விதிக்கப்பட்டால் அவர் குற்றவாளி என்று தீர்ப்பு அளிக்கப்பட்ட நாள் முதல், தேர்தலில் போட்டியிட தகுதியை இழந்தவராக ஆகிறார். இந்தத் தகுதி இழப்பு அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட நாளிலிருந்து மேலும் 6 ஆண்டுகளுக்கு நீடிக்கும். இது தேர்தல் ஆணையத்தின் சட்டம். எனவே ஜெயலலிதாவுக்கு நான்காண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளதால் விடுதலையான பிறகும் 6 ஆண்டுகள் தேர்தலில் போட்டிய முடியாது. ஒரு சட்டசபை அல்லது மக்களவையின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும்.



John Michael Cunha

கடந்த 1991 ஆம் ஆண்டு முதல் 1996-ம் ஆண்டு வரை தமிழக முதல்-அமைச்சராக ஜெயலலிதா இருந்தபோது அவர் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக, தமிழக லஞ்ச ஒழிப்புத்துறை பொலீசார் தொடர்ந்த வழக்கில் சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோரும் சேர்க்கப்பட்டனர். சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதா, சசிகலா கூட்டு சதி செய்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. கூட்டுச்சதி என்பதை நீக்க கோரி பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் ஜெயலலிதா மற்றும் சசிகலா மனுத் தாக்கல் செய்திருந்தனர். இறுதி தீர்ப்பின் போது கூட்டுச்சதி பற்றி தீர்ப்பு வழங்கப்படும் என்று நீதிபதி குன்ஹா தெரிவித்திருந்தார். தீர்ப்பு அளித்த நீதிபதி டி.குன்ஹா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய மூவருக்கும் தலா 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிப்பதாகவும் அறிவித்தார். மேலும், சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகிய மூவருக்கும் தலா 10 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

நீதிபதி குன்ஹா கூட்டுச்சதியில் ஈடுபட்டதற்காக சசிகலா, இளவரசி சுதாகரனுக்கு 120 பிரிவின் கீழ் 6 மாதம் சிறைதண்டனையுடன் ரூ.10 ஆயிரம் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். கூட்டுச்சதி குற்றத்தில் ஜெயலலிதாவிற்கு தண்டனை விதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டு சிறைத் தண்டனையுடன் ரூ100 கோடி அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதால் 2வது முறையாக அவரது முதல்வர் பதவி பறிபோய்விட்டது. தமிழகத்தின் புதிய முதல்வராக 2வது முறையாக நிதி அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். சென்னையில் செப்ரெம்பர் 28, 2014 நடைபெற்ற அதிமுக எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் முதல்வராக ஓ.பன்னீர்செல்வம் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவரே அதிமுகவின் சட்டசபை குழு தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான அதிமுக எம்.எல்.ஏக்கள் குழு ஆளுநர் ரோசைய்யாவை சந்தித்து புதிய முதல்வர் தேர்வுக்கான கடிதத்தைக் கொடுத்தது. இதனைத் தொடர்ந்து ஓ.பன்னீர்செல்வம் தமிழகத்தின் புதிய முதல்வராக செப்ரெம்பர் 29, 2014 பதவியேற்றார். கடந்த 2001-2002ஆம் ஆண்டு காலத்தில் இடைக்கால முதல்வராக பதவி வகித்தவர் ஓ.பன்னீர்செல்வம். 13 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் முதல்வராக ஓ. பன்னீர்செல்வம் பதவி ஏற்றுள்ளார்.


AERO COURIER
Fast & Secure World Wide Service
உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது.....
கொழும்பு-திருகோணமலை-மட்டக்களப்பு-மன்னார்-வவுனியா
கிளிநொச்சி-யாழ்ப்பாணம் கண்டி மற்றும் இந்தியா-ஐரோப்பிய
நாடுகள் அனைத்து இடங்களுக்கும் உங்கள் பொதிகளை
பாதுகாப்பாக அனுப்ப வேண்டுமா? எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!
Tel: 416.292.0444
5635 Finch Ave East Unit 2&3
Toronto On.M1B 5K9

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

உங்கள் மாதாந்த மோட்கேஜ் கொடுப்பனவுடன் credit card, car loan, personal loan, line of credit மற்றும் ஏனைய அதிகளவு வட்டி செலுத்தும் கடன்களை ஒன்று படுத்தி எவ்வாறு உங்களது மாதாந்த கடன் சுமையை குறைப்பது???

| Current Loan | Current Balance | Current Payment | New Loan | New Balance | New Payment |
|---|---|---|---|---|---|
| Mortgage 5 % | 500,000.00 | 2,668.45 | Mortgage @ 2.89% | 548,000.00 | 2,070.26 |
| Car Loan | 17,000.00 | 315.00 | Car Loan | Paid | Paid |
| Credit Card balance | 25,000.00 | 750.00 | Credit Card balance | Paid | Paid |
| Penalty ( Assume) | 6,000.00 | - | Penalty | Paid | Paid |
| Current Total | 548,000.00 | 3,733.45 | New Total | 548,000.00 | 2,070.26 |

உங்களின் மாதாந்த சேமிப்பு

## $ 1,663.19




மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

**"மோட்கேஜ் கிளினிக்"**

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for appointment)

**வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00**

5 Yrs Fixed Rate : 2.79 % *OAC
5 Yrs Variable : Prime - .70% (2.3 %)

உங்கள் வீடு விற்பனைக் கொமிசனை நீங்களே தீர்மானியுங்கள் எமது மிகக் குறைந்த விற்பனைக் கொமிசன் $1000* மட்டுமே!!!

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate Office :
2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*
Corporate Office :
112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC
Office Phone : 416-391-3232



எமது முகவரி

**1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9**
(Markham & HWY 401)



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

# தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை குறித்த முயற்சிகள் தொடர வேண்டும்!

இலங்கை அரசாங்கத்தால் தமிழ் மக்கள் தொடர்பில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகள் நிறையவே இருக்கின்றன. அவற்றில் சில பிரச்சினைகள் தீர்வு காணப்பட முடியாதவை. சில பிரச்சினைகள் தீர்வு காண விரும்பாதவை. தீர்வு காண முடியாதவை என்று குறிப்பிடக்கூடிய ஒரு விடயம் காணாமல் போனவர்களை கண்டுபிடித்துக் கொடுப்பது. காணாமல் போனவர்கள் பலர் உயிருடன் இல்லை. அவர்கள் நிரந்தரமாகவே காணாமலாக்கப் பட்டு விட்டார்கள். இதனை பகிரங்கமாக வெளிப்படுத்தும் நிலையில் அரசாங்கம் இல்லை. எப்படி அவர்கள் காணாமலாக்கப் பட்டார்கள் என்பதை விசாரித்து சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை தண்டிக்கும் நிலையிலும் அரசாங்கம். இல்லை. ஆனால், ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழு தொடர்ந்து பதிவுகளையும் விசாரணை களையும் மேற்கொண்டு வருகின்றது.

இந்த பத்தியை எழுதிக்கொண்டிருக்கும் வேளையிலும் கிளிநொச்சியில் காணாமல் போனோர் தொடர்பாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனால், இந்த விசாரணைகள் மூலம் காணாமல் போனோரின் உறவினர்களுக்கு ஒரு முடிவு அறிவிக்கப்படுமா என்பது கேள்விக்குறியே. அடுத்தது, தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அரசி யல் தீர்வு. இதனை அரசாங்கம் வழங்கப் போதில்லை. அவ்வாறானதொரு நிகழ்ச்சி நிரல் அரசிடம் இல்லை. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவது கூட அரசினால் விரும்பப்படாத விடயமே. ஆனால், வாயளவில், தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை வழங்கத் தயாராக இருப்பதாக அரசாங்கம் தெரிவித்து வருகின்றது. சர்வதேச நாடுகளிடமும் குறிப்பாக அயல் நாடான இந்தியாவிடமும் அரசாங்கம் இதனை தொடர்ந்து கூறி வருகின்றது.

இலங்கையின் ஜனாதிபதி அண்மையில் இந்திய ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் தாம் 13 ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த தயார் என்று கூறியிருந்தார். பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனையவற்றை வழங்குவதில் பிரச்சினை இல்லை எனவும் அவர் தெரிவித்திருந்தார். ஆனால், 13 ஆம் திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தப்படக் கூடாது என்றும், பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது என்றும் பல்வேறு குரல்கள் அரசதரப்பிலிருந்து ஒலித்துக் கொண்டிருக்கின்றன.



இவை ஒரு புறமிருக்க, அரசாங்கம் மிக இலகுவாக தீர்த்து வைக்கக் கூடிய பிரச்சினை ஒன்றுள்ளது. ஒரே நாளில் கூட இதற்கான அறிவிப்பினை விடுத்து தமிழ் மக்களிடம் ஒரு நல்லெண்ணத்தை வெளிப் படுத்த முடியும். அது மட்டுமல்லாமல் இன்று மனிதஉரிமைகள் தொடர்பில் அரசிற்கு ஏற்பட்டிருக்கும் சிக்கல்களிலிருந்தும் ஒரு தளர்வினை ஏற்படுத்திக்கொள்ள முடியும். அது - சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுப்பதுதான். யுத்தம் முடிவடைந்து ஐந்தாண்டுகள் கழிந்து விட்ட நிலையில் கூட இக்கைதிகள் விடுதலை குறித்து எவ்வித கவனமும் கொள்ளப்படாம லுள்ளது. சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்களை புனர்வாழ்விற்குட்படுத்தி விடுதலை செய்தமை, பொதுமக்களை மீள்குடியேற்றியமை, தமிழ் பிரதேசங்களில் சில அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளமை போன்ற செயற்பாடுகள் நடை-பெற்றுத்தான் உள்ளன. இவற்றை முற்று முழுதாக மறுப்பதற்கில்லை. ஆனால், நீண்ட காலமாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதை ஏனோ அரசாங்கம் தவிர்த்து வருகின்றது. ஆயுதம் ஏந்திப் போராடிய விடுதலைப்புலி உறுப்பினர்களை விடுவிக்க முடிந்திருக்கும் நிலையில் ஏன் இந்த தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாது என்பது அனைவர் மனங்களிலும் எழுகின்ற நியாயமான கேள்வியே.

சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் பலர் காணாமலாக்கப்பட்டிருக்கின்ற நிலை யில் ஏனையவர்களை விடுவித்து ஒரு பரிகாரம் தேடும் வகையிலான நடவடிக்கை யினை அரசாங்கம் செய்திருக்கிறதென்றால் அதேபோன்று பல வருடங்களாக எவ்வித விசாரணைகளும் இன்றி வாடும் இந்த தமிழ் சிறைக்கைதிகளையும் விடுதலை செய்ய லாம். விடுதலைப்புலிகளுக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டிலேயே இவ்வாறானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். புலிகளையே விடுதலை செய்து அவர்களை சமூகத்துடன் இணைத்துள்ளோம் என்று கூறும் அரசிற்கு இக்கைதிகளை விடுப்பது இயலாத காரியமில்லை.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த சட்ட மாஅதிபர் பாலித பெர்ணான்டோவிடம் இந்த கைதிகள் தொடர்பில் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. சட்ட மா அதிபர் யாழ். நீதிமன்றில் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணி-களை சந்தித்து கலந்துரையாடிய போது, சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதி-களை விடுதலை செய்வதற்கான நடவடிக் கையினை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபரிடம் சட்டத்தரணி முடியப்பு ரெமிடியஸ் கோரிக்கையொன்றை விடுத்துள்ளார்.

இலங்கையில் ஆயுதக் கிளர்ச்சி ஒன்றை நடத்திய ஜே.வி.பி எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியை சேர்ந்தவர்கள் 1971 ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டனர். 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசியல் கைதிகள் சிலர் விடுதலை செய்யப்பட்டனர். 1989 ஆம் ஆண்டு மீண்டும் ஜே.வி.பியினர் விடுதலை செய்யப்பட்டனர். 2002 ஆம் ஆண்டு 800 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

அத்துடன், 2013 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் மகளிர் படையணி தலைவி தமிழினி விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவ்வாறானவர்கள் விடுதலை செய்யப் பட்டுள்ள நிலையில் விடுதலைப் புலிகளுக்கு உதவியவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களும் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சம்பளம் வாங்கி வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களும் இன்னும் சிறைகளில் வாடுகின்றார்கள் அவர்களை ஏன் விடுதலை செய்யக்கூடாது என சட்ட மாஅதிபரிடம் எடுத்துரைக்கப்பட்டது. இவற்றை உள் வாங்கிக் கொண்ட சட்ட மாஅதிபர் இது குறித்து தான் முயற்சி எடுப்பதாக தெரிவித் துள்ளார். இந்த அரசியல் கைதிகளை பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வதற்கான நடவடிக்கை தொடர்பில் கொழும்பு உயர் மட்டங்களுடன் கலந்துரையாடிய பின்னர் முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென சட்ட மாஅதிபர் பாலித பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

சில கைதிகள் 18, 20 ஆண்டுகளாகக் கூட சிறைகளிலுள்ளனர். இவர்களில் சில பெண்களும் அடங்குகின்றனர். கடந்த காலங்களில் சிறைக்குள் பல்வேறு போராட்டங்களை அவர்கள் மேற்கொண்டுள்ள னர். அவர்களின் உறவினர்களும் போராட்டங் களை நடத்தியுள்ளனர். 'விசாரணை அல்லது விடுதலை' என்ற நியாயமான கோரிக்கை யினை முன்வைத்து அவர்கள் போராட்டங் களை நடத்தினர். ஆனால் எதுவித பலனும் கிட்டவில்லை. தமிழ் அரசியல்வாதிகளும் இது குறித்து பல்வேறு பேச்சுவார்த்தைகளை அரசுடன் நடத்திவிட்டு பலனேதும் கிட்டாத நிலையில் அவ்விடயத்தை இன்று கைவிட்டு விட்டதாகவே தோன்றுகின்றது. இந்நிலை யில், மீண்டும் இந்த விடயம் சட்ட மா அதிபரிடம் எடுத்துரைக்கப்பட்டுள்ளதை யடுத்து கவனத்தைப் ஈர்த்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்த விடயத்தை இடைநடுவில் சோர விடாது, தொடர்ந்து அதற்கு முனைப்புக் காட்ட வேண்டியது தமிழர் தரப்பு அரசியல் வாதிகளின் அவசியமான, மனிதாபிமான பணி என்பதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.

**- ஆதித்தன் -**

விளம்பரம் VLAMBARAM™

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜயபாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** Canyon Press Inc.

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளி யாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர் கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமை யாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# GTA இல் ஆதன மாற்றம் (2004 இலிருந்து 2014)

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 424**

மாற்றங்கள் நொடிக்கு நொடி மாறிக் கொண்டே இருக்கின்றது. இது மாறாதது. மக்கள் சனத்தொகை இதற்கு விதிவிலக் கல்ல. பணம் படைத்தவர்கள் மிகப் பெரிய பணக்காரர்களாக மாறும்போது ஏழைகள் மிக ஏழையாக மாறிக் கொண்டு வருகின்றார்கள். நடுத்தர குடும்பம் என்றது மெல்ல மெல்ல மாறுவதனைக் காணக் கூடியதாக உள்ளது. பணம் படைத்தவர்கள் தமது பணத்தின் ஒரு பகுதியை பாதுகாப்பான இடத்தில் வைப்பதற்கே விரும்புவார்கள். இவ்வாறான நாடுகளில் கனடாவும் ஒன்றாகும் என்பது உலகறிந்த உண்மை.

முக்கியமாக ஆதனத்தில் முதலீடு செய்வதனையே இவர்கள் விரும்புவார்கள். இதன் ஒரு இடமாக ரொறொன்ரோவும் இடம்பெறுகின்றது. கடந்த 10 வருடங்களாக, ரொறொன்ரோ பெரும்பாகத்தில் சனத் தொகை 1 மில்லியனால் (10 இலட்சம்) அதிகரித்துள்ளது. இதனைவிட கடந்த தசாப்தத்தில் வேறு சிலமாற்றங்களும் ஆதன வியாபாரத்தில நிகழ்ந்துள்ளன.

இவற்றை பற்றி அறிவதும் நல்லதாகலாம்.
1. சனத்தொகை அதிகரிப்பு - 1 மில்லியன்
2. ஒன்ராரியோ அரசினால் (மாகாண அரசு) நிலம் பாவிப்பது சம்பந்தமான (Land use policy) கொள்கை கொண்டு வரப்பட்டது.



இதனைத் தொடர்ந்து 2005/2006 ஆம் ஆண்டுகளில் Green Belt Act மற்றும் Place to Grow Legislation அறிமுகப்படுத்தப் பட்டது. இதன் தொடர்ச்சியாக ஒன்ராரியோ வின் சில பகுதிகளில் நிர்மாணம் செய்வது முற்றாக தடுக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி யாக நிலத்துடன் சேர்ந்த வீடுகள் கட்டுவதற்கான நிலத்தின் அளவு மட்டுப் படுத்தப்பட்டு, அடுக்குமாடி மனைகள்/ கட்டிடத்தொகுதி நிர்மாணம் செய்ய வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டது.

3. 2008/2009 இல் ஏற்பட்ட நிதி நெருக்கடி, உலகளாவிய பண நெருக்கடி போன்றவற்றை அன்றைய கனடிய மத்திய நிதி அமைச்சர் திரு. ஜிம் பிளெஹெட்டி மற்றும் கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் திரு. மார்க் கார்னி இவர்களால் வெற்றிகரமாக கையாளப்பட்டது. உலகில் பல நாடுகளில் நிதி நெருக்கடிகள், ஆதன விழுக்காடுகள் ஏற்பட்ட போதிலும் கனடாவில் குறிப்பாக ரொறொன்ரோவில் இதன் பாதிப்பு இல்லை என்று கூறலாம்.

4. Land use policy இன் தொடர்ச்சியால் போக்குவரத்தில் நெருக்கடி ஏற்படத் தொடங்கியது. இதன் நிலைமை இன்னும் தொடர்கின்றது. அதாவது அதிக மக்கள் அடுக்குமாடி மனைகளில் வாழவேண்டிய சந்தர்ப்பங்களால் நகரத்தை நோக்கிய தொழில்களே அதிகரிக்கின்றது. அல்லது GTA இன் பகுதிகளில் மக்கள் வாழ்கின்றார் கள். இதனால் நெடுந்தெருக்கள், தெருக் கள் வாகனம் ஓட்டுவதற்கு நெருக் கடிக்குள் உந்தப்படுகின்றது. இதனால் போக்குவரத்து இடையூறு (Gridlock) ஏற்படுகின்றது. சென்று அடையவேண்டிய இடங்களிற்கு அதிக நேரம் வீணாக்கப்படுகின்றது.

இதனால் ரொறொன்ரோ பகுதியில் வாடகைக்கு எடுப்பதில் நெருக்கடி நேர்ந்துள்ளது. (Vacancy rate 2%) புதிய வகை முறையில் மக்களை வெளியே கொண்டுவரக்கூடிய போக்குவரத்து முறை தேவைப்படுகின்றது. இதற்கு நிலத்தின் கீழான ரயில் சேவை (Subway system) தேவைப்படுகின்றது. இந்த போக்குவரத்து நெருக்கடி எப்பொழுது நீக்கப்படும்? அதுவரை இவ்வாறான நெருக்கடி நிலமை தவிர்க்க முடியாமல் அல்லது அதிகரித்தே செல்லும்.

இதன் தொடர்ச்சியாக கடந்த 10 வருடங்களில் நிலத்துடன் சேர்ந்த வீடுகளின் நிலையிலிருந்து அடுக்குமாடி மனைகளில் வாழ வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக 2004 இல் நிலத்துடன் சேர்ந்த வீடுகளின் விற்பனையுடன்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்


## HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



**Raja Mahendran,** P.Eng.
Broker / Owner

5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

### LAND FOR SALE WITH BUNGALOW HOUSE

- 2 Houses can be built severence available.
- Ready to built.
- Scarborough

### HOUSE FOR SALE

**MARKHAM & STEELES**

3500 Sf. Ravine Lot. Walk-out bsmt. (Partially finished). Fully hardwood floor. 4 Washrooms. 6 Appliances. Close to TTC, school.
Asking price $899,900

### CONDO FOR RENT

**HWY 427 & Dunda**

Brand new TRIDEL Condo. 2 Bedrooms, 2 Washrooms. swmming pool, Rec. room, 24 hrs. security, Vacant
**Asking$1400.00**

### HOUSE FOR SALE

**MIDDLEFIELD & FINCH**

3Bedroom house for sale. Well kept. Move in condition. Finished Brost with 1 bedroom, kitchen. Sep. entrance. North agincourt location. Close to TST, school, HWU, GOAT Square mall. 2 Fridge, 2 stove.............
Asking price $599,000

### BRAND NEW- HOUSE FOR SALE

**KENNEDY & Sheppard**

- 3800 / 4800 Sq.ft
- Starting price 1.3M

### BRAND NEW CONDO FOR SALE

- 1Bedroom condo for sale.
- Close to Rogers Center & CN Tower
- Available January 2018.
- 2 Years rental Guranteed
- Starting $272,000
- ***No interim closing***

# நம்பிக்கையளிக்கும் ஜோன் ரொறி

செப்ரெம்பர் மாதம் வழமைக்கு மாறாக சூரியன் அனல் கக்கத் தொடங்கிய வேளையில் 820 மார்க்கம் வீதியில் மாற்றம் ஒன்றை நீண்ட நாட்களாகத் தேடிக் கொண்டிருக்கும் ரொரன்ரோ மாநகர மக்களின் மக்களவை தலைவர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளரான ஜோன் ரொறி தமிழ் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார்.யார் இந்த ஜோன் ரொறி?

## ஜோன் ஹவார்ட் ரொறி

இளவேனிற் பருவத்து வைகாசி மாதம் 28ந் திகதி 1954ம் ஆண்டு ரொரன்ரோவில ஜோன் ஏ ரொறிக்கும் பார்பரா ஹக்கட் இக்கும் மகனாகப் பிறந்தார். ரொரன்ரோ பல்கலைக்கழக கல்வித் திட்டத்தால் நிர்வகிக்கப்படும் பாடசாலையில் ஆரம்பக்கல்வி (University of Toronto Schools) (தனியார் பாடசாலை) பின்னர் ரொரன்ரோ பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவு பட்டதாரியானார். தொடர்ந்து யோர்க் பல்கலைக்கழகத்தில் பயின்று வழக்கறிஞரானார்.

ரோஜர்ஸ் நிறுவனத்தின் தலைமை அதிகாரி. 1010 வானொலியில் ஒரு ஊடகவியலாளர். முன்னணி நிறுவனங்களில் முகாமைத்துவத்தில் முகவர்-ஆலோசகர். கனடிய புட்போல் அமைப்பின் தலைவர். முன்னாள் ஒன்ராரியோ முதல்வர் பில் டேவிஸ் தலைமை அதிகாரி. முன்னாள் கனடிய பிரதமர் மல்ரோனியின் தலைமைச் செயலாளர் என பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். 2003ல் ரொரன்ரோ மாநகரக முதல்வராக போட்டியிட்டு டேவிட் மில்லரிடம் குறுகிய வாக்கெண்ணிக்கையில் தோல்வி கண்டார். 2004ல் ஒன்ராரியோ கொன்சவேற்றிவ் கட்சித் தலைவராக 2004ல் பொறுப்பேற்றார். 2005ல் ஒன்ராரியோ சட்டமன்ற உறுப்பினர். 2007, 2009 தேர்தல்களில் இவரது தலைமையில் கொன்சவேற்றிவ் கட்சி லிபரல் கட்சியிடம் தோல்வியடைந்தது. இவரது தொகுதியிலும் தோல்வி கண்டார்.

மாநில கொன்சவேற்றிவ் கட்சி தலைமைப் பதவியை இராஜினமா செய்த பின்னர் அரசியலிருந்து ஒதுங்கி ஊடகவியலாளராக கடமையாற்றினார். மீண்டும் இவ்வருடம் பெரும்பான்மை 'பெரும்பான்மை' ஊடகங்களின் ஆசியுடனும் கட்டாயத்துடனும் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளார். ஊடகவியலாளர் சந்திப்பில் முதலில் தமிழ் சமூகம் பற்றிய சில உயர்வான கருத்துக்களுடன் தனது செயல்பாட்டு கொள்கைகளை கூறினார். கனடாவில் உள்ள பெரும்பான்மை 'பெரும்பான்மை' அரசியல்வாதிகள் ஒரு விடயத்தை தவறாக தொடர்ச்சியாக கூறிவருகின்றனர். அதற்கு இவரும் விதிவிலக்கல்ல. 'இலங்கைக்கு வெளியே அதிகளவு தமிழ் மக்கள் கனடாவில் வாழ்கின்றார்கள்' என்பதே அவ்விடயம். இந்தியாவில் சுமார் எட்டு கோடி தமிழர்கள் வாழ்கின்றார்கள் என்பதனை இவர்கள் ஏன் கவனத்திற் கொள்ளவில்லை? ஸ்காபரோவில் தமிழ் மக்களுக்கு ஒரு சமூக நிலையம்



- வினோதன் -

ஒன்றை அமைத்துக் கொடுப்பேன் என்ற வாக்குறுதியையும் வழங்கினார். கேள்வி நேரத்தின் போது இவர் மீது அதிகமாக கேட்கப்பட்ட கேள்வி போக்குவரத்து பற்றியதாக இருந்தது. ஸ்மார்ட் ரக் என்பதே இவரது திட்டம். ரொரன்ரோ விமான நிலையத்தில் இருந்து யூனியன்வில் (மார்க்கம்) வரையிலான கோ புகையிரதம் தற்சமயம் அதிகாலையிலும் மாலையிலும் வேலை நேரங்களில் ஓடுகின்றது. இதனை லண்டன் - இங்கிலாந்தில் உள்ள சேபர்ஸ் ரெயில் பாதைபோல் மாற்றினால் ஒவ்வொரு 15 நிமிடத்துக்கும் ரெயில் பயணிக்கும். இதனால் 416-905 பிரயாணிகள் பயனடைவார்கள். டொன்வலி விரைவுப் பாதை, கார்டினர் விரைவுப் பாதையில் அதிகளவு நெரிசல் இருக்காது என்பது இவரது போக்குவரத்து திட்டத்தில் முக்கியமானது. ஸ்காபரோ சுரங்கப் பாதை ரெயில் விஸ்தரிப்பும் இவரது முக்கிய திட்டங்களில் ஒன்று. இவற்றிக்கான பணம் எங்கிருந்து பெறப்படும் என்பதற்கும் இவர் பதிலளித்தார். ரிப் எனப்படும் TAX INCREMENT FINANCING (TIF) மற்றும் மத்திய மாநில அரசுகள் ஒவ்வொன்றும் மூன்றில் ஒரு பகுதி செலவை தங்களது பங்காக கொடுக்க வேண்டும் என்பது இவரது கணிப்பு.

பிரதான வீதிகளில் வாகனங்கள் செல்வதற்கு கட்டணம் அறவிடப்படுமா? என்ற கேள்விக்கு கடுமையாக மறுத்தார். மக்கள் ஏற்கனவே போக்குவரத்துக்கான வரியைக் கட்டி விட்டார்கள். அடுத்து கட்டணம் அறவிட்டால் வாகனங்களில் செல்வோர் மக்கள் அதிகம் வாழும் பகுதியினூடாக பயணிப்பார்கள். இது ஆபத்தானது. மூன்றாவதாக 416ல் வாழும் மக்கள் 905 பகுதிக்கு வேலைக்குச் செல்கின்றார்கள். அதேபோல் அங்கிருப்பவர்கள் இங்கு வருகின்றார்கள். இந்த சமநிலை உடைபடும் என தெரிவித்தார். அடுத்து முக்கியமாக ரொரன்ரோ மாநகரில் 20 வீதமான இளவயதினர் வேலையற்று உள்ளனர். இந்நிலையை மாற்ற தன்னாலான முயற்சிகளை மேற்கொள்வேன் எனத் தெரிவித்தார். மற்றும் புதிய வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோருக்கு புதிய வீடமைப்புத் திட்டங்களை அமைத்துக் கொடுப்பேன் எனவும் தெரிவித்தார் இலங்கை வட-கிழக்கு அரசியல் தலைவர்களுடன் அதிகளவு தொடர்பை ஏற்படுத்துவேன் எனவும் அவர்களை இங்கு அழைத்து இரு பகுதிகளுக்கும் நன்மை பயக்கக் கூடிய விடயங்களை நடைமுறைப்படுத்துவேன் என மேலும் தெரிவித்தார். இது தேர்தல் காலத்து வாக்குறுதியாக இருந்தாலும் இலங்கை கனடிய அரசுகள் எச்சரித்தபோதும் அதனையும் மீறி வட-கிழக்கு பயணத்தை மேற்கொண்டவர் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

மாநகர ஆட்சியாளர்கள் ஒரு சில விடயங்களையே நடைமுறைப்படுத்தலாம். காணி, வீட்டு வரி நிர்வாகம், நகர எல்லைக்குட்பட்ட போக்குவரத்து, புதிய வீடமைப்புத் திட்டங்களை நிர்வகித்தல், பொலிஸ் நிர்வாகம் போன்றவை இவற்றுள் முக்கியமானவை. பெரும்பாலான சமூகத் திட்டங்கள் குறிப்பாக முதியோர், இளையோர் நலத் திட்டங்கள் மாநில அரசின் கீழ் உள்ளன. இதனையும் நாங்கள் கருத்திற் கொள்ளவேண்டும். ரொரன்ரோ மாநகர மக்கள் அதிக நம்பிக்கை இவருள் வைத்திருப்பதாக கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. ஊடகவியலாளர் சந்திப்பில் இவர் தெரிவித்த கருத்துக்கள் இதனை உறுதிப்படுத்தின. அடுத்த இதழில் ஒலிவியா சோ, டக் போர்ட் முன்வைக்கும் கொள்கைத் திட்டங்களைப் பார்ப்போம்.

# தமிழகத்தின் 13ஆவர் முதல்வர்

1969ம் ஆண்டு தமிழ்நாடு என்று சென்னை மாகாணத்தின் பெயர் மாற்றப்பட்டது. அது முதல் இதுவரை தமிழகத்தில் 12 முதல்வர்கள் இருந்துள்ளனர்.

திமுக தலைவர் கருணாநிதிதான் தமிழகத்தின் முதல்வராக அதிக முறை இருந்தவர். அவர் இதுவரை 5 முறை முதல்வராக இருந்துள்ளார். அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதா, இதுவரை 3 முறை முதல்வராக இருந்துள்ளார். கருணாநிதிக்கு அடுத்த இடத்தில் அவர் இருக்கிறார்.

அதிமுகவின் நிறுவனரான எம்.ஜி.ஆர். 2 முறை முதல்வராக இருந்துள்ளார். வி.என். ஜானகி 23 நாட்கள் மட்டும் முதல்வராக இருந்துள்ளார். தனது கணவர் எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பின்னர் இவரை அதிமுக ஜானகி அணியினர் முதல்வர் பதவியில் அமர்த்தினர். அதிமுகவின் ஓ.பன்னீர் செல்வம் 2வது முறையாக முதல்வராகியுள்ளார். தமிழ்நாட்டின் 13 வது முதல்வராக ஓ.பன்னீர் செல்வம் பதவியேற்றார்.

1951ம் ஆண்டு பிறந்த ஓட்டக்காரத் தேவர் பன்னீர் செல்வம் என்று அழைக்கப்படும் ஓ.பன்னீர் செல்வம், ஜெயலலிதாவின் முழுமையான விசுவாசி ஆவார். தற்போது நிதியமைச்சராக, பொதுப்பணித்துறை அமைச்சராக உள்ள பன்னீர் செல்வம், முன்பு வருவாய்த்துறை உள்ளிட்ட பல முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார். விவசாயம், தேனீகடை என்று வேறு சில முகங்களும் கொண்ட பன்னீர் செல்வம், பணிவுக்கும் பெயர் போனவர். ஜெயலலிதா விடம் மட்டுமல்லாமல், தான் பணியாற்றும் துறைகளிலும் கூட அதிகாரிகளிடம் அதிர்ந்து பேசாத பண்பாளர் என்ற பெயரைப் பெற்றவர். அதிகாரிகளிடம் மரியாதை யாகவும் நடந்து கொள்வதால் அதிகாரிகள் மட்டத்திலும் பன்னீர் செல்வத்துக்கு நல்ல பெயர் உள்ளது. 1996ம் ஆண்டு, அதாவது ஜெய லலிதா மீதான சொத்துக் குவிப்பு புகார் வந்த போதும், வழக்கு வந்த போதும் பெரிய குளம் நகராட்சியின் தலைவராக இருந்தார் பன்னீர் செல்வம். பின்னர் 2001 தேர்தலில் பெரியகுளம் தொகுதியில் போட்டியிட்டு வென்றார். பொதுப் பணித்துறை அமைச்சரா னார். 2001ம் ஆண்டு இவர் முதல்வர் பதவி யில் முதல் முறையாக அமர்ந்தார். 2006ம் ஆண்டு அதிமுக ஆட்சியை இழந்தபோது ஓ.பன்னீர் செல்வம் சட்டசபையில் எதிர்க் கட்சித் தலைவராக பணியாற்றினர்.




**BANU BEAUTY CREATION**



For all your bridal makeup, other occasions make up, Upto. Saree pleating, Ironing, Much more with negotiable price.

***(With Certified Licence)***

***Contact: 416.885.0992***


Brock Rd/ Dersan St.
$514,900
3 Bedrooms, 3 W Rooms
Gorgeous Home With 9 Foot Ceilings
On The Main Flr Open Concept Living Space
10th Line/Main St
$559,800
4 Bedrooms, 4 W Rooms
Great Rm W/Gas Fireplace.
Dir Access To 2 Car Grge.
Thickson & Carnwith
$599,900
5 Bedrooms, 4 W Rooms
Rich Hardwood Stairs,Fireplace,
Cathedral Ceiling In Living Rm,
10th Line & Hoover Park
$609,900
4 Bedrooms, 3 W Rooms
Glass/Stone Mosaic Backsplash,
Stainless Steel Appliances
Williamson & Westney
$649,900
4 Bedrooms, 3 W Rooms
9Ft Ceilings,Upgraded Kitchen
Cabinets, Boasts Dark Hdwood Floor
Hwy 7/Concession 4
$3,250,000
4+4 Bedrooms, 9 W Rooms
An Unbelievably Serene Setting
Nestled On A Quiet Court Location
Bellamy/Lawrence
$439,000
3+1 Bedrooms, 2 W Rooms
Fully Renovated Home Featuring
Modern Open Concept Kitchen
Brimley/Denison
$539,000
3+1 Bedrooms, 4 W Rooms
Extra Large Main Floor Family Room.
Updated Kitchen, Furnace, A/C
Mccowan & Highglen
$589,000
3 Bedrooms, 3 W Rooms
Open Concept Kitchen, Granite
Countertop & Under Mount Sink
Finch Ave/Neilson Rd.
$591,000
3 Bedrooms, 3 W Rooms
Paradise Home In Convenient
Location, Backs On Green Ravine
Middlefield/ 14th Ave.
$599,000
3 Bedrooms, 3 W Rooms
Finished Basement, Big Backyard,
New Air Conditioner
Markham Rd/Denison
$699,900
4+2 Bedrooms, 4 W Rooms
Custom Made Kitchen On The
Main Flr.Hardwood Flooring On Main
14th Ave/ Middlefield
$725,000
4 Bedrooms, 4 W Rooms
Walk-Out Basement. Lots
Of Potential, Extra Window Installed
9th Line/Buroak
$799,000
4 Bedrooms, 3 W Rooms
W/O To Interlocked Back Patio
Huge Landscaped Backyard
Mccowan/16th Ave
$829,000
4+1 Bedrooms, 3 W Rooms
Gourmet Kitchen W/Upgraded Cabinet,
Bright & Spacious Bedrooms
Sell your home
FASTER
and more MONEY
#1
RE/MAX
Elaguppillai Srinathan (Mike) B.Sc
Direct 416 - 276-1225
Your home sold in 30 days or we buy it
KZG 647-200-5833
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Office: 905-470-9800
Fax: 905-470-7770
Email: esrinathan@yahoo.com
I can also assist your Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# நகரசபைத் தேர்தல் - தமிழ் வேட்பாளர்கள்

**எதிர்வரும் ஒக்ரோபர் 27, 2014 இல் நடைபெற உள்ள நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் 31 தமிழ் வேட்பாளர்களிடம் பின்வரும் கேள்விகள் விளம்பரம் சார்பில் கேட்கப்பட்டன. அவர்கள் அளித்த பதில்களில் இதுவரை விளம்பரம் பத்திரிகைக்கு கிடைக்கப்பெற்றவை.**

A. **வேட்பாளர் தொகுதியில் உள்ள முக்கிய 3 பிரச்சினைகள்.**

B. **அதற்கு அவர்கள் முன்வைக்கும் தீர்வுகளும், அவர்கள் ஏனைய போட்டியாளர்களிலிருந்து எவ்வாறு வித்தியாசப்படுகிறார்கள் என்றும், மக்கள் ஏன் அவர்களுக்கு வாக்களிக்கவேண்டும் என்றும் கேட்டிருந்தோம்.**



## ராஜ் சுப்பிரமணியம்

மார்க்கம் நகரசபை, 5ஆம் வட்டாரம்

A. 1. மாநகர சபையில் நடக்கும் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை பெரிதாக இல்லை. அவற்றை நீக்கி, மக்களின் கருத்துக்களை அறிந்து, அவர்களின் ஒப்புதலுடனே அனைத்து செயற்பாடுகளையும் நகர்த்துதல். வரி கொடுக்கும் மக்களுடைய கருத்துக்களே எல்லாவற்றுக்கும் மேலானதாக மதிக்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக உள்ளேன்.

2. வாகனப்போக்குவரத்து நெரிசல் கூடிய நிலை. மிகவும் அதிகூடிய நேரத்தை எமது பயணத்தில் செலவிடுகின்றோம். மக்களின் நேரத்தை வீணடிக்கும் தேவையற்ற, பிழைகூடிய திட்டங்ளை கிடப்பில் போடுதலும், நல்ல திட்டங்களை கொண்டு வந்து அவற்றின் மூலம் மக்களின் பயண நேரத்தை குறைத்துக்கொள்ள முயற்சி எடுப்பேன்.

3. பசுமை பாதுகாப்பு - எங்கு பார்த்தாலும் மரங்களும், காடுகளும் அழிக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. ஒரு கட்டுப்பாட்டு நெறிமுறை இன்றி அழிப்பு தொடர்கின்றது. இப்படியான அழிப்புக்களில் ஒரு கட்டுப்பாடு வேண்டும். ஒரு மரத்தை வெட்டுகின்றபோது, அதிகுறைந்தது 5 மரங்களையாவது நட வேண்டும் என்கின்ற ஒரு பொது செயற்திட்டத்தை கொண்டு வருதலும், எங்கள் சூழல் பாதுகாக்கப்பட அனைத்து முயற்சிகளையும் எடுப்பேன்.

B. நான் ஒரு Professional Engineer. கனடாவின் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று, 17 ஆண்டுகளாக இங்கு பல நிறுவனங்களில் வேலைசெய்து வருகின்றேன். 20 வருடங்களுக்கு மேலாக பொதுப்பணியில் ஈடுப்பட்டு பல நல்ல திட்டங்களையும், செயற்பாடுகளையும் வெற்றிகரமாக செய்துள்ளேன். தமிழ் மக்களின் தேவைகள் அவர்களின் அரசியல் எதிர்பார்ப்புகளை உணர்ந்து செயற்படுபவன். எனினும், நாம் எல்லோர் மனங்களையும், இதயங்களையும் வென்று வந்தால் மட்டுமே நம் இலக்கின் முக்கியத்தை அவர்கள் புரிந்து கொள்ள முடியும் எனும் ஆணித்தரமான உண்மையினை உணர்ந்துகொண்டே இந்தப்பயணத்தை தொடர்கின்றேன்.

நாம் எல்லோரும் கனடியர்களாக, இந்த நாட்டின் முன்னேற்றத்துக்கு நாமும் உழைக்கவேண்டும். எனது தலைமைத்துவ மற்றும் ஒழுங்கமைக்கும் திறமைகள் கட்டாயம் இந்த உறுப்பினர் பதவியில் பயன்படுத்த முடியும் என நம்புகின்றேன்.

மேலதிகமாக அறிந்து கொள்ள - www.raj2014.ca



## சோதி செல்லா

மார்க்கம் நகரசபை, 7ஆம் வட்டாரம்

A. 1. சொத்துவரி அதிகரிப்பின்மையை நிலைநிறுத்தல்.
2. வீதிப்போக்குவரத்து வசதிகளை முன்னேற்றுதல், வீதிகளை விஸ்தரித்தல், Elson வீதியால் சென்ற TTC பஸ்சினை மீண்டும் இயங்கச்செய்து போக்குவரத்தினை சுலபமாக்குதல்.
3. மார்க்கம் நகரத்தை மேலும் பசுமையாக்குதல். பாதுகாப்பான முறையில் சமூகங்களின் வாழ்வு தொடர்பாக பல முயற்சிகளை எடுத்தல்.

B. கடந்த 14 வருடங்களாக மார்க்கம் 7ம் வட்டாரத்தில் வசித்துவரும் நான், அங்கு வசித்துவரும் மக்களின் இன்பதுன்பங்களில் கலந்துகொண்டு, மக்களின் அன்றாட வாழ்க்கை முறைகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்ய வேண்டியது வட்டார அங்கத்தவரின் முக்கிய கடமையாகும். நகரசபையின் முக்கிய செயற்பாடுகளில் ஒன்றான மக்களிடமிருந்து பெறப்படுகின்ற வரிப்பணத்தை சரியான முறையில் மக்களுக்கு திருப்பி சேவைசெய்ய பயன்படுத்துதல் ஆகும். ஒரு புதிய குடியிருப்பு ஏற்படும் இடங்களில் சனசமூகநிலையங்களை அமைத்தல், வீதிகளைப் பராமரித்தல், பூங்காக்களை அமைத்தல் என்பன நகரசபையின் கடமைகளாகும்.

என்னை நீங்கள் தேர்தலில் வெற்றிபெறச் செய்தால் மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கிணங்க என்றென்றும் உங்களோடு தோள்கொடுத்து நிற்பேன். வேறு தொகுதிகளிலோ, வேறு பதவிகளுக்கோ பதிவியில் இருக்கும்போது போட்டியிடமாட்டேன் என்பதை உறுதிப்படுத்துகிறேன். எனது கதவுகள் 7ம் வட்டார மக்களுக்கு என்றுமே திறந்திருக்கும். அது மாத்திரமல்லாமல் எமது தமிழ் மக்களின் இன்ப துன்பங்களிலும் ஈழத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களது வாழ்க்கைப் போரட்டத்திலும் எனது பங்களிப்பு முன்பு போலவே எப்பொழுதும் இருக்கும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

மேலதிகமாக அறிந்து கொள்ள - www.sothy4ward7.com



## வாசு முருகேசு

மார்க்கம் நகரசபை, 7ஆம் வட்டாரம்

***A.*** போக்குவரத்து - வீட்டு வரி - பனிகாலத்தில் வீதிகளில் சேரும் பனிப்பொழிவனை அனைத்து வீதிகளிலும் நீக்குதல்.

***B.*** கடந்த 20 வருடங்களாக இத்தொகுதியில் வசிப்பவன் என்பதால் பல்லின மக்களின் சமூகப் பிரச்சினைகளை நன்கு அறிந்தவன். இத்தொகுதியில் நிச்சயம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, அனைவரின் நம்பிக்கைக்கும், எதிர்பார்ப்பிற்கும் ஏற்ற வகையில் எந்தவித சுய லாபமோ, விளம்பரமோ இன்றி சொல்வதைச் செய்வேன் என்பதே எனது லட்சியமாகும். அதிலும் இத்தொகுதி வாழ் அனைத்து பல்லின சமூகமும் பயன் பெறும் விதத்திலும், அதேசமயம் பிற தொகுதிகளுக்கு ஒரு ரோல் மொடலாக மாற்றிட வேண்டும் என்ற தார்மீகப் பொறுப்புடனும் செயலாற்றும் திறனும், அனுபவ ஆற்றலுடன் செயல்படுவேன் என்பதே.

மேலதிகமாக அறிந்து கொள்ள - ***416.560.4444***



## லோகன் கணபதி

மார்க்கம் நகரசபை, 7ஆம் வட்டாரம்

B. 15 இற்கும் மேற்பட்ட பசுந்தரைகள் மார்க்கம் 7ஆம் வட்டாரத்தில் அமைத்ததோடு, மார்க்கம் வாழ் மக்களுக்கான முதல் கிறிக்கெட் மைதானத்தை உருவாக்கியமை. 72 மில்லியன் டொலர் செலவில் பல வசதிகள் கொண்ட சன சமூக நிலையமும் நூலகமும் அமைப்பதற்கான பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மார்க்கம் வரவுசெலவுக் குழுவின் உபதலைவராகச் செயற்பட்டு 2009, 2010, 2012 ஆண்டுகளில் சோலைவரி அதிகரிக்காமல் பார்த்துக்கொண்டதுடன் அதன்பின் ரொரான்ரோ பெரும்பாகத்திலேயே மிகக் குறைந்த அளவு சோலைவரியை அதிகரித்தமை.

மார்க்கம் மாநகரசபையைப் பிரதிநிதித்துவப்படுத்திச் சென்னை, குஜராத், டெல்லி, மும்பை, பூனே, அஹமதாபாத் போன்ற இந்திய நகரங்களுக்குச் சென்ற தூதுக்குழுவில் உறுப்பினராக இணைந்து, புதிய வணிக உறவை வளர்க்கும் முயற்சியில் ஆக்கபூர்வமாக ஈடுபட்டமை. பல ஆண்டுகளாகத் தொடர்ந்த ஸ்ரீல்ஸ் வீதி விரிவாக்க முயற்சியில் வெற்றிபெற்று, இவ்வாண்டு விரிவாக்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றமை. ஏப்ரல் 2009இல் வடஅமெரிக்காவிலேயே முதன்முதலாக சிறுபான்மை இனஒழிப்பு படுகொலையை எதிர்த்து இலங்கை அரசுக்கெதிரான தீர்மானத்தை மார்க்கம் மாநகர சபையில் நிறைவேற்றியமை.

வட அமெரிக்காவில் முதன்முதலாக தமிழர் மரபுரிமை நாளை மார்க்கம் மாநகரசபை வாயிலாகப் பிரகடனம் செய்தமை. முதன் முதலாகக் கனடிய மண்ணில் தமிழ்ப்பெயர் கொண்ட வீதிகளை உருவாக்கியமை. வன்னி வீதி, ட்ரிங்கோ வீதி, யாழ் சீடாவூட் பார்க், என்பன உருவாக்கப்பட்டுள்ளன. வீட்டிற்கொரு காய்கறித் தோட்டம் என்ற வீட்டு விவசாய முறையை 7ம் வட்டாரத்தில் முதன்முதலாக அறிமுகப்படுத்திப் பலரும் பயன்பெற உதவியமை.

## தோமாஸ் டேவிட்

ரொரன்ரோ மாநகரசபை, 38ஆம் வட்டாரம்

A. - 1. சுரங்கப்பாதை போக்குவரத்தும் புதிய வழிகளில் பேரூந்து சேவைகள் ஆரம்பிப்பதும்.
2. புதிய பொழுதுபோக்கு மண்டபம் தேவை.
3. உயர் தர பாடசாலை ஒன்றும் இல்லை. ஆகவே புதிய பாடசாலைகள் இரண்டு ஆரம்பிப்பது அவசியம்.

B. இவற்றை செய்வதற்கு தேவையான பொருளாதார ஆதரவுகளை திரட்டி இவற்றை நிறைவேற்றும் தொழில் நுட்பவியலாளர்களின் உதவியுடன் தீர்மானங்களை நிறைவு செய்து வழிநடத்துவதற்கு முனைப்புடன் செயல்படுவது. இப்போது இருக்கும் வட்டார உறுப்பினர் சமூகப்பிரதிநிதியாகவோ அல்லது சமூக தேவைகளை உணர்பவராகவோ, சமூகத்தில் இணைந்து ஏதாவது திட்டங்களை சமூக வளர்ச்சிக்காக திட்டமிடுபவராக தென்படவில்லை. ஆகவே நான் பல் சமூகத்தோடும் இணைந்து அவர்களின் தேவைகளை உணர்ந்து அவர்களின் ஆலோசனைகளோடு திட்டங்களை நிறைவேற்ற அவர்களின் சமூக வைபவங்களில் பங்கெடுக்க பாடுபடுவேன்.

ஸ்காபறோ புதிய குடிவரவாளர்களின் ஆரம்ப வாழ்வு கட்டி எழுப்பும் தளமாக இருப்பதால் புதிய குடிவரவாளர்களுக்கு எனது திட்டங்கள் மனித நேயத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றன. அத்துடன் பல்லின மக்களின் தேவைகளையும் அவர்களின் ஒருங்கிணைக்கப்பட்ட சமூகவளர்ச்சியையும் கொண்ட திட்டமாக இருப்பதால் மக்கள் எனக்கு வாக்குகள் வழங்கி அவர்களின் வளர்ச்சியை உறுதிசெய்து அவர்களுக்கு எனது பணியை நான் செய்ய அனுமதி வழங்க வேண்டுமென்று நான் இந்தத் தேர்தலில் நிற்கின்றேன்.

மேலதிகமாக அறிந்து கொள்ள - ***votedavidthomas@gmail.com***



## நீதன் சண்

றொரன்ரோ மாநகரசபை, 42ஆம் வட்டாரம்

A. எதிர்நோக்கும் பிரச்சனைகளுள் போக்குவரத்து சேவை, வேலை வாய்ப்பு, பொருளாதார அபிவிருத்தி ஆகிய மூன்றும் முதலிடம் வகிக்கின்றன.

பல ஆண்டுகளாக நாங்கள் போக்குவரத்துச் சேவையிலுள்ள பிரச்சனைகளைப் பற்றிப் பேசிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் ஆக்க பூர்வமாக ஒன்றுமே இதுவரையில் நடைபெறவில்லை. உண்மையில் றொரன்ரோ மாநகர போக்கு வரத்துச் சேவையின் தரம் தாழ்ந்து கொண்டு போகிறது. கவுன்சிலர் ரேமண்ட் சோ ஸ்காபரோவுக்கான நிலக்கீழ் சுரங்க ரயில் பாதை அமைப்பதற்கு எதிராக, கட்டண உயர்வு மற்றும் பேருந்து எண்ணிக்கைக் குறைப்பு ஆகியவற்றிற்கு ஆதரவாக வாக்களித்ததுபோல் நான் வாக்களிக்க மாட்டேன். பேருந்துக் கட்டணம் மக்களுக்கு கட்டுப்படியாக இருப்பதை உறுதிசெய்வதுடன் பேருந்து சேவைகளின் தரம் உயர்வதற்கும் நிலக்கீழ்ச் சுரங்க ரயில் பாதை நிறுவப்படுவதற்கும் நான் பாடுபடுவேன்.

நூற்றுக் கணக்கான வேலை வாய்ப்புக்களை 42ஆம் வட்டாரத்தக்கு நான் கொண்டு வருவேன். கொம்பனிகளுடன் மாநகரசபை கொண்டிருக்கும் பில்லியன் டாலர் பெறுமதியான உள்கட்டமைப்பு ஒப்பந்தங்களிலுள்ள விதிகளைப் பயன்படுத்தி இந்த வேலை வாய்ப்புகளைக் கொண்டுவர என்னால் முடியும். அதற்குரிய திட்டப் பணிகளில் இந்த வட்டாரத்தில் வதியும் மக்களை வேலைக்கு அமர்த்தச் செய்து அதன் பயனை அந்த சமூகமே பெறத்தக்க வகையில் நான் பாடுபடுவேன். ஸ்காபரோ நிலக்கீழ்ச் சுரங்க ரயில் பாதை அமைக்கப்படும் பொழுது ஸ்காபரோ பகுதியில் வதியும் மக்களே அங்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள ஆவன செய்வேன்.

42ஆம் வட்டாரத்தில் பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு வருவதற்கான பலத்த குரலாக நான் விளங்குவேன். 2020ஆம் ஆண்டு வரைக்கும் சிறிய வர்த்தகத் துறைக்கான வரிக்குறைப்பை விரிவு படுத்துவதன் மூலமும், மாநகர சபையிடமிருந்து வர்த்தக நிறுவனங்கள் தமக்குத் தேவைப்படுவற்றைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் நிர்வாக நடைமுறைக் கடுமைகளை இலகுவாக்குவதன் மூலமும் இதை என்னால் செய்யக் கூடியதாக இருக்கும். இதன் மூலம் 42ஆம் வட்டாரத்தை முதலாவது வர்த்தக வளர்ச்சியைப் பெறும் பகுதியாக என்னால் உருவாக்க முடியும்.

B. இங்கே போட்டியிடும் வேட்பாளர்களுள் நான் மட்டுமே இந்தச் சமூகத்துக்காகப் பல்வேறு வகைகளில் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பதிவுகளை வைத்திருக்கின்றவன் என்ற வகையில் நான் மற்றைய வேட்பாளர்களிடமிருந்து வேறுபட்டு இருக்கிறேன். நான் ஒரு ஆசிரியராக, கல்விச்சபை உறுப்பினராக, சமூகச் செயற்பாட்டாளராகப் பணியாற்றியதுடன் நாம் வாழும் நாட்டை ஒரு சிறந்த இடமாக ஆக்க உதவும் வகையில் எண்ணற்ற சமூக நீதி நெறிமுறைக்கான போராட்டங்களில் என்னை ஈடுபடுத்தி இருக்கிறேன். நான் நானாகவே என்னை அரசியலுக்குள் நுழைத்துக் கொள்ளவில்லை. எமது சமூகம் எதிர் நோக்கும் தடைகளை உடைத்தெறியவும், எமது சமூகத்தை வலுவான ஒரு சமூகமாக அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லவுமே அரசியலுக்குள் நுழைந்தேன்.

மேலதிகமாக அறிந்து கொள்ள - ***www.neethanshan.ca***



## ஜீவித்தா டெபோரா லீபமான்

றொரன்ரோ ஆங்கில பாடசாலைசபை, 21ஆம் வட்டாரம் (றொரன்ரோ மாநகரசபை வட்டாரம் 41, 42)

பாடசாலை சபை அறங்காவலர் நிதி துர்ப்பிரயோகம் செய்தல், பிள்ளைகளைப் பாடசாலை அனுப்பி வைக்க பாடசாலை பஸ் வசதிக்குறைவு பற்றிய பெற்றாரின் முறையீடு என்பவற்றுடன் பாடசாலைகள் மூடப்படுதல், நிதிக்குறைவு, கட்டிட திருத்தங்கள் காலதாமதமாகல் என்பன றொரன்ரோ பாடசாலை சபையின் கவலைக்கிடமான நிலையைக் காட்டுகிறது.

A. தொகுதியில் உள்ள மிக முக்கிய 3 பிரச்சினைகள்:

இதில் ஸ்காபரோ ரூஜ் ரிவர் பகுதியின் கரிசனையாக 3 பிரதான விடயங்கள்: அவை நிதிப்பொறுப்பேற்றல், சபையின் கடன், பாடசாலை-பெற்றார் தொடர்பாடலில் உள்ள இடைவெளி என்பனவாகும்.

B. இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான உங்கள் முனைப்புகள்: ஏனைய போட்டியாளர்களில் இருந்து நீங்கள் எவ்வாறு வித்தியாசப்படுகின்றீர்கள்? மக்கள் ஏன் உங்களுக்கு வாக்களிக்க வேண்டும்?

பெற்றாரிடையிலும், பொதுமக்களிடையேயும் பாடசாலை சபையின் கொள்கைகள், பெற்றார் உரிமைகள், பாடசாலைத்திட்டத்தின் செயலாக்கம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். மேலும், தொழில்சார் கல்வி, தொழில்நுட்ப அனுபவம் தரும் கல்வித்திட்டத்தை உள்ளடக்கும் கொள்கை உருவாக்கலில் ஈடுபட முயற்சிப்பேன். மனோதத்துவம், சமூகசேவை, வணிகம் முதலிய துறைகளில் பரீச்சயம் பெற்ற கல்விப் பின்னணியில், சமுதாயம், பெற்றார், பாடசாலைகளுடன் இணைந்து செயலாற்றக்கூடிய திறமையைப் பெற்றுள்ளேன். அத்துடன் நிர்வாக இயக்குனராகவும், முதியோர் சுகாதார சமூக சேவை இயக்குனராகவும், சேக்கம் சமூக சேவை அமைப்பின் தலைவராகவும், மேலும் பல இலாப நோக்கற்ற, அறக்கொடை நிறுவனங்களுடன் இணைந்து சேவையாற்றிய அனுபவம் உண்டு. கோடிக்கணக்கான டொலர் வியாபார நிறுவனத்தின் பணத்தை சீராக நிர்வகித்த அனுபவமுமுண்டு. நான் பதிவுசெய்யப்பட்ட சமூக சேவையாளன், ஒன்ராரியோ சமூக சேவையாளர் கூட்டுறவில் அங்கத்துவம் பெற்றுள்ளேன். சமூக சேவையாளனாகக் கொள்கை உருவாக்கலிலும், நிதிநிர்வாகத்திலும் அனுபவம் பெற்றுள்ளேன். குடிவரவாளர் என்ற முறையிலும், ரூஜ் ரிவர் பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளையின் தாய் என்ற முறையிலும், கடந்த 23 வருடங்களாக இப்பகுதி வதிவாளர் என்ற முறையிலும் எனது கல்வியும் தொழிலனுபவமும், மேம்பட்டு நிற்கிறது.

மேலதிகமாக அறிந்து கொள்ள: http://votejdlieberman.com



## பார்த்தீபன் கந்தவேள்

றொறொன்ரோ ஆங்கிலப் பாடசாலைசபை, 18 வட்டாரம் (றொறொன்ரோ மாநகரசபை வட்டாரம் 34, 35)

A. அ. இந்த வட்டாரத்திலுள்ள 22 பாடசாலைகளுள் 16 பாடசாலைகள் வாசிப்பு, எழுத்து, கணிதம் பாடங்களில் ஏனைய மகாணங்களிலும் பார்க்க குறைந்த தரத்தில் உள்ளார்கள்.
ஆ. பல இலட்சம் டொலர்கள் வீணாகச் செலவிடப்பட்டமை ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது.
இ. கட்டாய பாடமாக இருந்தும் நாளாந்த உடற்பயிற்சி ஒரு பாடமாக பாடசாலைகளில் புகட்டப்படுவதில்லை.

B. இப்பாடங்களைத் திறமையாகப் படிப்பிப்பதற்குரிய மேலதிகப் பயிற்சி ஆசிரியர்களுக்கு அளித்தல்.
• City of Toronto, Cathalic Board ஆகிய சபைகளில் உள்ளது போன்ற பொருளாதார நாணய ஆணைக்குழுவை அமைத்தல். எனது செலவுகளை இணையதளத்தில் பிரசுரித்தல்.
• உடற்பயிற்சியைக் கட்டாய பாடமாக்குவதற்கு அதிபர்களுடைய ஒத்துழைப்பைப் பெற என்னால் இயன்றளவு முயற்சிப்பேன். 25 வருடங்களுக்கு மேலாக இதேதொகுதியில் வாழ்ந்து 2 பாடசாலைகளில் படிப்பித்து, இங்கே வாழும் எல்லா இனத்தவர்ளுடனும் தொடர்பு கொண்டமை.

எனது கல்வித் தராதரம், றொறொன்ரோவிலேயே எனது மாணவர்களை முதல் இடத்துக்கு வரச்செய்தமை, மக்கள் எனக்கு வாக்களிப்பதற்கு போதிய சான்றுகளாகும்.

மேலதிகமாக அறிந்து கொள்ள - ***pkandavel@gmail.com***



## சத்யநிதி சடகோபன்

பீல் பிராந்தியக் ஆங்கில பாடசாலைசபை
மிசிசாகா 6 & 11 வட்டாரம்

A. அ. ஆங்கிலம் கற்பித்தல் தரம் குறைவாகவுள்ளது.
ஆ. மிகவும் குறைவான பண ஒதுக்கீடு
இ. ஆசிரியர்கள் பற்றாக்குறை

B. கல்விச்சபைகளில் நாம் பிரதிநிதித்துவம் செய்தால் எம் பிள்ளைகளையும், எம் சமுதாயத்தையும் நல்ல முறையில் வழிநடத்த நாம் உதவி செய்யலாம். பெற்றோரின் ஈடுபாடு மாணவர்களின் பிரச்சினைகளை அறிந்து அவர்களை நல்ல வளமான உறுதியான எதிர் காலத்திற்குத் தயார்படுத்தலாம். சமபங்கான பண ஒதுக்கீட்டை பெற்றுக்கொடுப்பதன் மூலம் அடிப்படைக் கல்வித் தரத்தை பெற்றுத்தரலாம்.

நான் இலங்கையில் கல்வி பயின்று பின் ஜேர்மனியின் கல்வி முறையைப் பயின்றதோடு இங்கும் படசாலைகளில் வேலை செய்த அனுபவத்தைக் கொண்டிருக்கிறேன். எனது வட்டாரத்தின் பிள்ளைகளின் பிரச்சினைகளை அவர்களுடன் பழகி கதைத்து அறிந்து அதை முடிந்தவனாக தீர்த்து வைப்பேன்.

மேலதிகமாக அறிந்து கொள்ள - ***votesathy@gmail.com***

**வேறு தமிழரும் இவ் ஒன்ராரியோ மாகாண தேர்தலில் உள்ளூராட்சி மன்ற தலைவராகவோ, உள்ளூராட்சிமன்ற உறுப்பினராகவோ அல்லது பாடசாலை சபை உறுப்பினராகவோ வர போட்டியிடக்கூடும். 31 வேட்பாளர்களுடைய தகவலே விளம்பரத்திற்கு இதுவரை கிடைத்துள்ளது.**

# ஜெயலலிதா கைது தமிழக அரசியலின் எதிர்காலம்!



பதினெட்டு ஆண்டுகளாக நடைபெற்று வந்த 'வருமானத்துக்கு அதிகமான சொத்து குவிப்பு' வழக்கில் தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதாவுக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 100 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. உடனே கைது செய்யப்பட்ட ஜெயலலிதா பெங்களூர் பாரப்பன அக்ரஹாரம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். ஊழல் வழக்கில் இவ்வளவு பெரிய தொகை அபராதமாக விதிக்கப்பட்டதும் ஒரு மாநில முதல்வர் பதவியிறக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதும் இந்திய அரசியல் வரலாற்றில் இதுவே முதல்முறை. இந்த வழக்கு கடந்து வந்த பாதையையும் இந்தத் தீர்ப்பு தமிழக அரசியலில் ஏற்படுத்தும் விளைவுகளையும் பார்ப்போம்.

**ஜெயலலிதா மீது போடப்பட்ட வழக்குகள்:**

1991 – 1996 ஆண்டுகளில், முதன்முதலாக ஜெயலலிதா தமிழக முதல்வராக இருந்த போது அவரும் அவரது தோழி சசிகலாவின் உறவினர்களும் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி நிகழ்த்தியவை பிரசித்த மானவை. எல்லாவற்றுக்கும் மகுடம் சூட்டுவது போல அமைந்தது, பல கோடி ரூபாய் செலவில் நடத்தப்பட்ட 'வளர்ப்பு மகன்' சுதாகரனின் ஆடம்பர திருமணம். இதன்விளைவாக, மே 1996இல் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில் மிகப்பெரிய ஜெயலலிதா எதிர்ப்பு அலை எழுந்தது. 'மீண்டும் ஜெயலலிதா தமிழக முதல்வரா னால் தமிழகத்தை ஆண்டவனால்கூட காப்பாற்ற முடியாது' என நடிகர் ரஜினிகாந்த் பேசியது அப்போதுதான். அன்றைய காங்கிரஸ் தலைவர் நரசிம்மராவ், தமிழக காங்கிரஸ் தலைவர்கள் எதிர்ப்பையும் மீறி ஜெயலலிதாவுடன் கூட்டணி அமைக்க, தமிழக காங்கிரஸ் இரண்டாக உடைந்தது. மூப்பனார் தலைமையில் 'தமிழ் மாநில காங்கிரஸ்' உதயமானது. த.ம.கா. – தி.மு.க. கூட்டணி அந்த தேர்தலில் அமோக வெற்றிபெற்றது. ஜெயலலிதா போட்டியிட்ட இரண்டு தொகுதிகளிலும் தோல்வியடைந்தார்.

திமுக ஆட்சிக்கு வந்ததும், முந்தைய அதிமுக ஆட்சியில் பல துறைகளில் நடந்த முறைகேடுகள் சம்பந்தமாக ஜெயலலிதா மற்றும் அதிமுக அமைச்சர்கள், ஐஏஎஸ் அதிகாரிகள் பலர் மீது வழக்குகளை தொடர்ந்தது. மொத்தம் 47 வழக்குகள். இந்த வழக்குகளை விசாரிப்பதற்காக சென்னை 11ஆவது கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றம், 12ஆவது கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றம், 13ஆவது கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றம் என மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் 1997ஆம் ஆண்டு அமைக்கப்பட்டன. இவை சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அமைந்துள்ள சிங்காரவேலர் மாளிகையில் இயங்கின.

அரசுக்கு சொந்தமான டான்சி நிறுவனத்தின் நிலத்தை ஜெயா பப்ளிகேஷன்ஸ் மற்றும் சசி எண்டர்பிரைசஸ் ஆகிய நிறுவனங் களுக்கு குறைந்த விலைக்கு விற்பனை செய்ததாக ஜெயலலிதா, சசிகலா மீது 2 வழக்குகள், கொடைக்கானலில் ப்ளசன்ட் ஸ்டே ஹோட்டலுக்கு கட்டிடம் கட்ட விதிமுறைகளை மீறி அனுமதி அளிக்கப்பட்ட தற்காக ஒரு வழக்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவதற்காக கலர் டி.வி. வாங்கியதில் முறைகேடுகள் நிகழ்ந்த தாக ஒரு வழக்கு, அரசுக்கு சொந்தமான ஸ்பிக் நிறுவன பங்குகளை விற்பனை செய்ததில் முறைகேடு நடந்ததாகக் கூறி ஒரு வழக்கு, தரமற்ற நிலக்கரியை இறக்குமதி செய்ததன் மூலம் மின்சார வாரியத்துக்கு இழப்பு ஏற்படுத்தியதாக ஒரு வழக்கு, லண்டனில் ஓட்டல் வாங்கியதாக ஒரு வழக்கு என தமிழக சிபிசிஐடி போலிசார் பதிவு செய்த வழக்குகள் ஒருபக்கம் இருக்க, ஜெயலலிதாவுக்கு 3 லட்சம் அமெரிக்க டொலருக்கான வரைவோலை பிறந்தநாள் பரிசாக வந்ததாகவும் அதை ஜெயலலிதா தனது வங்கிக் கணக்கில் வரவு வைத்த தாகவும் கூறி, அவர் மீது சிபிஐ ஒரு வழக்கைத் தொடர்ந்தது. இதே காலகட்டத் தில் சில ஆண்டுகளுக்கான வருமான வரி கணக்கை சசி எண்டர்பிரைசஸ் நிறுவனம் தாக்கல் செய்யவில்லை எனக் கூறி அதன் பங்குதாரர் என்ற முறையில் ஜெயலலிதா வுக்கு எதிராக வருமான வரித் துறையினரும் வழக்கு தாக்கல் செய்தனர். 'வருமானத்துக்கு அதிகமான சொத்துக் குவித்த'தாக ஜெயலலிதா மீது ஒரு வழக்கை பதிவு செய்யுமாறு சுப்ரமணியன்சாமி நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தார். நீதிமன்ற உத்தரவின்படி 'சொத்துக் குவிப்பு வழக்கு' மீதான விசாரணை தி.மு.க. அரசின் லஞ்ச ஒழிப்புத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

**வழக்குகளின் தற்போதைய நிலை:**

கலர் டிவி வழக்கிலதான் முதன்முதலில் 1996ஆம் ஆண்டு ஜெயலலிதா கைது செய்யப்பட்டார். ஆனால், பிறகு அந்த வழக்கிலிருந்து சிறப்பு நீதிமன்றமே அவரை விடுதலை செய்து 30.5.2000 அன்று தீர்ப்பளித்தது. அதை எதிர்த்து திமுக அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

**- கிருஸ்ணன் -**

டான்சி நில பேரம் தொடர்பான இரண்டு வழக்குகளில் 9.10.2000 அன்று தீர்ப்பளித்த சென்னை சிறப்பு நீதிமன்றம், ஒரு வழக்கில் ஜெயலலிதாவுக்கு 3 ஆண்டுகளும் மற்றொரு வழக்கில் 2 ஆண்டுகளும் சிறைத் தண்டனை விதித்தது. பின்னர் மேல்முறையீட்டில் இந்தத் தீர்ப்பை ரத்து செய்த சென்னை உயர்நீதிமன்றம், 4.12.2001 அன்று ஜெயலலிதாவை வழக்கிலிருந்து விடுதலை செய்தது. உச்ச நீதிமன்றமும் இதை உறுதி செய்தது.

கொடைக்கானலில் ப்ளசன்ட் ஸ்டே ஹோட்டல் வழக்கில் ஜெயலலிதாவுக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதித்து 2.2.2000 அன்று சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேல்முறையீட்டில் இந்தத் தீர்ப்பை 4.12.2001 அன்று ரத்து செய்த சென்னை உயர் நீதிமன்றம் வழக்கிலிருந்து ஜெயலலிதாவை விடுதலை செய்தது.

ஸ்பிக் நிறுவன பங்குகள் முறைகேடு வழக்கில் 23.1.2004 அன்று சிறப்பு நீதி மன்றமே ஜெயலலிதாவை விடுதலை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்


## AUM WELLNESS CLINIC IN

Healing Massage, Suffering From Pain?

Get Relief From:

| | | |
|---|---|---|
| முதுகுவலி | கழுத்துவலி | தோள்பட்டைவலி |
| முழங்கால் வலிகள் | தீராததலைவலி | நரம்புப்பிடிப்பு |
| நீரிழிவு | தூக்கமின்மை | கொலஸ்ரோல் |
| உடல் எடை குறைத்தல் | இரத்த ஓட்டத்தை | சீராக்குதல் |

**போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்**

Dr. Lata

Based on Appointment



Cell: 416.890.9217 Office: 647.304.6046
5215 Finch Ave. E. #220, Toronto, ON

# GTA இல்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

அடுக்குமாடி மனையின் விற்பனை 2:1 ஆக காணப்பட்டது. இதுவே இன்று (2014இல்) 1:3 ஆக அதிகரித்துள்ளது.

2004 இல் சராசரி வீட்டின் அளவு 2,409 சதுரஅடியாகும். ஒரு சதுரஅடியின் சராசரி



விலை $154 ஆகக் காணப்பட்டது. ஆனால் இன்று சராசரி அடுக்குமாடி மனையில் சராசரி அளவு 806 சதுர அடியாகவும் ஒரு சதுர அடியின் சராசரி விலை $586 ஆகவும் காணப்படுகின்றது.

இதே நிலைமை தொடருமா....?
அடுத்த 10 வருடங்களில் மக்கள் சனத் தொகை மேலும் 1 மில்லியனால் அதிகரிக்குமா? அதிகரித்தால் அடுக்குமாடி மனையின் விலையிலும் அதிகரிப்பு ஏற்படு வதை தவிர்க்க முடியாமல் தான் போகும். அத்துடன் நிலத்துடன் கூடிய வீட்டின் விலை எவ்வாறு இருக்கும் என்பதனை சிந்திக்கவும். நிலத்துடன் கூடிய வீடு, தகுந்த இடத்தில் இருந்தால் அதனை விற்பதனைப் பற்றி இருமுறைக்கு மேலே சிந்திக்கவும்.

### GTA ரொறொன்ரோ பெரும்பாகத்தின் அடுக்குமாடி மனைகள் பற்றிய குறிப்புகள்

1. இன்றைய காலகட்டத்தில் நிர்மாணத்தில் உள்ள கட்டிடத்தொகுதிகள் 240.
2. இந்த ஆண்டு இதுவரை கொண்டு வரப்பட்ட புதிய அடுக்குமாடித் தொகுதி களின் எண்ணிக்கை - 53.

a. ரொறொன்ரோ மத்திய பகுதி - 18
b. ரொறொன்ரோவின் மற்றைய பகுதிகள் (ஸ்காபரோ, எற்றோபிக்கோ, யோர்க், நோத்யோர்க், ஈஸ்றயோர்க்) - 12
c. (905) ஏரியா கோட் பகுதி - 23

**தகவல்**

1. GTA இல் வருடா வருடம் குடியேறுபவர்கள் 100,000 மக்கள்.
2. புதிதாக உருவாக்கப்படும் தொழில் வாய்ப்புகள் 50,000.
3. தேவைப்படும் குடிமனைகளின் எண்ணிக்கை 35,000.

# நவராத்திரி



புரட்டாதி மாதம் வளர்பிறையில்
சுக்கிர பட்சத்தின் முதல் நாள் ஆரம்பமாகி
நவமி வரை வரும் ஒன்பது நாட்களும்
நவராத்திரி பூசைகள் நடைபெறும்

எண்ணத்தின் கருவியாக விளங்கும் சிவனுக்கு
எடுக்கும்
ஒரு இராத்திரி அதுவே சிவராத்திரி
எண்ணத்தின் சக்திக்கு எடுக்கும் ஒன்பது
இராத்திரி அதுவே நவராத்திரி

சிவனில் பாதியாகி சிவசக்தியாக சிம்மத்தில்
வீற்றிருந்து சக்தியை நமக்களிக்கும்
துர்க்கா தேவிக்கு முதல்வரும் மூன்று
நாட்கள் பூசைகளும்

செந்தூரப் பொட்டிட்டு செந்தாமரையில் வீற்றிருந்து
பொன்னும் பொருளும் புகழையும்
வழங்கி அருளும் இலட்சுமிக்கு அடுத்து
மூன்று நாட்கள் பூசையும்

வெள்ளை சேலை உடுத்தி வெண் தாமரையில் வீற்றிருந்து
கல்வியையும் கலைகளையும் நல்கி அருளும்
கலைவாணி சரசுவதி தேவிக்கு இறுதி
மூன்று நாட்கள் பூசையும்

பத்தாம் நாள் வரும் விஜயதசமி அன்று வெற்றிதரும்
நாளாக வித்தியாதாரம்பம் புதிய தொழில் ஆரம்பம்
போன்ற கருமங்கள் யாவையும் வெற்றிதர
வேண்டி வணங்குவதோடு முடிவடையும்

- கவிநாதம் பரத்தாமன் -

விளம்பரம் பத்திரிகையை இணையத்தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com
www.tamilvanakkam.com



# ஜெயலலிதா கைது...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்தது. தரமற்ற நிலக்கரி இறக்குமதி வழக்கிலும் சிறப்பு நீதிமன்றத்தால் ஜெயலலிதா விடுதலை செய்யப்பட்டார். லண்டன் ஓட்டல் வழக்கு, உச்ச நீதிமன்ற அனுமதியுடன் பின்னர் திரும்பப் பெறப்பட்டது.

சிறப்பு நீதிமன்றத்தால் தீர்ப்பு அளிக்கப்பட்டும் உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றத்துக்கு மேல் முறையீட்டுக்குச் சென்றும் என பல வழக்குகள் முடிந்துவிட்டன. சில வழக்குகள் மட்டும் மேல் முறையீட்டில் நிலுவையில் உள்ளன. எனவே 2 சிறப்பு நீதிமன்றங்கள் கலைக்கப்பட்டு தற்போது ஒரு சிறப்பு நீதிமன்றம் மட்டும் சிங்காரவேலர் மாளிகையில் இயங்கி வருகிறது. இந்த நீதிமன்றத்தில் முன்னாள் அமைச்சர்கள் கண்ணப்பன், அரங்கநாயகம் மற்றும் அதிகாரிகள் 3 பேருக்கு எதிரான 5 வழக்குகள் மட்டும் தற்போது நிலுவையில் உள்ளது.

2001ஆம் ஆண்டும் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மீண்டும் ஜெயலலிதா முதல்வரானதும், இப்படி ஒவ்வொரு வழக்காக விடுதலை செய்யப்பட்டு வெளியே வர, 'சொத்து குவிப்பு வழக்கு' தமிழகத்தில் நடந்தால் நேர்மையாக நடைபெறாது என்று திமுக முன்னணி தலைவர்களில் ஒருவரான அன்பழகன் உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தார். அதில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி 'சொத்து குவிப்பு வழக்கு' கர்நாடகா மாநிலத்துக்கு மாற்றப்பட்டது. அந்த வழக்கில்தான் 18 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர இன்னும் இரண்டு வழக்குகள் தற்போதும் உயிரோடு உள்ளன. 3 லட்சம் அமெரிக்க டொலர் வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் 30.9.2011-ல் தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து சிபிஐ தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு உச்ச நீதிமன்றத்தில் இன்னும் நிலுவையில் உள்ளது. வருமான வரி கணக்கு சென்னை எழும்பூரில் உள்ள கூடுதல் பெருநகர குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது.

## ஏன் இந்த அம்மா மட்டும் இப்படி மாட்டிக்கொண்டார்?

இந்தியாவில் ஜெயலலிதா ஒருவர் மட்டும் தானா ஊழல் செய்தவர்? வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளவர்கள் என்று பார்த்தால் கிட்டத்தட்ட அனைத்து அரசியல் வாதிகள், அரசு அதிகாரிகள், அரசியல் இடைத்தரகர்கள், பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள் என்று ஒரு பெரும் கூட்டமே வரிசையில் நிற்கும். அவர்கள் மீதெல்லாம் ஒரு வழக்கும் இல்லை, தண்டனையும் இல்லை. அவர்கள் எல்லாம் வெளியே சுதந்திரமாக உலாவ, இந்தம்மா மட்டும் பாவம், இப்படி மாட்டிக் கொண்டதே என்ற ஒரு அனுதாப அலை தமிழகத்தில் ஜெயலலிதா மீது நிலவுகிறது.



ஆனால், ஜெயலலிதா மட்டும் இப்படி மாட்டிகொள்ள என்ன காரணம் என யோசித்தால், அதற்கும் ஜெயலலிதாவே காரணம் என்றுதான் சொல்ல வேண்டும். தமிழகத்தில் பஞ்சாயத்து தலைவராக இருப்பவர்களே பினாமிகள் பெயரில் சொத்து வாங்கி பாதுகாப்பாக இருக்க ஜெயலலிதா அனைத்து சொத்துக்களையும் தன் பெயரிலேயே வாங்கினார். எனவேதான் ஒரு ரூபாய் சம்பளம் வாங்கியவர் 63 கோடி ரூபாய் சொத்துகள் வாங்கியது எப்படி என்ற கேள்வி சட்டபூர்வமாக எழுந்தது. நல்லம்மா நாயுடு என்ற திறமையான காவல்துறை அதிகாரி கையில் இந்த வழக்கு மாட்ட அவர் எல்லா ஆதாரங்களையும் தோண்டி எடுத்துவிட்டார். அவருக்கு அதிகம் வேலை வைக்காமல் இவர்களே எல்லா சாட்சியங்களையும் விட்டு வைத்திருந்தார்கள் என்றும் சொல்கிறார்கள். காரணம், முழுக்க முழுக்க தவறான ஆலோசனைகளால் அக்கால கட்டத்தில் ஜெயலலிதா வழி நடத்தப்பட்டார் அல்லது அப்படிப்பட்டவர்களை மட்டும்தான் ஜெயலலிதா தன்னைச் சுற்றி வைத்திருந்தார். ஒன்றை ஜெயலலிதா சொல்லும்போது, 'அப்படியே செய்கிறோம் அம்மா' என்று கூறக்கூடிய நபர்களே அவரைச் சுற்றி இருக்க முடியும். 'மேடம், அப்படி செய்ய சட்டத்தில் இடமில்லை, பிறகு பிரச்சினை வரும்' என்று நேர்மையுடன் சுட்டிக்காட்டக்கூடிய உயர் அதிகாரிகளோ அரசியல்வாதிகளோ ஜெயலலிதாவின் சுற்று வட்டத்தில் இல்லை. இதனால், ஜெயலலிதா சொல்வதற்கெல்லாம் ஆமாம் போட்டே பிரச்சினைகளை இடியப்பச் சிக்கலாக்கிய ஆலோசகர்கள்தான் அவருக்கு வாய்த்தார்கள். 'ஜெயலலிதா எந்த நேரத்தில் என்ன முடிவு எடுப்பார், என்ன செய்வார் என எவரும் எதிர்பார்க்க முடியாது. நான் ஒன்று சொன்னால் அதை சீக்கிரம் செய்து முடிக்கும் செயல் வீரர்கள்தான் எனக்கு வேண்டுமே தவிர, நான் சொல்வதை ஏன் செய்ய இயலாது என்று காரணங்களை அடுக்கும் வாய்ச்சொல் வீரர்கள் எனக்கு தேவையில்லை என்று கூறும் இயல்பு கொண்டவர் அவர்' என்கிறார் மறைந்த பத்திரிகையாளர் சோலை. தவறுகள் அதிகமாக இதுவே காரணமாகிவிட்டது. வழக்கை சீக்கிரம் முடிக்காமல் வாய்தா மேல் வாய்தா, தனி கோர்ட்டின் விசாரணையை நிறுத்துமாறு ஐகோர்ட்டிலும் சுப்ரீம் கோர்ட்டிலும் மாற்றி மாற்றி மனுக்கள், தடைகள், விசாரணை, தடை நீக்கம், வக்கீல்கள் மாற்றம் என 18 ஆண்டுகள் இழுத்தடித்து கடைசியில் ஜான் மைக்கேல் டி குன்ஹா என்ற வளைந்துகொடுக்காத ஒரு நீதிபதி கையில்கொண்டு வந்து ஜெயலலிதாவே வழக்கை ஒப்படைத்தார். மத்திய அரசின் உதவிகள் இருந்தும் விடுதலையடைய முடியாது என்ற நிலை.

## மீண்டும் ஓட்டக்காரத் தேவர் பன்னீர்செல்வம்:

டான்சி நில பேரம் தொடர்பான இரண்டு வழக்குகளிலும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்ததால், 2001ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் புவனகிரி, கிருஷ்ணகிரி, ஆண்டிப்பட்டி, புதுக்கோட்டை ஆகிய 4 தொகுதிகளில் ஜெயலலிதா வேட்பு மனு தாக்கல் செய்தும் அவருக்கு தேர்தலில் போட்டியிட தகுதியில்லை என்று கூறி அவரது வேட்பு மனுக்களை தேர்தல் அதிகாரிகள் தள்ளுபடி செய்தனர். இதனால், அவர் தேர்தலில் போட்டியிட முடியவில்லை. எனினும், தேர்தல் முடிவில் அதிமுக பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. அதிமுக சட்டமன்ற கட்சித் தலைவராக ஜெயலலிதா தேர்ந்தெடுக்கப்பட்டார். இதையடுத்து, அப்போது ஆளுநராக இருந்த பாத்திமா பீவி அனுமதியுடன் ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவை 2001ஆம் ஆண்டு மே 14ஆம் தேதி பதவியேற்றது. ஜெயலலிதா பதவியேற்றது செல்லாது என அறிவிக்கக்கோரி உச்சநீதிமன்றத்தில் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களை விசாரித்த உச்சநீதிமன்றம், முதல்வராக ஜெயலலிதா பதவியேற்றது செல்லாது என 21.9.2001 அன்று தீர்ப்பளித்தது. இதையடுத்து, ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவை பதவி விலக நேர்ந்தது. அன்று மாலை நடந்த அதிமுக எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் சட்டமன்ற கட்சித் தலைவராக, அப்போது வருவாய்த் துறை அமைச்சராக இருந்த ஓட்டக்காரத் தேவர் பன்னீர்செல்வம் என்ற ஓ. பன்னீர்செல்வம் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல்வரானார். தற்போது மீண்டும் ஜெயலலிதா பதவி பறிக்கப்பட்ட காரணத்தால் ஓ. பன்னீர்செல்வம் முதல்வராகியுள்ளார்.

## தமிழக அரசியல் எதிர்காலம்:

2001இல் ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான புதிய அமைச்சரவை பதவியேற்ற போது ஜெயலலிதா, 'இது ஒரு தற்காலிக ஏற்பாடுதான். சட்டப் போராட்டத்தில் வெற்றி பெற்று விரைவிலேயே மீண்டும் முதல்வராக பொறுப்பேற்பேன்' என்று கூறினார். அதுபோல் மீண்டு வந்தார், மீண்டும் முதல்வரானார். 'அதுபோல் தற்போதுள்ள நிலையிலிருந்தும் ஜெயலலிதா மீண்டு வருவார், கைது காரணமாக ஏற்பட்டுள்ள அனுதாபம் அவருக்கு கைகொடுக்கும், மீண்டும் முதல்வராவார்' என சில தமிழக அரசியல் நோக்கர்கள் சொல்கிறார்கள்.

பெங்களூர் கோர்ட் தீர்ப்பின் பலன்களை திமுக அறுவடை செய்துவிடக்கூடாது என்ற வேகம் அதிமுகவினரைவிட பிஜேபிகாரர்களிடம் அதிகம் காணப்படுகிறது. அதிமுக, திமுக இரண்டும் அப்புறப்படுத்தப்பட்டால் தமிழகத்தில் பிஜேபி காலூன்ற நல்ல களம் அமையும். எனவே, 2ஜி வழக்கு விசாரணை விரைவுபடுத்தப்பட்டு தீர்ப்பு விரைவில் வெளிவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் சிலர் கணிக்கிறார்கள்.

திராவிட இயக்கங்கள் அழிந்து தமிழகத்தில் பிஜேபி காலூன்ற இந்த தீர்ப்பு ஒரு காரணமாக அமைந்துவிடும் என்பதாலேயே இந்தத் தீர்ப்பு தனக்கு மகிழ்ச்சி தரவில்லை என்கிறார் அரசியல் விமர்சகர் அ. மார்க்ஸ். 'ஜெயலலிதாவை திராவிட இயக்கம் எனச் சொன்னால் அவரே அதிர்ச்சி அடைவார் என்பதெல்லாம் மேலோட்டமாகப் பார்க்கும் போது உண்மைதான். இன்றைய திராவிட இயக்கங்கள் எதுவும் அதன் பொருளில் திராவிட இயக்கங்களாக இல்லை என்பதும் உண்மையே. ஆனால், அ.தி.மு.க.விடம் திராவிட இயக்கக் கூறுகளே இல்லை என்பதை ஏற்க இயலாது. இன்றுவரை தி.மு.க., அ.தி.மு.க. இரண்டுமே இட ஒதுக்கீட்டை விட்டுக் கொடுத்ததில்லை என்பதையும், இங்குள்ள முஸ்லீம் சிறுபான்மையினரது ஓட்டுக்கள் வேண்டவே வேண்டாம் என பா.ஜ.க. போல ஒரு நிலைபாடு எடுக்காமல் இருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அ.தி.மு.க. விடம் பா.ஜ.க. கூறுகள் உள்ளன என்பது உண்மையே. ஆனால், இரண்டும் ஒன்று எனச் சொல்லவே இயலாது. எவ்வளவுதான் சீரழிந்தாலும் ஏதோ ஒரு வகையில் தி.மு.க., அ.தி.மு.க.விடம் திராவிட எச்ச சொச்சங்களும் இருக்கத்தான் செய்கின்றன. ஆக திராவிட இயக்கங்கள் அழிக்கப்படுவதை நோக்கிய செயல்கள் இவை என்றால், அந்த இடத்தை நிரப்பப் போகிறவர்கள் யார்? இடதுசாரிகளாக இருந்தால் நாம் மகிழ்ச்சி அடையலாம். நிச்சயம் அந்தச் சாத்தியம் அவர்களுக்குக் கிடையாது. பயனடையப் போவது மதவாத சக்திகளும் அவற்றிற்குக் காவடி தூக்குபவர்களுந்தான்' என்கிறார் அ. மார்க்ஸ்.

தி.மு.க.வைப் பொறுத்தவரைக்கும் இது ஒரு நல்ல வாய்ப்பு. நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து இடங்களிலும் தோல்வி, தற்போதைய ஜெயலலிதா அரசின் மீது பெரிய அதிருப்தி மக்கள் மத்தியில் உருவான நிலை, எப்படி 2016 சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்வது என குழப்பத்தில் நின்ற தி.மு.கவிடம் ஜெயலலிதாவை எதிர்ப்பதற்கு இறுதியாக எஞ்சியிருந்த ஒரே ஆயுதம் இந்த வழக்கு மட்டும்தான். அதில் தற்போது அவர்கள் எதிர்பார்த்ததைவிட சிறந்த செய்தி கிடைத்திருக்கிறது.

வெல்லப் போவது யார்? மக்களா அரசியல் வாதிகளா, பொறுத்திருந்து பார்ப்போம்.

**LAW OFFICE**

**STEFANO FORTINI**

B.A., LL.B., Barrister & Solicitor

*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*

*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

# ஹரி ஆனந்தசங்கரி அவர்களுடன் ஒரு சந்திப்பு

## கடந்த இதழ் தொடர்ச்சி...

நேர்காணல் - சிவ பஞ்சலிங்கம்

**கனடாவின் மேற்கு கடல் பிரதேசமான பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண துறைமுகத்திற்கு 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ஈழத்தமிழ் அகதிகள் கப்பல்களில் வந்து இறங்கியபோது அவர்களை நாட்டுக்குள் எடுப்பதில் தங்களின் பங்களிப்பு ஏராளமாக இருந்தது என்பதனை செய்திகளில் இருந்து அறிந்து கொண்டோம். அந்த அனுபவங்கள் பற்றி குறிப்பிட முடியுமா?**



வன்னியில் பாரிய வரலாற்று ரீதியான கொடுமைகள் நடந்து தாங்க முடியாத வேதனைகளில் இருந்து ஈழத் தமிழர்கள் யாவரும் மீள முடியாதிருந்த ஒரு காலகட்டம். 2009 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி மாலை நேரம் கனடாவின் பிரபல்யமான ஆங்கில பத்திரிகை 'குளோப் & மெயில்' (Globel & Mail) ஆசிரியபீடத்திலிருந்து கனடிய தமிழர் பேரவையின் மக்கள் தொடர்பு இயக்குனர் திரு. டேவிட் பூபாலபிள்ளை அவர்களின் கைத்தொலைபேசிக்கு அழைப்பு வந்தது. கனடாவின் பசுபிக் கரையோரமாக இலங்கைத்தமிழர்கள் யுத்தகளத்திலிருந்து தப்பி கப்பலில் வந்து இங்கு அகதிகளாக இறங்கப் போகின்றார்கள் எனவும் அவர்கள் பற்றி ஏதாவது தகவல் தெரியுமா எனவும் பல வினாக்களைக் கேட்டிருந்தனர். அவர் உடனே எனக்கு அழைத்து இந்த செய்தியினை தெரிவித்ததும் இது எங்கள் இனத்தைப் பாதிப்பதாக இருந்தபடியால் உடனடியாக இதுபற்றி கனடிய தமிழர் பேரவை நிர்வாகத்துடன் சேர்ந்து ஆலோசித்து விட்டு மறுநாள் இருவரும் காலதாமதமில்லாது விமானம் ஏறி அவசரமாக அங்கு சென்றோம்.

'எம்.வி ஓசன் லேடி' (MV Ocean Lady) என்னும் பொருட்களை ஏற்றும் பழைய கப்பல் ஒன்றில் 76 தமிழர்கள் நீண்ட கடல் பிரயாணத்தினூடாக அகதிகளாக வந்து இறங்கினர். நாம் இருவரும் அங்கு போய் சேர்ந்த நேரம் அவர்கள் யாவரையும் கைது செய்து எங்கே வைத்திருக்கிறார்கள் என்பதனை விசாரித்தபோது அந்த இடத்தில் இருந்து சற்று தொலைவிலுள்ள மேபிள் றிச் இல் உள்ள தடுப்புச்சிறையில் வைத்திருப்பதாக அறிந்து உடனடியாக அங்கு விரைந்தோம்.

கனடாவின் அடிப்படை மனித உரிமை சட்டங்களின் படி (Fundermental Charter Rights) எவரும் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்து தடுப்பு காவலில் வைத்திருக்கும் போது தங்கள் வாக்கு மூலத்தினை வழங்க முன்பு தமக்கு விரும்பிய சட்டத்தரணியுடன் தனியாக பேசி தமக்கு தேவையான ஆலோசனைகளை பெறும் உரிமை உண்டு. அங்கிருந்து அவரவர் உறவினர்கள், நண்பர்களுக்கு தொலைபேசி எடுத்து கதைக்கும் சலுகையும் உண்டு. நான் ஒரு கனடிய சட்டத்தரணி என்றபடியால் என்னை சிறைச்சாலைக்குள் செல்ல அனுமதித்து அவர்களுடன் தனித்தனியாக சந்தித்து கதைக்க அனுமதித்தார்கள். முதலில் எனது செலவில் தொலைபேசி அட்டைகள் நிறைய வாங்கிக் கொண்டுபோய் அவர்களுக்கு கொடுத்து அவர்கள் தங்கள் உறவினர்கள், நண்பர்களுடன் தொடர்புகொண்டு கதைக்கும் வசதிகளை உருவாக்கி கொடுத்தேன். நீண்ட கடல் பிரயாணத்தினூடாக வாடி, வதங்கி ஒழுங்கான உணவுகள், உறக்கமின்றி வந்து சேர்ந்தவர்களை சிறைச்சாலை கம்பிக்குள் நேருக்கு நேரே சந்தித்தபோது எனக்கு வேதனையாக இருந்தது. பத்து வயதில் தாயக மண்ணிலிருந்து கனடாவுக்கு வந்து இவ்வாழ்வில் பழகிப்போன எனக்கு இந்தக் காட்சி ஒரு தாங்கமுடியாத வேதனையாக இருந்தது.

நானும் என்னோடு வந்த திரு. டேவிட் பூபாலபிள்ளையும் சிறைச்சாலைக்கு அருகே ஹொட்டல் ஒன்றில் தங்கியிருந்து கொண்டு அவர்களை மீட்கும் பணியில் துரிதமாக செயல்பட்டோம். காலை சிறைச்சாலைக்குள் சென்றால் இரவு மட்டும் அவர்களுடன் தங்கியிருந்து, தனித்தனியாக கதைத்து எப்படி வாக்கு மூலங்கள் வழங்க வேண்டும், கனடாவில் அகதியாக வந்து இறங்கியவர்களுக்கு உள்ள உரிமைகள் என்ன, சலுகைகள் என்ன போன்ற விடயங்களை கூறி அவர்களின் ஆரம்ப அகதி கோரிக்கையை சமர்ப்பித்து கனடாவினுள் உள்ளே வர அனுமதிக்கும் முதல்கட்ட நிலைமைக்கு தயார் படுத்தினோம். தற்போது கனடாவினுள் சட்டவிரோதமான முறையில் அகதியாக வந்து இறங்குபவர்கள் ஆரம்ப நிலையில் இரு எல்லைகளை கடந்து வர வேண்டும்.

**1. கனடாவினுள் உள்ளே வர அனுமதிக்கும் அகதி கோரிக்கையினை சமர்ப்பிக்க உரித்துடையவரா?**

***(Immigration Admissibility Hearings)***

இந்த ஆரம்பநிலை விசாரணையில் அவர்கள் ஒவ்வொருவரும் பயங்கரவாதத்தில் எந்த நாட்டிலாவது ஈடுபட்டிருந்தால் அல்லது அவர்களால் கனடா நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ஏதாவது ஆபத்தாக இருக்குமானால் அல்லது முரண்பட்ட தகவல்களை வழங்கினால் 'கனடிய எல்லை பாதுகாவல் நிறுவனம்' (Canada Boarder Service Agency) உடனடியாக அந்த இடத்தில் வைத்து சம்பந்தபட்டவரை திருப்பி அனுப்பலாம்.

சிறைச்சாலையினுள் அவர்களுடன் அவர்களில் ஒருவராக இருந்து கொண்டு அவர்களை தயார் படுத்தும் வேலைகளை ஒருபுறம் நான் செய்து கொண்டிருக்கும் நேரம், வெளியேயிருந்து வரும் அழுத்தங்கள் முதல்கட்ட எல்லையினை தாண்ட பெரும் தடையாகவிருந்தன. அகதிகளை அரவணைக்கும் கனடாவின் மனித நேயமிக்க சட்டங்களை தமிழ் மக்கள் சாதகமாக பயன்படுத்துகின்றார்கள் என்ற ஒருசில கனடியர்களின் விமர்சனங்கள் ஒருபக்கம் இருந்தது. இவர்கள் யாவரும் யுத்தத்தில் ஈடுபட்ட பயங்கரவாதிகள் என்ற குற்றசாட்டுகளை இன்னொரு பக்கத்திலிருந்து இலங்கை அரசுக்கு சார்பானவர் அமைப்புகள், தனிநபர்கள் அழுத்தமாக பிரச்சாரம் செய்தார்கள். ஊடகங்களுக்கும், அதிகாரிகளுக்கும் இதற்குரிய மறுப்பு அறிக்கைகளை கனடிய தமிழர் பேரவை சார்பில் திரு. டேவிட் பூபாலபிள்ளை வெளியே நின்று செய்து கொண்டிருந்தார்.

இறுதியில் இவ்விடயம் ஒரு சாதகமான நிலைமையில் முடிந்தது. இந்த விடயத்தில் எங்களின் ஈடுபாட்டால் 'கனடிய எல்லை பாதுகாவல் நிறுவனம்' மற்றும் சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் பொறுப்பாளர்களாக உள்ள கனடிய அரச அதிகாரிகள் ஆகியோருடன் எங்களுக்கு தொடர்பும் கிடைத்தது. முதலாவது நிலைப்பாட்டினை கடந்துவந்து விட்டாலும் மீண்டும் கடந்து செல்ல வேண்டிய இன்னொரு நிலைப்பாடு இருந்தது.

**2. அகதி அந்தஸ்து விசாரணையில் ஒருவரை அகதியாக ஏற்றுக்கொள்ளலாமா?**

முதலில் ஒரு கனடிய வக்கீலாக நான் நேரே சென்று எதுவிதமான கட்டணமும் இல்லாது உதவினேன். தற்போது அவர்கள் முதலாவது கட்டத்தினைக் கடந்து கனடாவினுள் பாதுகாப்பாக இருந்தார்கள். தொழில் ஏதாவது செய்து கொண்டும் தங்களின் நிரந்திரமான அகதி அந்தஸ்தினைப்பெறுவதற்கு இரண்டாவது நிலையினை கடப்பதற்கு தொடர்ந்து முயற்சி செய்தார்கள். இதற்கு பல சட்டவல்லுனர்கள் அவர்களுக்கு கைகொடுத்தனர். 2009ஆம் ஆண்டு ஒக்ரோபர் 17 ஆம் திகதி கப்பலில் வந்து இறங்கிய 76 பேரின் கனடாவிற்குள்ளான பிரவேசத்தினை ஒருவாறு முடிவடைந்திருந்தது.

சுமார் பத்து மாதங்களின் பின்பு இன்னொரு கப்பலில் ஏராளமான தமிழ் அகதிகள் வந்து கொண்டிருப்பதான செய்தி கனடாவினுள் அவர்கள் வரமுன்பே பரவி விட்டது. அவர்களின் வருகையினை எதிர்கொள்ள கனடாவே தயாராக இருந்தது. ஏற்கனவே வந்து இறங்கியவர்களின் விடயத்தில் நாங்கள் ஈடுபட்டிருந்தபடியால் எங்களுக்கு முற்கூட்டியே கனடிய அதிகாரிகளின் அழைப்பு வந்தது. இதனால் அவர்கள் வந்து இறங்கும் துறைமுகத்துக்கு எங்களின் சட்டத்தரணிகள் குழுவுடன் கனடிய தமிழர் பேரவை மற்றும் அவசர மருத்துவ குழு, வந்து இறங்குபவர்களுக்கு உடுப்புகள், உணவுப் பொருட்கள் என்பவற்றுடன் சென்றிருந்தோம்.

2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 12ஆம் திகதி 492 பேர் வந்து இறங்கினர். இதில் 25 பெண்கள் 53 குழந்தைகள் உள்ளடங்குவர். எதற்கும் ஆயத்த நிலைமையிலிருந்ததால் மனதினுள் எழும் சோகங்களை கட்டுப்படுத்திக் கொண்டு செயல்பாட்டில் நாம் அனைவரும் களம் இறங்கினோம். ஏற்கனவே கனடா எல்லை காவல் நிறுவனம் ஆர்.சி.எம்.பி, குடிவரவு அதிகாரிகள் யாவரோடும் அறிமுகங்கள், தொடர்புகள் இருந்தது. இதனால் கடந்த முறை மாதிரி கைவிலங்கோடு, விசேட மஞ்சள் உடுப்புகள் அணிய வைத்து சற்று கடுமையாக நடந்துகொள்ளும் நிலைமையினை சற்று தளர்த்தியிருந்தோம்.

தாயக மண்ணில் துன்பப்படும் தமிழர்களின் நிலையினையும் அவர்கள் அகதியாக உயிர் பிச்சை கேட்டு நீண்ட கடல் பிரயாணத்தினூடாக உயிரை பணயம் வைத்து எதற்காக கனடாவிற்கு வந்து சேர்ந்தார்கள் என்ற விடயங்களையும் துறைமுகத்தில் வைத்தே அதிகாரிகளையும் ஊடகலவியலாளர்களையும் ஒன்று சேர்த்து தெளிவுபடுத்தினோம். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அகதிகள் நிறுவனம் (UNHCR) மற்றும் 'சர்வதேச மன்னிப்பு சபை' (Amensty International) ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு கனடாவில் அகதிகளின் பாதுகாப்பு பற்றி

**தொடர்ச்சி 17ஆம் பக்கம்**

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# அன்புடைமை - 3

திருவள்ளுவரின் 73வது குறளில் இருந்தே இந்த இதழின் தொடர் கட்டுரையை ஆரம்பிப்போம்.

'அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு'

இந்தக் குறளிற்குப் பரிமேலழகர் பெறுதற்கு அரிய மக்கள் உயிர்க்கு உடம்போடு உண்டான தொடர்ச்சியினை அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின் பயன் என்று சொல்லுவர் அறிந்தோர் என்றவாறு பொருள் உரைத்துள்ளார். உயிரும் உடம்பும் உள்ளதுபோல அன்பும் செயலும் இணைந்திருப்பதே உயர்ந்த பொருத்தமாகும் என்று கலைஞர் இதற்கு விளக்கம் கொடுத்துள்ளார். அருமையான உயிர்க்கு உடம்போடு பொருந்தி இருக்கின்ற உறவு, அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று மு.வ விளக்கம் கொடுத்துள்ளார். அன்புடன் அமைந்து வாழும் வாழ்வின் பயனே, உடலுக்கும் உயிருக்கும் உள்ள சம்பந்தமாகும் என்று சாமி சிதம்பரனார் விளக்கம் கொடுத்துள்ளார். இந்தக் குறளின் மூலம் அன்புடைமை வாழ்விற்கு இன்றியமையாதது என்பது விளக்கப்பட்டுள்ளது.

மனிதர்களுடன் பழகும்பொழுது மனிதர்களின் இயல்பான பொதுவான குணங்கள் என்ன என்பதைப் புரிந்து பழகவேண்டும். மனிதர்கள் உணர்ச்சி வயப்பட்டவர்கள். மனிதர்களை இலகுவாக அன்பால் ஊக்கப்படுத்திக் கொள்ளலாம். அன்பான வார்த்தைகளால் மனிதர்களை இலகுவாகக் கட்டுப்படுத்த முடியும். ஆனாலும் இதற்கு விதிவிலக்கும் இருக்கலாம். பிற மனிதர்களை அன்போடு பாராட்டப் பழக வேண்டும். குறைகளைக் கூறி விமர்சித்து வெறுப்பைக் காட்டுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். மனிதர்கள் பலவிதம், அதில் நாம் ஒரு விதம் என்று சொல்வதை நாம் அறிவோம். மனிதர்களைக்



கையாள்வதும், மனிதர்களுடன் உறவாடுவதும் மிகவும் கடினமான விடயமாகக் கருதப்படுகின்றது. நாம் மற்றவர்களிடம் வெளிக்காட்டும் அன்பு இந்தச் சிரமத்தை இலகுவாக்கும் என்று ஆய்வாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது. வெற்றியாளர்களாகத் திகழும் தலைவர்களிடம் ஒரு முக்கியமான தகைமையாக அன்புடைமை காணப்படுகின்றது.

ஒருவரைக் குற்றஞ்சாட்டுதல் அல்லது விமர்சித்தல் மிகவும் ஆபத்தானது. இது ஒருவரின் பெறுமதிமிக்க கௌரவத்தைப் பாதித்து அவரின் முக்கியத்துவத்தைப் பாதித்து விடுகின்றது. உலகப் புகழ் பெற்ற மனோதத்துவ நிபுணர் பி.எவ்.ஸ்கின்னர் (B.F.Skinner) தண்டனை பெறும் மிருகத்தை விட பாராட்டுப் பெறும் மிருகம் அதிக விடயங்களை கிரகித்துக் கொள்ளும் எனக் கூறியுள்ளார். இன்னொருவரைக் குறைத்து விமர்சிப்பதை விட்டு அன்புடன் பாராட்டிக் கொள்வது நல்லது என்ற விடயத்தை இது எடுத்துக் காட்டுகின்றது. ஹான்ஸ் சேலி (Hans Selye) என்ற மனோதத்துவ நிபுணர் மற்றவர்களின் பாராட்டை எப்போதும் எதிர்பார்க்கும் நாம் ஏனோ மற்றவர்களை குறைத்து விமர்சிக்கின்றோம் என்று குறிப்பிடுகின்றார். மற்றவர்களைக் கண்டிப்பதற்குப் பதிலாக அவர்கள் ஏன் தவறு செய்கின்றார்கள் என்று புரிந்து கொண்டு அவர்களை மன்னிப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்று டேல் கார்நிகி மனிதர்களிடம் செல்வாக்குக் கொள்வதும் நண்பர்களைச் சேர்ப்பதும் எப்படி என்ற தலைப்பில் எழுதிய ஆங்கில நூலில் கூறியுள்ளார்.

எந்த ஒரு மனிதரிலும் நேர் மறையான விடயங்களும், எதிர் மறையான விடயங்களும் இருக்கும். அவர்களிடம் இருக்கும் நேர் மறையாக உள்ள விடயங்களைச் சுட்டிக்காட்டிப் பாராட்டும்பொழுது தம்மிடம் உள்ள எதிர் மறையான விடயங்களையும் நேர் மறையாக மாற்ற முயற்சிப்பார்கள். அவர்களின் முன்னேற்றம் கருதி எதிர் மறையான விடயங்களைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்ற சூழ்நிலையில் மிகவும் பக்குவமாக அவற்றை எடுத்துக் கூற வேண்டும். இவற்றைப் பகிரங்கமாகக் குறிப்பிட்டு அவர்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்கக் கூடாது என்பதே எனது கருத்தாகும்.

மனிதர்களிடம் செல்வாக்குச் செலுத்துவதற்கு (Influencing People) அடிப்படையான விடயம் அன்புடைமை ஆகும். மனிதர்களைக் கையாளவேண்டிய நிர்வாகத் தலைமைப் பதவிகளில் உள்ளவர்களும் அன்பினைச் செலுத்தி மனிதர்களைக் கையாளுவதே நல்லது எனக் கூறப்படுகின்றது. நாங்கள் எல்லோரும் வெவ்வேறு அணுகுமுறைகளில் மனிதர்களைக் கையாள்கின்றோம். ஆனால் நாம் எவ்விதத்தில் கையாண்டாலும் அன்பினைச் செலுத்துவதே மிகவும் பொருத்தமானது. மனிதர்களிடம் உறவு கொள்வதற்கான நுட்பங்களையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவரிடமும் அன்பைப் பொழிந்து பாருங்கள். குறைகளைச் சுட்டிக் காட்டும் பொழுதும் அன்பு கலந்த புதிய அணுகு முறையைக் கையாளுங்கள். அவர்களின் வெற்றிகளைப் பார்த்துப் பாராட்டிக் கொள்ளுங்கள். கடுமையான விமர்சனங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஆரோக்கியமான முறையில் உங்கள் மாற்றுக் கருத்துக்களைத் தெரிவியுங்கள். பிள்ளைகளிடமும் இவ்வாறான அணுகுமுறையில் பழகிப் பாருங்கள். குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் ஏற்படுவதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

வேலைத்தளங்களிலும் முடிந்தளவு எல்லோருடனும் அன்பாகப் பழகிக் கொள்ளுவது சரியான வழிமுறை. நிறுவன உரிமையாளர்கள் அல்லது முகாமையாளர்கள் பொதுவாக தொழிலாளர்களைப் பாராட்டுவதோ, ஊக்கப்படுத்துவதோ அல்லது அவர்களுடன் அன்பாகப் பழகுவதோ கிடையாது. இது உண்மையில் மிகவும் முக்கியமான குறைபாடாகக் கருதப்படுகின்றது. சில நிறுவனங்களில் இந்த நிலை நேர் எதிராக மாற்றப்பட்டபொழுது நிறுவனத்தில் அதிகமான வளர்ச்சி ஏற்பட்டதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள். நிறுவன உரிமையாளர்கள், முகாமையாளர்கள், தொழிலாளர்களிடம் காணப்படும் நட்புறவு, நிறுவனத்தை ஒரு உயர்நிலைக்கு எடுத்துச் செல்லும் எனக் கூறப்படுகின்றது. அன்பினைச் சொத்தாக்கி அதனை உரிய முறையில் பகிர்ந்தும் கொண்டால் அதுவே வெற்றியின் முதல் படி எனலாம். முகாமையாளர்கள் பலரிடம் காணப்படும் முக்கியமான குறைபாடு, தமக்குக் கீழே வேலை செய்பவர்களின் நலன்களைப் பற்றி அக்கறை கொள்ளாது அவர்களிடம் இருந்து வேலை வாங்குவதை மட்டும் கவனித்துக் கொள்வது. இது ஒரு சரியான அணுகுமுறையாகக் கருதமுடியாது. அன்புடைமை பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.

நன்றி. வணக்கம்.
தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com




Kingsway-Queensway
சந்திக்கருகாமையில்

- எட்டு நிமிடங்களில் ரொரன்ரோ டவுன் ரவுன்
- இரண்டு நிமிடங்களில் கார்டினர் விரைவுப் பாதை
- நிமிடங்களில் பாடசாலை, வணிக மையங்கள்
- 24 மணிநேர பாதுகாவலர்கள் மற்றும் ரெனிஸ் கோர்ட், உடற்பயிற்சியரங்கம், உள்ளக,வெளியக நீச்சல் குளங்கள்
- குறைந்த விலையில் சகல வசதிகளும் உள்ளடங்கிய ஒரு அறை நவீன Condo

Ragunathan Mahesu – Sales Rep – 416-450-6833

VEEDU REALTY INC. BROKERAGE

416-759.6000

## தமிழன் வழிகாட்டி செந்திக்கு மார்க்கம் நகர முதல்வர் கௌரவம்



மார்க்கம் நகர முதல்வர் Frank Scarpetti அவர்கள் தமிழன் வழிகாட்டி செந்தியை 17-September 2014 மார்க்கம் நகர-சபை மண்டபத்தில் கௌரவித்தார்.

கனடா முழுவதும் இருந்து புலம் பெயர்ந்தவர்களிற்கான கௌரவமாக கருதப்படும் "RBC Top 25 Canadian Immigrant" விருதினை பெற்றதற்காகவே இச்சிறப்பு விருது அளிக்கப்பட்டது. மார்க்கம் நகரசபையின் விசேட கூட்டமொன்று கூட்டப்பட்டிருந்தபோது பல வேறு இனமக்களிற்கும் பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஹரி ஆனந்தசங்கரி...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

வலியுறுத்தியிருந்தோம்.

இருமுறையும் கப்பலில் வந்து சேர்ந்த தமிழ் அகதிகள் விடயத்தில் முதலில் சமூகமளித்து எதுவிதமான கட்டணமும் இல்லாது பல இடங்களில் எனது பணத்தை செலவழித்து சட்டத்தரணி நான் என்பதில் பெருமையடைகிறேன்.

**பொதுவாக தமிழ் சமூகம் உட்பட எல்லா சமூகத்தினரும் ஒருவரை தங்களின் நாடாளுமன்ற பிரதிநிதியாக தெரிவு செய்யும் போது அவரது கல்வி தகைமைகள், தொழில், சொந்த வாழ்வியல் முறைகள் போன்றவற்றினை கூர்ந்து பார்ப்பது வழமையாகும். இதில் தங்களின் நிலைப்பாடு என்ன?**

பத்து வயதில் அன்னையின் கையை பிடித்தபடி கனடாவுக்கு வந்து எனது கல்வியினை ரொறொன்ரோவில் இதே தொகுதியில் ஆரம்பித்த ஒருவன் நான். ஒட்டாவா கால்ரன் பல்கலைக்கழகத்தில் 1996 ஆம் ஆண்டு அரசியல் விஞ்ஞான துறையில் (Political Science) சிறப்பு பட்டம் (B.A.Hons) பெற்றேன். பல்கலைக்கழக படிப்பு கனடாவின் அரசியல் மட்டுமல்ல உலக அரசியலையும் ஆய்வு செய்து கற்றுகொள்ளும் ஒரு மிகசிறந்த பட்டறையாக அமைந்திருந்து. தொடர்ந்து யோர்க் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 2005 ஆண்டு சட்டத்துறையில் (L.L.B.Gradute) பட்டம் பெற்றேன். 'அரசியல் விஞ்ஞானம்', 'சட்டம்' என்ற இரு துறைகளில் இரு வெவ்வேறு பல்கலைக்கழகங்களில் சிறப்பு பட்டம் பெற்ற பின்பு வழக்கறிஞராக பணிபுரியும் அரச அனுமதி பத்திரம் பெற்று 2006 இலிருந்து ஸ்காபரோவில் ஒரு சட்ட நிறுவனம் ஒன்றினை நடத்தி வருகின்றேன்.



எனது நிறுவனம் மேலும் பலதுறை சார்ந்த சட்டத்தரணிகளை உதவியாளர்களாக ஒன்றிணைக்கப்பட்டு பரவலாக பல்லின மக்கள் மத்தியில் இயங்கி வருகின்றது.




எங்கள் திருமணம் 2007இல் கனடாவில் நடைபெற்றது. எனது மனைவி ஹரினி. அவர் கனடாவின் ஆரம்பகால புலம்பெயர் தமிழர்களுள் ஒருவராக இருந்து, கனடாவில் இந்துமதம் வளர அயராது உழைத்தவரும், பல சமூக நிறுவனங்களிலும் முன்னின்று உழைத்தவருமான அமரர் திரு. நா. சிவலிங்கம் மற்றும் ஜனனி சிவலிங்கம் தம்பதிகளின் மகள். அவர் கனடாவில் யோர்க் பல்கலைக்கழகத்தில் 2005 இல் சட்டத்துறையில் பட்டம் பெற்று (L.L.B Graduater) பின்னர் மொன்றியல் மக்ஹில் பல்கலைக்கழகத்தில் (L.L.M Graduate, McGill Univeristy) சட்டத்துறையில் முதுகலைமாணி பட்டம் 2009 இல் பெற்று தற்போது யோர்க் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் (P.H.D Student) பெறும் ஆய்வுகளை மேற்கொள்கின்றார். மனைவியின் கல்வி, அனுபவம், ஆளுமை யாவும் எனது சட்டத்துறை தொழில், பொதுப்பணி கனடாவின் அரசியல் பிரவேசங்கள் யாவற்றுக்கும் உறுதுணையாக உள்ளது.

எங்களுக்கு 'பைரவி', 'சகானா' என இரு பெண் பிள்ளைகள். அவர்கள் இருவரும் ஆரம்ப பாடசாலையில் படிக்கிறார்கள். என்னை சுற்றியுள்ள குடும்பம், உறவினர், நண்பர்கள் என பாரிய வட்டம் கனடாவில் நான் முன்எடுக்கும் சகல பணிகளுக்கும் பல வழிகளிலும் கைகொடுப்பவர்களாக இருக்கின்றனர்.



# இதயம் - ஆரோக்கியம் - நீண்ட ஆயுள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

## *Heart Health Long Live*

மனிதனின் உயிர்நாடி இதயம் என்று கூறலாம். ஏனெனில் ஒரு மனிதனின் நோயின் அளவின் தாக்கத்தை அறியக் கூடிய சக்தி இதயத் துடிப்பிற்கு உள்ளது என்று மருத்துவர்களின் கருத்து சொல்கிறது.



ஒருவர் மருத்துவரிடம் சென்று தன் உடல் நிலைபற்றிக் கூறினால் முதல் அவரின் இதயத் துடிப்பை அறிவார். பின் அதற்குத் தகுந்தல் போல் மருந்துகளைப் பரிந்துரைப் பார். இதயத்திற்குத் தேவையான ஒக்ஸிஜன் கலந்த இரத்தம் சரியான அளவில் செல்லாதபோது இதயம் பாதிக்கப்படுகிறது. இதனால் இரத்த அழுத்தம் ஏற்படுகிறது.

### இரத்த அழுத்தம் *(Blood preasure)*

ஆண்கள் தான் காலம் காலமாக இரத்த அழுத்த நோய்க்கு ஆளாகி வந்தார்கள். ஆனால் சமீபத்தில் வந்த ஆய்வின் அடிப்படையில் வேலைக்குப் போகும் பெண்களுக்குத்தான் இரத்த அழுத்தம் அதிகம் உள்ளது. ஏனென்றால் அவர்கள் அலுவலுகத்திலும் பின்பு வந்து வீட்டிலும் வேலை செய்கின்றனர். இதனால் அதிக மன அழுத்தம் ஏற்படுவதால் இரத்த அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். மன




அழுத்தத்தால் மட்டும் இரத்த அழுத்தம் வருகிறது என்று கூறிவிட முடியாது. நாம் உண்ணும் உணவில் அதிக உப்பு சேர்வதா லும், அதிக அளவில் எண்ணெய் பயன் படுத்தப்படுவதாலும், அதிக கொழுப்புள்ள அசைவ உணவை அதிகம் உண்பதாலும் இரத்த அழுத்தம் ஏற்படுகிறது.

### இரத்த அழுத்தத்தின் அறிகுறிகள்

இரத்த அழுத்தம் திடீரென அதிகரிக்கக் கூடிய ஒன்றுதான். என்றாலும் ஒரு சில நாட்களுக்கு முன்பே சில அறிகுறிகள் தென்படும்.

1. தலைசுற்றுதல்
2. கிறுகிறுப்பு அல்லது மயக்கம்
3. நெஞ்சுப்பகுதியில் வலி, மற்றும் மூச்சு வாங்குதல்
4. மார்பில் படபடப்பு
5. திடீரென உணர்விழத்தல்
6. கண்பாதிப்பு - பக்கவாதம் ஏற்படுதல்
7. சிறுநீரகங்கள் பாதிப்புக்குள்ளாதல்

### தவிர்க்க வேண்டிய உணவுகள்

அதிக கொழுப்பு நிறைந்த உணவுகளான மாமிச வகைகள், நெய், வெண்ணெய், தேங்காய் மற்றும் கிழங்கு வகைகள் போன்றவற்றை முடிந்த வரை தவிர்க்க வேண்டும். கடல் உணவான சுறா, நண்டு, இறால் போன்றவற்றையும் தவிர்க்க வேண்டும். பால் மற்றும் பாலினால் தயாரிக் கப்பட்ட உணவுகளை உண்ணலாகாது. புகை, மது போன்ற தவறான பழக்கங்களைத் தவிர்க்க வேண்டும். அதிகமான சிற்றின்ப ஆசைகளைக் குறைத்திட வேண்டும்.

### இரத்த அழுத்தம் வராதிருக்க உணவுகள்

நாம் உண்ணும் உணவில் காய்கறிகள், பழங்கள், கீரைகள் 50 வீதம் இருக்க வேண்டும். நார்ச்சத்துள்ள பழங்களைச் (Fiber) சாப்பிடலாம். வாழைத்தண்டு, தக்காளி, அறுகம்புல் போன்றவற்றின் சாற்றினை இடைக்கிடையே அருந்த வேண்டும். இரவு உணவை 7 மணியளவில் உண்டு சிறிது நேரம் நடைப்பயிற்சி செய்து உண்ட உணவு ஓரளவு சமிபாடடைந்த பின் தூக்கப்போவது சிறந்தது.

### இரத்த அழுத்தம் இல்லாமல் செய்யும் யோகா

இரத்த அழுத்தம் வராமல் தடுக்கவும் அதனை வெற்றி கொள்ளவும் யோகாசனம், தியானம், பிராணாயாமம் போன்ற பயிற்சிகள் மிக விரைவான பலன்களைக் கொடுக்கின் றன. இவற்றுள் மிகவும் பலன்தரக்கூடிய சில மூச்சுப்பயிற்சி முறைகள் உடனடியாக இரத்த அழுத்தத்தின் அளவை சமநிலைக்குக் கொண்டுவருவதுடன் மூளையில் ஏற்படும் எண்ண அலைகளின் வேகத்தைக் கட்டுப்படுத்தி மூளைக்கு ஓய்வினைக் கொடுத்து அமைதிபெறச் செய்கிறது. அத்துடன் இரத்தத்திலுள்ள கழிவுப்பொருட்களை வெளியேற்றி அதனைச் சுத்திகரிக்கின்றது. இவ்வாறான மூச்சுப் பயிற்சி முறைகளில் சித்தாரி பரமாரி, அனுலோமா வினுலோமா போன்ற பயிற்சி கள் இதயப்பிரச்சினைகளுக்கு அற்புதமான பலன்களைத் தரக்கூடியவை. இதனுடன் சில யோகாசனங்கள் குறிப்பாக (1)



உட்கட்டாசனம், (2) விபரீத ஹரணி, (3) நவாசனம், (4) சவாசனம் போன்றவை இரத்த அழுத்தத்தையும் இரத்த கொதிப்பையும் சமநிலையில் வைத்திருக்க உதவுகின்றன. இவற்றை ஒரு யோகாசன ஆசிரியரின் உதவியுடன் ஆரம்பத்தில் பழகுவதுவே சிறந்தது.

அடுத்து தியானம் (Meditation) தியானத்திற்கு மறுபெயர் நிதானம். தியானம் உடலையும் உள்ளத்தையும் அமைதிப் படுத்துகிறது. பதட்டத்தையும் மன அழுத்தத்தையும் குறைக்கின்றது. எதிர் மறையான எண்ணங்கள் நீங்கி தெளிவான சிந்தனைகள் ஏற்பட உதவுகின்றது. இதனால் இரத்த அழுத்தம் குறைவதுடன் இதயத்தை இதமாக்குகின்றது.

### இதயத்திற்கு உகந்த மூலிகைகள்

அறுகம்புல், ஆடாதோடை, வில்வம், வேப்பிலை, வெந்தயம், நெல்லி, கடுக்காய், தூதுவளை, மருதம்பட்டை, தாமரைப்பூ போன்றவற்றை காய வைத்து பொடி செய்து மருந்தாக தினமும் சிறிதளவு உட்கொண்டு வந்தால் திடகாத்திரமான இதயத்தை நமதாக்கிக் கொள்ளலாம்.



ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721



MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



கலையரசி - 2014

யாழ். இந்துக்கல்லூரிச் சங்கம் - கனடா பெருமையுடன் அளிக்கும் கலையரசி, சனிக்கிழமை ஒக்ரோபர் 04, 2014 மாலை 5:30 மணிக்கு Chinese Cultural Centre, 5183 Sheppard Ave. E., Scarborough, ON M1B 5Z5 (SHEPPARD & PROGRESS) இல் நடைபெறவுள்ளது. அனைத்து பழைய மாணவர்களையும், ஆசிரியர்களையும் நலன் விரும்பிகளையும் தமது குடும்பத்துடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

416.856.9565 (சிவபாலன்) / 416.930.9119 (கிருஷ்) / 416.856.6900 (கதிர்)

www.jaffnahinducanada.com & http://jhcacanada.com


Annamalai University Canada Campus
DIPLOMA IN YOGA
Teachers Training Program
Registeration Now Open
Course start on October 5th 8:00am - 10am (Every Sunday)
One Program, Many Benefits!
Program includes Theory & Practical
PLUS get RYT hours in the same program!
Taught by
Jeyarajeen Sivalingam
M.Sc in Yoga, Over 15 Years Teaching Experience
Call now to book your seat!
905-781-9796 / 647-928-9796
www.marmayoga.guru
850 Tapscott Rd. Unit 4 Scarborough ON (Finch & Tapscott)


TRAFFIC TICKETS
MOTOR VEHICLE ACCIDENT
CRIMINAL MATTERS (SUMMARY)
Careless driving
Impaired driving
Red light
Red light camera
Speeding
Seatbelt
Stop sign
Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்
SKT PARALEGAL SERVICE sktheesan@gmail.com
416-803-5296


Parkway Mall Mobilicity !!!
$50 OFF COUPON
$25/mo
Life Time Deal, No Contract.
September Final Promo
UNLIMITED Talk & Text
UNLIMITED Local Calling, & Ontario Long Distance
UNLIMITED Text messaging
UNLIMITED Internet & Mobile-Hotspot (+$10)
FREE Caller ID, Voice Mail, Call Waiting and more
Alcatel Flip $79.99 $0
Samsung T469 $99.99 $0
Huawei Y301 $169.99 $59.99
Alcatel Fierce 4G $199.99 $79.99
Samsung Galaxy Note 2 $599.99 $299.99
Samsung Galaxy S4 $649.99 $359.99
No Contract !! No Credit Check !!
PHONES $50 OFF
You can bring in your own phone
ONLY at
Mobilicity @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough (தமிழ்/English/Chinese)
M1R4B8, 416-999-9229
mobilicity
Now that's smart.™




# ஒரு துப்பாக்கியும் ஒரு மோதிரமும் - விமர்சனம்

ரொரன்ரோவின் மிக முக்கிய விமர்சகர்கள் பலர் கலந்துகொண்டு கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். திரைப்பட இயக்குனர் லெனின் சிவம் இவர்களது கருத்துக்களுக்கு மிகவும் பொறுமையாக தனது பதில் கருத்துக்களை கூறினார். லெனினுடன் படத்தில் நடித்த கலைஞர்கள், தொழில்நுட்ப கலைஞர்களும் சமூகமளித்திருந்தனர். ரொரன்ரோவில் ஒரு தமிழ்ப்படத்துக்கு ஒரு சீரிய விமர்சனக் கூட்டமொன்று நடத்தப்பட்டது இதுவே முதல் முறை. கூட்டத்தை விளம்பரம் பத்திரிகையும் இணைந்து ஒழுங்கு செய்திருந்தது.

இக்கூட்டம் தொடர்பாக விமர்சகர் மீரா பாரதியின் கட்டுரை இங்கே தரப்படுகின்றது

ஒரு துப்பாக்கியும் ஒரு மோதிரமும் – ஈழத் தமிழர்களின் சிந்தனையின் எல்லையை கேள்வி கேட்கின்றது?

மீரா பாரதி

ஒரு துப்பாக்கியும் ஒரு மோதிரமும் திரைப் படம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ரதன் அவர்களால் இன்று ரொரன்டோவில் ஒழுங்கு செய்யப்பட்டது. இக் கலந்துரையாட லில் திரைப்படத்தின் இயக்குனர் லெனின் சிவம் உட்பட தயாரிப்பாளர்கள் மற்றும் சில நடிகர்களும் பங்குபற்றினர். பல்வேறு கருத்தாளர்கள் பங்குபற்றியதுடன் ஓரளவு சபை நிறைந்ததாகவும் ஆரோக்கியமான கலந்துரையாடலாகவும் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பலர் பல கருத்துக்களைக் கூறியபோதும் நபர்களைக் குறிப்பிடாமல் பொதுவான கலந்துரையாடலை எனது நினைவிலிருந்து பதிவு செய்ய முயற்சிக்கின்றேன்.

முதலில் லெனின் சிவம் அவர்கள் திரைப்படம் தொடர்பான தனது நேர் எதிர் மறை பார்வைகளை முன்வைத்தார். ஈழத்தில் நடைபெற்ற இனப்படு கொலை தொடர்பான விவரண படங்களைப் பார்த்ததினால் ஏற்பட்ட தாக்கத்தின் விளைவே இத்திரைப்படம் என்றார். மேலும் மேற்குலகமும் கனேடிய அரசியலும் ஊடகங்களும் எமது போராட்டத்திற்கு அல்லது நாம் எதிர் நோக்குகின்ற இன ஒடுக்குமுறைக்கும் இன



Barney & Betty Hill, ஹில் தம்பதிகள் தமது விடுமுறையைக் கழித்துவிட்டு செப்ரெம்பர் 19, 1961 இல் தமது காரில் வீடு திரும்பிக் கொண்டு இருந்தார்கள். வானிலே விண்மீனை ஒத்த பொருள் ஒன்று தம்மைத் தொடர்வதை அவதானித்தார்கள். அப்பொருள் அவர்களது காரின் முன் வந்தபோது அது ஒரு விண்கலம் (UFO) என்பதை அவர்களால் அறியக் கூடியதாக இருந்தது. அத்துடன் அவ்விண் கலத்தில் பல மனிதரை ஒத்த ஆனால் சுமாராக 3 அடி உயரமான பிராணிகள் இருப்பதைக் கண்டார்கள். பயம் கொண்ட தம்பதிகள் தமது காரின் வேகத்தை அதிகமாக்கி வீடு வந்து சேர்ந்தார்கள். வீடு வந்து சேர்ந்ததும் வீட்டிற்கு வந்து சேர வேண்டிய நேரத்திலும் இரண்டு மணித்தியாலங்கள் தாமதமாகத் தாம் வந்து சேர்ந்ததை அறிந்து கொண்டார்கள். அதனை யிட்டு வியப்படைந்த அவர்களினால் தவறிய அந்த இரண்டு மணித்தியாலங்கள் பற்றி எந்த விதமான விபரங்களையும் நினைவிற்குக் கொண்டு வரமுடியவில்லை. அந்த இரண்டு மணித்தியாலங்களுக்கும் என்ன நடந்தது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

இதன் பின்னர் வந்த நாட்கள் இவர்களுக்கு சிக்கலான நாட்களாக இருந்தன. இரவுகளில் இவர்களால் சரியாகத் தூங்க முடியவில்லை. விளக்கங்கள் இல்லாத, பயங்கரமான கனவு களினால் அவதிப்பட்டார்கள். பகற் பொழுது களில் தலைவலியினால் அவதிப்பட்டார்கள். இவர்களுக்கு வைத்தியம் செய்த மருத்துவர் களால் இவற்றிக்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிய முடியாதிருந்தது. இந்நிலையில் இவர்களைத் தனித்தனியாக அறிதுயில் நிலைக்கு (ஹிப்னரைஸ்) உள்ளாக்கிப் பார்த்த போது, அந்த தவறிய இரண்டு மணித்தியாலங்கள் பற்றிய விபரம் வெளிவந்தது. அறிதுயில் நிலையில் இருவரும் ஒரே மாதிரியான, ஆச்சரியமான சம்பவம் ஒன்றினைப் பற்றிக் கூறியிருந்தார்கள்.

அறிதுயில் நிலையில் அவர்கள் கூறிய விபரத்தின்படி, அன்றிரவில் விண்கலத்தில் இவர்களைத் தொடர்ந்து வந்தவர்கள் தமது விண்கலத்திற்கு இவர்களைக் கடத்திச் சென்றிருக்கின்றார்கள். அங்கு இருவரையும் வைத்தியப் பரிசோதனைக்குட்படுத்தி இருக்கின்றார்கள். புவியினைப் பற்றிய பல விபரங்களைக் கூறிய அந்த வேற்றுக் கிரக மனிதர்கள், பெற்றியிடம் விண்மீன்களின் படம் (star map) ஒன்றைக் காட்டி தாம் அங்கிருந்து வந்ததாகவும் கூறியுள்ளார்கள். பெற்றி கூறிய குறிப்புக்களின்படி, அந்த விண் மீன்களின் தொகுதி Zete Reticulli என இனம் தெரியாத பறக்கும் பொருட்களின் (UFO) ஆய்வாளர்கள் குறிப்பிட்டார்கள் எனப் பதிவுகள் கூறுகின்றன.

ஆர்னோல்டின் சம்பவம் போன்றே, இந்தச் சம்பவமும் வேற்றுக்கிரக மனிதர்கள் விடயத்தில் மிகவும் பிரபலமானது. வேற்றுக் கிரக மனிதர்கள், பறக்கும் தட்டுகள் பற்றிய ஆய்வுப் புத்தகங்களிலும் இணையத்தளங் களிலும் குறிப்பிடப்பட்டுள்ள இச்சம்பவத்தை மிகவும் சுருக்கமாகத் தந்துள்ளேன். இச்சம்பவமானது, யூஎவ்ஓ, ஏலியன்கள் என்பவை பற்றிய உண்மைத் தன்மையைக் காட்டக் கூடிய ஒன்றாக, யூஎவ்ஓலோயிஸ்ர் கள் கருதுகின்றார்கள். எப்படியெனில், யூஎவ்ஓ, ஏலியன்கள் என்ற இரண்டு பதங்கள் பற்றியும் பொருத்தப்பாடாகச் சிந்தித்தவர் களின் சிந்தனைக்கு ஒத்துப் போகும் விதமாக இச்சம்பவம் அமைந்திருந்தது. அவர்களது சிந்தனையில் முதலில் வந்தது, நமது புவியில் மனிதர்களின் எவ்விதம் புத்திசீவிகளாக மாறினார்கள் என்ற கேள்வி தான். அதன் பதிலில் இருந்துதான் வேற்றுக் கிரக மனிதர்களைப் பற்றித் தெளிவுபடுத்து கிறார்கள். அதன் வழியே நாமும் அவர்களு டன் இணைந்து சிந்தித்துப் பார்ப்போம். அதற்கு புவியின் சரித்திர கால வளர்ச்சியையும் பார்க்க வேண்டியிருக் கின்றது. ஆனாலும் அவை பற்றிப் பின்னர் பார்க்கப் போகின்றோம் என்பதனால், நேரடியாகவே விடயத்திற்குள் நுழைவோம்.

நாங்கள் அறிந்தபடியே, சுமாராக 4,500 மில்லியன் வருடங்களின் முன்னராக கதிரவ நெபுலா என்ற பென்னாம் பெரிய தூசுக் கூட்டம் ஒன்றில் இருந்து உருவாகியதுதான் நமது கதிரவன் என்கிறது விஞ்ஞானம். கதிரவனுடன் சேர்ந்தே அதன் கோள்கள் எல்லாம் தோன்றிவிட்டன. கதிரவனின் சுழற்சியின் காரணமாக காலத்திற்குக் காலம் கதிரவனில் இருந்து வெளியேறிய கதிரவ னின் வெளித் தள்ளல்கள்தான் கதிரவனின் கோள்கள் என்ற கருத்து ஒரு காலத்தில் இருந்தது. அக்கருத்து ஏற்புடையது அல்லவென இந்நாட்களில் காட்டியுள்ளார்கள். கதிரவனின் தோன்றுகையின் போதான பக்க விளைவாகக் கதிரவ நெபுலாத் தூசுகளில் இருந்து தோன்றியவைதான் கதிரவக் குடும்பத்தில் உள்ள அத்தனையும் என்கின்றது இன்றைய விஞ்ஞான முடிவுகள். அதன்படி, நமது புவியின் வயதும் 4,500 மில்லியன் வருடங்கள்தான். விஞ்ஞானிகளின் ஆய்வின்படி, புவி தோன்றி 1000 மில்லியன் வருடங்களின் பின்னர் இயற்கையில் ஏற்பட்ட வேதியல் மாற்றங்களின் காரணமாக பூமியில் உயிரினங்கள் தோன்றத் தொடங்கின அல்லது தோன்றுவதற்கான சாத்தியங்கள் ஆரம்பமா கின. அதிலிருந்து, முதலில் ஒருகல உயிரி னங்கள் தோன்றின. காலத்தினூடான, இயற்கைக்கு ஒத்ததான,



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

தொடர்ச்சி 31ஆம் பக்கம்

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ACCESS D SOLUTIONS INC.

EMPLOYMENT OPPORTUNITY

Job Locations: Mississauga/Brampton/Etobicoke
We are looking General Labour/ Machine operator/forklift operator immediately
Morning Shift/Afternoon Shift/Night Shift available Monday to Friday

General Requirements:-
* Must be able to lift up between 15-30 lbs
* Ability to work in fast paced environment
* Warehouse experience is an asset
* Good verbal communications skills (English)
* Must have steel toed boots

For more information: 905.670.4700 / 416.830.5800
Please apply in person Monday to Saturday 9.30Am to 6.00Pm
Mississauga office: 6685 Tomken Road, Unit #204
Mississauga ON L5T 2C5

# திரை விமர்சனம் - மெட்ராஸ்



முதல் படத்தில் வெற்றிக்கொடி நாட்டிய இயக்குநர்களுக்கு இரண்டாவது படம் பெரிய கண்டம். புதிய தலைமுறை இயக்குநர்களில் 'பீட்சா', 'ஜிகிர்தண்டா' கார்த்திக் சுப்புராஜைத் தொடர்ந்து அந்தக் கண்டத்தை இப்படத்தின் மூலம் அனாயசமாக தாண்டியிருக்கிறார் 'அட்டகத்தி' ரஞ்சித்!

வட சென்னையைச் சேர்ந்த காளியும் அன்புவும் உயிர் நண்பர்கள். குாளி, மென்பொருள் நிறுவனம் ஒன்றில் வேலை பார்க்கிறார், அன்பு, கட்சி ஒன்றில் சிறிய பொறுப்பில் இருக்கிறார். இவர்கள் பகுதியின் மையத்தில் ஒரு உயர்ந்த சுவர் இருக்கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்த கண்ணனும் எதிர்கட்சியைச் சேர்ந்த மாரியும் விளம்பரம் எழுத அந்த சுவரை சொந்தம் கொண்டாடுகிறார்கள். இதில் மாரி இப்பகுதியைச் சேர்ந்தவர், அன்புவின் நண்பர். கண்ணன், ஆளும் கட்சி செல்வாக்கை பயன்படுத்தி, காவல்துறை உதவியுடன், தன் அப்பாவின் படத்தை நிரந்தரமாக அந்தச் சுவரில் வரைந்துவிடுகிறார். படத்தை அவ்வளவு சுலபத்தில் அழிக்க முடியாதவாறு சுவற்றுக்கு முன்பு ஒரு சிறிய கோயிலையும் எழுப்பிவிடுகிறார். வேறு பகுதியைச் சேர்ந்த கண்ணன் தன் பகுதி சுவரை சொந்தம் கொண்டாடுவது அன்புவுக்குப் பிடிக்கவில்லை. 'இது ஒரு செவுத்துக்காக நடக்கிற பிரச்சனையில்ல, அதிகாரம்! அவன் சொல்றத நாம கேட்டுகணும், எதிர்த்து கேள்வி கேக்க கூடாது... அப்படித்தான், அதான்' என்னும் அன்பு, மாரி துணையுடன் அந்த சுவரைக் கைப்பற்ற முயற்சிக்கிறார். சுவரை கைப்பற்றும் திட்டத்தை அன்பு போட, துணையாக நிற்கிறார் காளி. பிரச்சினை மோதலாக சண்டையில் கண்ணனின் மகன் பெருமாள் கொல்லப்படுகிறான். பழிக்கு பழி வாங்க அன்புவை கொலை செய்கிறது கண்ணன் தரப்பு. அன்பு கொலை, காளியின் கண் முன்பே நிகழ்கிறது.

அரசியல், சுவர் பிரச்சினை ஒரு பக்கம் இருக்க காளியைச் சுற்றிச் சுழலும் ஜாலி, கலையுடனான காதல் என படத்தின் முதல் பாதி நகர்கிறது. தன் கண்முன்னே தன் நண்பன் கொல்லப்படுவதைப் பார்த்த காளிய-'ின் ஆக்ரோஷமும், பழிவாங்க துடிப்பதும், அதிலிருந்து அவனை மெல்ல வெளிக் கொண்டுவர கலை செய்யும் முயற்சிகளுமாக நகர்கிறது இரண்டாவது பாதி.

காளியாக வருகிறார் கார்த்தி. 'அந்த செவுருல எங்க தாத்தா இருக்காரு' என்பவனிடம், 'அப்போ உங்க ஆயா என்ன பக்கத்து வூட்டு செவுத்துல இருக்குதா?' என வடசென்னை தமிழில் நக்கல் பண்ணுவது, 'எனக்கு பொண்ணு பொறந்தா அது உன் புள்ளைக்குத்தான் மச்சான்' என்று போதையில் நண்பனுக்கு முத்தம் கொடுப்பது என ஊடல்மொழி, பேச்சு அத்தனையிலும் வடசென்னை பையனாகவே மாறியிருக்கிறார் கார்த்தி. கலையாக வருகிறார் கேத்ரின் தெரசா. அழகாக இருக்கிறார்.

அன்புவாக கலையரசனும் அன்புவின் மனைவி மேரியாக ரித்விகாவும் வருகிறார்கள். காளிக்கும் கலையரசிக்கும் காதல் உருவாகும் தருணங்கள் போலவே அன்புவுக்கும் மேரிக்குமான காட்சிகள் மிக இயல்பாக உள்ளன.

இவர்கள் நால்வருடன் கண்ணனின் ஆதரவாளனாக வரும் விஜி, காளியின் அம்மாவாக வரும் 'என்னுயிர்த் தோழன்' ரமா, ஆதி, வினோத், பைத்தியமாக வந்து கலகலப்பு ஊட்டும் பரட்டைத் தலை ஜானி, போஸ்டர் நந்தகுமார், மைம் கோபி மற்றும் சில விநாடிகளே வந்து செல்லும் நடிகர்கள் என அனைவரும் நடிப்பில் அமர்க்களப்படுத்தியிருக்கிறார்கள். சுவரில் வரைந்திருக்கும் வ.ஐ.ச. ஜெயபாலனின் மிகப்பெரிய ஓவியம்கூட நன்றாக நடித்திருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். ஜானி பேசுகிற வசனங்களும் அவரது உடல்மொழியும் சிரிக்க வைக்கிறது. ஜானி திரையில் வரும் போதெல்லாம் அரங்கம் அதிர்கிறது.

சந்தோஷ் நாராயணன் இசையில், கானா பாலா எழுதி பாடிய 'இறந்திடவா நீ பிறந்தாய்?' மற்றும் 'நீ...' ஆகிய பாடல்கள்

**- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

தொடர்ச்சி 34ஆம் பக்கம்


வீடு + வாகனக் காப்புறுதி

இன்றே என்னை அழையுங்கள்
உங்களுடைய வீடு வாகனக் காப்புறுதி
மாதாந்தக் கட்டணத்தைத் தெரிந்து கொள்ள

ஹரி குலசேகரம்
முகவர்
416-826-4298



Allstate®
You're in good hands.

Pickering Agency
905-421-0005 ext. 5016
hkulasegaram@allstate.ca

# முயல்குட்டிகளும் கரட் செடிகளும்

ஒரு பெரிய தோட்டத்தில் சில முயல்கள் வாழ்ந்து வந்தன. அவற்றில் மூன்று முயல் குட்டிகளும் இருந்தன.

முயல்குட்டிகள் இம்முறை முதல்முறையாக உணவை தேர்ந்து எடுக்க போகின்றன. அதாவது விவசாயி ஒருவர் மரக்கறிகள் நடும் பொழுது, அவற்றில் ஒரு சிலவற்றை முயல்கள் முன் கூட்டியே தமக்கு என தெரிவு செய்துவிடும். அவை நன்றாக வளர்ந்த பின்னர் ஒவ்வொரு முயலும் தான் தேர்ந்தெடுத்த மரத்தின் கிழங்கை மட்டுமே சாப்பிடும்.

மூன்று முயல்குட்டிகளும் ஆளுக்கு ஒரு கரட் (Carrot) செடியை தேர்தெடுத்தன. சிறிது காலம் சென்றபின் முயல்குட்டிகள் போய் தங்களது செடிகளை பார்த்தன.

முதல் முயல்குட்டி, 'ஓ! என்னுடைய கரட்டின் இலைகள் மிக பச்சை நிறமாக இருக்கின்றன!' என்றது. இரண்டாவது முயல் குட்டியோ 'நிறம் ஏன், என்னுடைய கரட்டின் இலைகள் உங்கள் இருவருடைய செடிகளின் இலைகளை விட மூன்று மடங்கு பெரிது! அப்படி என்றால் என் மரக்கறி எவ்வளவு பெரிதாக இருக்கும்!' என்றது.

மூன்றாவது முயல்குட்டியோ ஒன்றுமே கூறவில்லை. ஏன் என்றால் அதன் கரட் செடிக்கு இரு இலைகள் மட்டுமே இருந்தன. மற்ற இரு முயல்குட்டிகளும் அதைக் கண்டு சிரித்து விட்டு சென்றன. மூன்றாவது முயலும் சோகத்துடன் சென்றது. அது தனியாக ஒவ்வொரு இரவும் வந்து தன் மரக்கறி செடியை பார்த்துவிட்டு சென்றது.



ஒருமுறை அது செல்கையில் முதல் முயல்குட்டி தன் கரட் செடிக்கு ஏதோ மருந்து ஊத்திக் கொண்டு இருந்ததை கண்டது. 'ஆகா!' என நினைத்த முயல் குட்டி, 'அது மரத்தை வளர்க்க மருந்து ஊத்துகிறது' என யோசித்துக்கொண்டு சென்றது.

இதைக்கண்ட குரங்கு ஒன்று முயல் குட்டியிடம் என்ன இப்படி யோசிக்கிறாய்?' என கேட்டது. முயலும் நடந்த விடயத்தை கூறியது. 'கவலைப்படாதே,' என தொடங்கிய குரங்கு, 'நீங்கள் மூவரும் முதல்முறையாக மரக்கறி பிடுங்க போகும் போது ஒரு பெரிய முயல் உங்களுடன் வரும். அதற்கு முதல் முயல்குட்டி செய்த விடயம் தெரியவரும். கவலை வேண்டாம். எல்லாம் நன்றாக முடியும்' என்றது.

குரங்கு கூறிய மாதிரி, மரத்தை பிடுங்கப் போன அன்று குட்டிகளுடன் வந்த தாய் முயல், முதல் முயலின் கரட்டை மணந்தவுடன் அதில் மருந்து போடப் பட்டுள்ளதை உணர்ந்தது. இதனால் அதை முதல் முயலை உண்ண விடவில்லை.

இரண்டாவது முயல் கரட்டை பிடுங்கியவுடன் அதை ஏமாற்றத்துடன் பார்த்தது. அது மிகச் சிறிய கரட். மூன்றாவது முயலின் கரட்டிற்கு சிறிய இலை இருந்தாலும், அது மிகப்பெரிய கரட். அதை முயல் சந்தோசமாக மற்ற முயல்களுடன் பகிர்ந்து உண்டது.

**நீதி-வெளிதோற்றத்தை வைத்து உள்ளே இருப்பதை கூறமுடியாது.**
*(Don't judge a book by its cover.)*



ஞா. ஆரணி
அகவை 16

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# ஒரு துப்பாக்கியும்...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

திரைப்படமாகும். இவ்வாறான திரைப்படங்கள் வெளிவருவது மிக அரிதே. இத் திரைப்படமே ஈழத்தமிழர்களின் அல்லது யாழ்ப்பாணத் தமிழர்களின் உரையாடலை சரியாகவும் யதார்த்தமாகவும் பதிவு செய்த திரைப்படம். மேலும் இத்திரைப்படத்தில் நடித்த அனைவரும் தம் பாத்திரங்களை உணர்ந்து சிறப்பாக இயல்பாக நடித்தனர். நாடகத்தனம் சிறிதும் இருக்கவில்லை.



குறிப்பாக இயக்கப் பொறுப்பாளர் இரும்பனாக நடித்தவர், இயக்கத்திலிருந்து தப்பிக்க முயன்றவர், ஏமாற்றப்பட்ட புலம் பெயர்ந்த பெண்ணாக நடித்தவர், மற்றும் ஓரினச் சேர்க்கையாளராக நடித்தவர் மிகச் சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியிருந்தனர். இவர்கள் ஒவ்வொருவரின் பாத்திரங்களும் நன்றாக கட்டமைக்கப்பட்டிருந்தது என சிலர் குறிப்பிட்டனர். அதேவேளை சிலர் பாத்திரங்கள் முழுமையாக கட்டமைக்கப்பட வில்லை என்றனர். இத்திரைப்படத்தில் ஆறு கதைகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் நன்றாக இணைக்கப்பட்டு தாம் சொல்ல விரும்பியதை அழகாக சொல்லியிருக்கின்றன என ஒரு சிலர் கூறினர். ஆனால் சிலர் ஒவ்வொரு கதைகளும் வளர்ந்து வரும் பொழுது திடீரென முறிந்து அல்லது நின்று போனதாக குறிப்பிட்டனர். ஆகவே ஒவ்வொரு கதையும் தம்மீது தாக்கத்தை செலுத்த வில்லை என்றனர். ஆனால் அனைவரும் இத்திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்ட இசையை மெச்சினர். அதாவது எந்த இசையும் இல்லாத அமைதியைக் கூட மிக அழகாகப் பயன்படுத்தி இருந்தனர். தொடரும்...

# ....பிடித்தவர்கள்

25ஆம் பக்கத்தொடர்ச்சி

வித்தியாசமான முறையில் பரிசோதிச்சு மருத்துவம் செய்யப் போகிறேன். முதலிலை அந்த முறையை உங்களுக்குச் சொல்லுறேன். பிறகு உங்கடை விருப்பப்படி நீங்கள் செய்யலாம் என்றார் வித்தியாதரன். சிவாவும் நீலவேணியும் குடும்ப வைத்தியரின் அலுவலகத்தில் அவருக்கு முன்னால் அமர்ந்திருந்தார்கள். நீலவேணியும் சிவாவுடன் கூட வந்திருந்தாள்.

அன்று வெள்ளிக்கிழமை. வித்தியாதரன் காலையில் தொலைபேசியில் அழைத்து நீலவேணியை கேட்டிருந்தார், இன்று அல்லது நாளை சிவாவை வந்து தன்னைச் சந்திக் முடியுமா? என்று. போன திங்கட்கிழமைதானே டொக்டரிட்டைப் போனவர். நீலவேணிக்கு ஞாபகம் வந்தது. வெள்ளிக் கிழமையே வந்து சந்திக்கலாமோ எனக் கேட்கிறாரே டொக்டர்? நீலவேணி பயந்து விட்டாள். சிவாவை வேலையால் விரைவில் வரச் சொல்லிவிட்டு, 5 மணிக்கே வித்தியாதரனிடம் கூட்டி வந்து விட்டாள். அந்தச் சந்திப்புத்தான் இது.

வித்தியாதரன் என்ன கூறினார் என்பதை அடுத்த தடவையிற் பார்ப்போம்

## கனடா - ஒன்ராறியோ வாழ் இலங்கை ஓய்வூதியம் பெறுவோருக்கான முக்கிய அறிவித்தல்

ஒன்ராரியோ வாழ் இலங்கை ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் இயக்குனர் சபை, பின்வரும் அறிவித்தலை, மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறது.
ஓய்வூதியம் பெறுவோர், அவர்களின் மறைவின் பின் விசேட வங்கிக் கணக்கில் இருக்கும் அவர்களது பணத்தை பெறுவதற்கு ஒருவர் அல்லது இருவரை நியமிக்கலாம். இந்த நியமனத்தை செய்வதற்கு இதற்கான படிவத்தை நிரப்பி சம்பந்தப்பட்ட வங்கிக்கு அனுப்பி, பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மன்ற அங்கத்தவர்கள், பின் தரப்பட்டிருக்கும் நிர்வாகப் பணிப்பாளர்களுடன் தொடர்புகொண்டு, படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்: ரெனிஸ் : **647.285.9336** செயலாளர்: ரகு : **416.431.4360**
உபதலைவர்கள்: ஸ்ரான்லி: **416.293.8592** - மாயா : **416.291.6667**

**www.vlambaram.com / www.tamilvanakkam.com**

# Education

## Review Questions14 -18

### CHEMISTRY 12

Determine heat of combustion of $C_3H_8(g)$ given that,

$H_{2(g)} + ½\ O_{2(g)} \rightarrow H_2O_{(l)}\ \ \Delta H^o = -285.8kJ$

$C_3H_{4(g)} + 4\ O_{2\ (g)} \rightarrow 3\ CO_{2(g)} + 2\ H_2O_{(l)}$ $\Delta H^o = -1937kJ$

$C_3H_{4(g)} + 2H_{2\ (g)} \rightarrow C_3H_{8(g)}\ \ \Delta H^o = 290kJ$

### DATA MANAGEMENT 12

(i) A group of 5 members is to be randomly selected from a society consisting 7 women and 8 men. What is the probability that the group will comprise only women.

(ii) A 5 card hand is dealt from a deck of 52 cards. How many distinct hands can be formed if there are at least 2 Kings

### PHYSICS 12

A bomber plane is diving to drop a bomb to reach a 2000m horizontal target in 20s. If the speed of the plane is 115m/s, determine the angle of the plane and its height when the bomb released from the plane

### PHYSICS 11/ 12

(i) A car is travelling on the highway at a constant speed 24 m/s. A police car noticed that the car accelerates from the rest at 2 $m/s^2$, 3 seconds after the speeder passes the police car. How long will it take the police car to catch up to the speeder.

(ii) A canoeist paddles 2.4km downstream and then turns around and paddles back upstream for 1.8km. The entire trip takes 40 minutes. (a) What is the displacement of the canoeist? (b) Calculate the average velocity of the canoeist?

### ADVANCED FUNCTION 12

(i) A ploynomial with the equation of $f_{(x)}$ $= ax^3 + bx^2 + cx + d$ has the following properties

(a) Remainder -7 when divided by $(x-1)$

(b) Same remainder when divided by $(x-2)a(x+2)$

(c) one of the factor $x$

Determine the equation of the polynomial.

## Answer Key : 14-17

### BIOLOGY 12 & IB




Sucrose glucose 1α→2 fructose

**Protein denaturation**- loss of protein structure from their native stage such as quaternary/ tertiary/ secondary structure due to unfolding.

High temperature, freeze and thaw, vigorous handling, salts, heavy metals, proteases, and microbial activity promotes denaturation of proteins.

### ADVANCED FUNCTIONS 12

(i) leading coefficient =1

$f(x) = a(x-1)(x-2)(x-3)^2$

Plug the values $f(x)$ =20 and x = 4, and then find the value "a " and write the equation

(ii) $x^4 + 9\ \le\ 6x^2$ ;

$(x^2-3)^2\ \le 0$; $x = \mp\sqrt{3}$

Ans. key 14-18 - next issue
☎ 647 341 3975
K.A.Srikrishnaraj B.Sc, MSc. PhD
ask@ keentutoringcentre.com
KEEN TUTORING CENTRE

# திரை விமர்சனம்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

ரசிக்க வைக்கின்றன. பின்னணி இசையிலும் ரசிக்க வைக்கிறார் சந்தோஷ். கவிஞர் உமாதேவி இப்படத்தில் பாடலாசிரியராக



அறிமுகமாகியிருக்கிறார். 'அனல்காயும் பறைஓசை ஓர் வாழ்வின் கீதம் ஆகிடுமே... பழி தீர்க்கும் உன் கண்ணில் ஓர் காதல் அழகாய் தோன்றிடுமே...' என்ற அவரது முதல் பாடல் வரிகள் காதலும் அரசியலும் கலந்திருக்கிறது.

குறுகிய சந்துபொந்து சாலைகள், 'ஹவுசிங் போர்டு' குடியிருப்புகள், கால்பந்து – கேரம்போர்ட் விளையாட்டுகள், மரக்கிடங்கு வியாபாரிகள் என வடசென்னையை அதன் இயல்பு மாறாமல் காட்டுகிறார் ஒளிப்பதி வாளர் முரளி. படத்தின் விறுவிறுப்புக்கு பிரவினின் எடிட்டிங்கும் ஒரு காரணம். ஆனால், இன்னும் சிறிது வெட்டியிருக்கலாம். படம் கொஞ்சம் நீளம்தான்.

வடசென்னையின் புறக்கணிக்கப்பட்ட வரலாறு, யதார்த்தமான திரைமொழி என இயக்குநர் ரஞ்சித் மீண்டும் ஒருமுறை தனது அடையாளத்தை உறுதிப்படுத்தியிருக்கிறார். அரசியல் சூழ்ச்சிக்கு பலியாகும் அப்பாவி பொதுஜனம், குழாயடி சண்டைகள், வெட்டு குத்து வெறியாட்டம், தாயின் பாசம், நட்பின் புனிதம், காதலின் சுகம், முன் கோபம், நட்பு, வீம்பு, துரோகம், பழிக்குப் பழி என வட சென்னை சமூக அரசியலை, வாழ்வியலை பூசி மெழுகாமல் திரையில் காட்டியிருக்கிறார்.

ஒரு சுவருக்காக அடித்துக்கொள்கிற இரண்டு கும்பல்கள், அதற்குள் ஒரு காதல் என்று சுருக்கிவிட முடியாது, அதிகார வர்க்கத்தினர், அரசியல்வாதிகள் அப்பாவி மக்களை எப்படியெல்லாம் பலிக் கடாவாக்கு கிறார்கள் என்பதை துணிச்சலோடும் தெளிவோடும் பேசியிருக்கிறது இப்படம்.

# அந்நியர்களும்...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

இயற்கையின் தேர்வின்படியேயான பரிணாம மாற்றங்களின் விளைவாக பூமியில் வெவ் வேறு உயிரினங்களும் பின்னர் ஒவ்வொன் றாகத் தோன்ற, இப்பூமியானது இன்று இவ்விதம் பரிணமிக்கின்றது என்கின்றார்கள் விஞ்ஞானிகள் சிலர். உயிரினத் தோற்றக் காலங்களின் வரிசையில் மனித இனம் பூமியில் தோன்றியது ஒரு மில்லியன் வருடங்களுக்குள்தான் என்கின்றது விஞ்ஞானம்.

ஆக, 4,500 மில்லியன் வருடங்களின் முன் தோன்றிய பூமியில், வேதியல் மாற்றங்கள், பரிணாம மாற்றங்கள் என்ற காலத்தினூடான மாற்றங்களினூடாக சுமாராக 4,499 மில்லியன் வருடங்களின் பின்னரே மனித இனம் பூமியில் தோன்றியது அல்லது தோன்ற முடிந்தது. எல்லாமுமே பரிணாம மாற்றத்தினூடாகவே நிகழ்ந்தது என விஞ்ஞானம் கூறுவதை மீண்டும் நினைவிற்குக் கொண்டு வருகின்றேன். அது சரி, மனிதர் எதிலிருந்து பரிணாம வளர்ச்சி பெற்றார்கள்? இது என்ன கேள்வி, எமக்குத் தெரியாதா என்ன! சிறு குழந்தைக்குக் கூடத் தெரியுமே என்று கூறுகின்றீர்களா? குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்! கொம்பேறித் தாவும் குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என நீங்கள் முணு முணுப்பதும் கூட எனக்குக் கேட்கின்றதுதான். ஆனாலும் விசயமில்லாமல் கேட்கவில்லை. ஆய்வாளர்களின் ஆய்வின்படி மனிதக் குரங்குகளின் பரிணாம வளர்ச்சியில் இருந்து வந்தவர்கள்தான் மனிதர்கள். ஆயினும் மனிதக் குரங்குகளுக்கும், மனிதர்களுக்கும் இடையே பரிணாம வளர்ச்சிப் பாதையில் அல்லது படியில் இன்னொரு உயிரினம் இடையில் இருந்திருக்க வேண்டும். (இதுவும் கூட விஞ்ஞானிகளின் கூற்றுத்தான்.) அப்படி ஒரு உயிரினம் இருந்ததற்கான சுவடுகள் எதுவும் இல்லை. இல்லை என்பதனைவிட, விஞ்ஞானிகளால் இன்னமும் கண்டுபிடிக்கப் படவில்லை என்று சொல்லலாம் என்கின்றீர்களா! சரி அப்படித்தான் என்று வைத்துக் கொள்வோமே. விஞ்ஞானிகளும் ஆய்வாளர்களும் இன்னமும்தான் மனிதருக் கும் மனிதக் குரங்குகளுக்கும் இடையிலான அந்தத் தவறிய இணைப்பை (Missing link) தேடிக் கொண்டு இருக்கின்றார்கள்.

தவறிய இணைப்புப் பற்றிய விடயங்களை அடுத்த தடவையிற் பார்ப்போம்.

# நான் வாசித்தது

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே. அனுப்புங்கள்

***Vlambaram@sympatio.ca***

யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

# ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கின் சூத்திரதாரிகள்!

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோதே அவர் மீது முதன் முதல் ஊழல் புகார் சொன்னவர் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமிதான். அன்றைய கவர்னர் சென்னா ரெட்டியைச் சந்தித்து தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க, வாழப்பாடி ராமமூர்த்தி ஆகிய அனைவருமே மனு கொடுத்தார்கள். அதன் தொடர்ச்சிதான் இந்த வழக்கு!

இந்த வழக்கின் சூத்திரதாரிகளாக பலர் இருக்கின்றனர். ஜெயலலிதா முதன் முறையாக 1.7.1991 முதல் 30.4.1996 வரை தமிழகத்தின் முதல்வராக இருந்தார். இந்த ஐந்து ஆண்டுகளில் அவர் தன் வருமானத்துக்கு அதிகமாக சொத்துகளைச் சேர்த்துள்ளதாக ஜனதா கட்சியின் தலைவராக இருந்த சுப்பிரமணியன் சுவாமி அப்போதைய தமிழக ஆளுநர் சென்னா ரெட்டியிடம் அனுமதி பெற்று, 14.6.1996-ல் சென்னை அமர்வு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். அந்த மனுவை விசாரித்த சென்னை அமர்வு நீதிமன்ற நீதிபதி ராமமூர்த்தி, தமிழ்நாடு ஊழல் மற்றும் கண்காணிப்பு துறையின் டி.ஐ.ஜியாக இருந்த லத்திகா சரணை விசாரணை செய்ய ஆணையிட்டார். அதை எதிர்த்து ஜெயலலிதா தரப்பு மனுத் தாக்கல் செய்தார்கள். அதையடுத்து சென்னை அமர்வு நீதிமன்றம் அந்த விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தது. ஆனால், இந்த வழக்கை துறைரீதியாக தமிழக ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறையின் ஐ.ஜி-யாக இருந்த வி.சி.பெருமாள் விசாரணை நடத்தி வந்தார். வி.சி.பெருமாள் முதல் நிலை விசாரணையை முடித்து, குற்றச்சாட்டுகளுக்குத் தேவையான பூர்வாங்க ஆதாரங்கள் இருந்ததால், விரிவான விசாரணையை மேற்கொள்ளலாம் என்றும், விரிவான விசாரணை அதிகாரியாக நல்லம்ம நாயுடுவை நியமனம் செய்து 7-9-1996 அன்று உத்தரவிட்டார். அதன்படி 18-9-1996 அன்று முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்தார். தொடர் விசாரணையை மேற்கொள்ள நல்லம்ம நாயுடுவுக்கு உதவியாக, 16 இன்ஸ்பெக்டர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டதோடு, அவர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்கள். ஜெயலலிதா தமிழகத்தின் பல்வேறு இடங்களில் வாங்கிய அசையா சொத்துக்களின் விவரங்களை நேரில் சென்று ஆய்வு செய்து தேவையான ஆதாரங்களைத் திரட்டுவதற்காக அமர்வு நீதிமன்றத்திடம் ஒப்புதலும் பெறப்பட்டது. இந்த நிலையில் டான்சி நில



வழக்கில் சி.பி.சி.ஐ.டி பொலீஸார் ஜெயலலிதாவை 7.12.1996-ல் கைது செய்து சென்னை புழல் சிறையில் அடைத்தனர். அப்போது நல்லம நாயுடு தலைமையிலான ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறை பொலீஸார் 7.12.96 முதல் 12.12.96 வரை ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் இல்லம், ஹைதராபாத் திராட்சை தோட்டம் ஆகிய இடங்களில் சோதனையிட்டார். ஏராளமான நகைகள், பட்டு சேலைகளில் ஜொலித்த ஜெயலலிதா - சசிகலா புகைப்படங்கள், நூற்றுக்கணக்கான செருப்புகள், ஆயிரக் கணக்கான பட்டு சேலைகள் வெளியில் காட்டப்பட்டன.

அதன் பிறகு வழக்கை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டது. அந்த தனி நீதிமன்றத்தில் 4.6.1997-ஆம் நாள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. 21.10.1997-ல் ஜெயலலிதா, சசிகலா, சுகாதரன், இளவரசி ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. பிறகு 259 சாட்சியங்கள் சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். மீண்டும் 2001-ல் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஜெயலலிதா முதல்வரானார். அதையடுத்து சாட்சிகள் மறு விசாரணை செய்யப்பட்டனர். அதில் பல சாட்சிகள் ஏற்கெனவே சொன்ன வாக்குமூலத்தை மாற்றி பிறழ் சாட்சியாக மாறினார்கள். இதனை அரசு வழக்கறிஞர் தடுக்கவில்லை.

இதையடுத்து தி.மு.க பொதுச் செயலாளர் அன்பழகன் உச்ச நீதிமன்றத்தில், "வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள ஜெயலலிதா முதல்வராக இருப்பதால், இந்த வழக்கை வேறு ஒரு மாநிலத்துக்கு மாற்ற வேண்டும்" என்று மனுத் தாக்கல் செய்தார். அதையடுத்து உச்ச நீதிமன்றம் வழக்கை பெங்களூருக்கு மாற்ற 18.11.2003-ல் உத்தரவிட்டது. 10.9.2004-ல் அதிகாரபூர்வ மாக வழக்கு பெங்களூருக்கு மாற்றப்பட்டது. பெங்களூருவில் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற சொத்துக்குவிப்பு வழக்கில் அரசு தரப்பில் சிறப்பு வழக்கறிஞர் பி.வி. ஆச்சார்யா, துணை வழக்கறிஞர் சந்தேஷ் சௌட்டா ஆகியோர் ஆஜராயினர். ஜெயலலிதா, சசிகலா ஆகியோர் இதுவரை வழக்கை இழுத்தடிக்க மட்டும் நூறு மனுக்களை பல்வேறு நீதிமன்றங்களில் தாக்கல் செய்துள்ளனர். நீதிமன்றத்தை அவமதிக்கும் கிரிமினல் நடவடிக்கையாகும் இது, ஆகையால் சட்ட விதி 15(2)-ன் கீழ் ஜெயலலிதா, சசிகலா மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க கர்நாடக உயர் நீதிமன்றத்துக்கு இந்த நீதிமன்றம் கோரிக்கை வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அத்துடன் "சாமூண்டீஸ்வரி கோயிலுக்கு வர முடியும். கோர்ட்டுக்கு வரமுடியாதா?" என்று கேள்வி கேட்டு, ஜெயலலிதா தரப்பை திணறடித்தவர்.

கர்நாடகா அரசின் அட்வகேட் ஜெனரலாக இருப்பவர், சிறப்பு அரசு வழக்கறிஞராகவும் இருக்கக்கூடாது என்று ஜெயலலிதா தரப்பு ஒரு பிரச்னையைக் கிளப்பியது. இதனையடுத்து உடனடியாக எனக்கு அரசின் அட்வகேட் ஜெனரல் பதவி தேவையில்லை என்று ராஜினாமா செய்துவிட்டு சொத்துக் குவிப்பு வழக்கில் கவனம் செலுத்தினார் ஆச்சார்யா. ஆனால், ஜெயலலிதா தரப்பு இவரை இந்த வழக்கில் இருந்து நீக்குவதற்காக, கவர்னர், உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோருக்குத் தொடர்ந்து அவதூறு மனுக்களை போட்டனர். இது போன்ற காரியங்களால் மன உளைச்சலுக்கு ஆளான ஆச்சாரியா, தன்னுடைய மீதி வாழ்நாளை நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் கழிக்க விரும்புகிறேன் என்று தன்னுடைய பதவியை ராஜினாமா செய்தார். ஆகஸ்ட் 14, 2012 அன்று தன்னுடைய பொறுப்பில் இருந்து விலகிக் கொண்டார்.

பெங்களூரு தனி நீதிமன்றத்தில் வழக்கு கடந்த 10 ஆண்டுகளாகப் பல நீதிபதிகளால் விசாரணை செய்தாலும் 31.10.2013-ல் வழக்கின் புதிய நீதிபதியாகப் பொறுப்பேற்ற ஜோன் மைக்கேல் டி.குன்ஹா, தான் தீர்ப்பினை வாசித்தவர். இவர் 26.5.2014-ம் திகதி நீதிமன்றத்துக்கு வந்திருந்த சசிகலா, சுதாகரன், இளவரசி மூன்று பேரையும் ஒருநாள் முழுக்க கூண்டில் நிற்க வைத்தார். இப்படி ஒவ்வொரு நாளும் கண்டிப்பு காட்டி தீர்ப்பின் திகதியை நோக்கி வழக்கை நகர்த்திக்கொண்டு வந்தார். கடந்த 28.8.2014-ம் திகதி ஒரே நாளில் ஜெயலலிதா தரப்பு, அரசு தரப்பு என இரு தரப்பு இறுதிவாதத்தின் நிறைவுத் தொகுப்பு வாதத்தை முடித்து எழுத்துபூர்வமான வாதத்தையும் பெற்ற அவர், 18 வருடமாக நடைபெற்று வந்த இந்த வழக்குக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் வழக்கின் இறுதித் தீர்ப்பு திகதியை அறிவித்தார். சுப்ரமணிய சுவாமி சென்னையில் தொடங்கிய வழக்கினை பெங்களூருவில் முடித்து வைத்தார் மைக்கேல் டி.குன்ஹா.

# மறக்க முடியாத ஜெயலலிதாவின் ஆட்சிக்காலம்!

தமிழக அரசியலில் பல புதுமைகளை, புரட்சிகளைப் படைத்த ஜெயலலிதா 10 வருடங்களுக்கு தேர்தலில் போட்டியிட



முடியாத நிலையை வந்தடைந்திருக்கிறார். அவரது இந்த நிலைக்கு அவரேதான் காரணம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் ஜெயலலிதா முதல் முறையாக முதல்வர் பதவியில் அமர்ந்தபோது, தொடக்க ஆண்டுகளில் உண்மையிலேயே நாட்டினரின் கவனத்தை ஒட்டுமொத்தமாக தன் பக்கம் ஈர்த்தவர். ஆனால் எப்போது சசிகலா குடும்பத்தின் ஆதிக்கத்தின் கீழ் அவர் போனாரோ அன்றே அவரது சரிவும் ஆரம்பமாகி விட்டது என்பதே உண்மை. செப்ரெம்பர் 27, 2014 வெளியாகியுள்ள தீர்ப்பு என்றைக்கோ வந்திருக்க வேண்டிய தீர்ப்புதான். ஆனால் இத்தனை காலமாக தள்ளிப் போய் வந்துள்ளது.

1991ம் ஆண்டு ராஜீவ் காந்தி படுகொலையான பின்னணியில் நடந்த தேர்தலில் அனுதாப அலை வீசி அதன் மூலம் அதிமுக ஆட்சியைப் பிடித்தது. காங்கிரஸுடன் கூட்டணி வைத்து தேர்தலைச் சந்தித்த அதிமுக, 225 தொகுதிகளில் வென்றது, முதல் முறையாக ஜெயலலிதா முதல்வரானார். அதுவரை எம்.ஜி.ஆரை. மட்டுமே முதல்வராகப் பார்த்து பூரித்திருந்த அதிமுகவினருக்கு அடுத்த எம்.ஜி.ஆர். போல தோன்றினார் ஜெயலலிதா. புரட்சித் தலைவரின் ஒரே வாரிசுதான் தான் என்பதை நிரூபித்து தொண்டர்களின் புரட்சித் தலைவி ஆனார். தமிழகத்தின் முதல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் முதல்வர், இளம் வயது முதல்வர் என்ற பெருமைகளும் ஜெயலலிதாவுக்கு வந்து சேர்ந்தது. 1991ம் ஆண்டு ஜூலை 24ம் திகதி முதல்வர் பதவியில் அமர்ந்த ஜெயலலிதா 1996ம் ஆண்டு மே 12ம் திகதி வரை அதில் நீடித்தார். இந்த ஆட்சியின் ஆரம்ப காலங்கள் உண்மையிலேயே அருமையானதாக இருந்தது என்பதை அவரது எதிரிகளே ஒப்புக் கொண்டார்கள். பல புரட்சித் திட்டங்களை இந்தக் காலத்தில் அவர் கொண்டு வந்தார். தொட்டில் குழந்தைத் திட்டம் அதில் ஒன்று. பெண் சிசுக்களைக் கொல்வதையும், அனாதரவாக விடுவதையும் தடுக்கும் வகையில் கொண்டு வரப்பட்ட இந்த தொட்டில் குழந்தைத் திட்டத்திற்கு ஐ.நா. சபையும் கூட பாராட்டு தெரிவித்தது. அதேபோல இந்தியாவிலேயே முதல் முறையாக அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும் கொண்டு வந்தார். இதுவும் கூட அவரது முதல் ஆட்சியின் தொடக்க காலத்தில் நடந்த நல்ல விடயங்களில் ஒன்றாகும். பொலீஸில் 30 சதவீத இட ஒதுக்கீட்டை மகளிருக்கு அறிமுகப்படுத்தினார். இதன் மூலம் பெண்கள் அதிக அளவில் காவல்துறையில் இணைய முடிந்தது. ஆனால் அவரது முதல் ஆட்சியின் கடைசிக்கட்டத்தில்தான் சசிகலா கும்பலின் அட்டகாசம் பெருகி கடைசியில் அவர் ஆட்சியை விட்டு இறங்கியபோது பெரும் அவப்பெயருடன் வெளியேறும் நிலைக்கு ஆளானார். இப்போது கிட்டத்தட்ட அரசியலை விட்டு இறங்கிப் போகும் அளவுக்கு நிலைமை போய் விட்டது.


## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
## இலவச ஆலோசனை வழங்கப்படும்

சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: **647.456.9796**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)

# ஏன் இந்தக் கொலை வெறி?

ஐ.எஸ்.ஐ.எஸ் ஊடகவியலாளர்களை வெட்டிக் கொலைசெய்கின்றது. அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ஐ.எஸ் கைப்பற்றியுள்ள பிரதேசங்களில் குண்டுகளை வீசுகின்றது. மக்கள் அகதிகளாக நாலா பக்கமும் சிதறி ஓடுகின்றார்கள். சிறுவர்கள் போதிய உணவின்றி இறக்கின்றார்கள். பெண்கள் கைதிகளாக்கப்பட்டு ஐ.எஸ் இன் வீரர்களுக்கு சமைக்கின்றார்கள். உடல் உபாதைகளை தீர்க்கின்றார்கள். ஏன் இவையெல்லாம் நடக்கின்றன? உலக அமைதிக்காக தோற்றுவிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை கைகட்டி மௌனம் சாதிக்கின்றது. எந்த விமானத்தில் ஏறினால் பாதுகாப்பாக வீடு போய் சேரலாம் என்ற கேள்விக்கு ஜோதிடர்கள் கூட பதில் சொல்லத் தயங்குகின்றார்கள். சென்ற வருடம் சிரியா அசாத்தின் அரசை வீழ்த்த ஆயுதம் வழங்கி ஊக்குவிக்கப்பட்ட அல் நுஸ்ராவின் மீது அமெரிக்கா குண்டுகளை வீசுகின்றது. அல் நுஸ்ராவும் ஐ.எஸ்சும். சுனி இனத்தவரின் அமைப்புக்கள். ஒன்றுக்கொன்று எதிரி. மேற்குலக நாடுகளுடன் கைகோர்த்துள்ள சவூதி, கட்டார், துருக்கி போன்ற நாடுகள் ஐ.எஸ்சின் வளர்ச்சிக்கு உதவிபுரிந்துள்ளார்கள். துருக்கி ஐ.எஸ்சுடன் கைதிகள் பரிமாற்றத்தையும் நடத்தியுள்ளது. எண்ணெய் வர்த்தகத்திலும் ஈடுபடுகின்றது. இதனால் ஐ.எஸ்க்கு பல மடங்கு பணம் கிடைத்துள்ளது. குர்தீஸ் மக்கள் விடுதலை இயக்கத்தின் எழுச்சியையும் விரைவில் அமையவுள்ள குர்திஸ்ஸான் நாட்டினையும் வீழ்த்த துருக்கி ஐ.எஸ்சை துரும்பாக பாவிக்கின்றது. சிரிய அரசை மாற்ற வேண்டும் என்று கங்கணம் கட்டிய ஒபாமா அரசு அதனை மறந்தே விட்டது. ஈரானுக்கு எதிராக வர்த்தக கடைகள் என தனது எதிரியாகவே ஈரானை காட்டிக் கொண்ட ஒபாமா அரசு இன்று அதன் மீது ஒரு மென்போக்கை கடைப்பிடிக்கின்றது. மக்கள் ஜனநாயகம் எனக் குரல் எழுப்பி கடாபியை இறக்கிய அமெரிக்கா சவூதியின் மனித உரிமை மீறல்களை கண்டுகொள்ளவேயில்லை. பாகிஸ்தானில் உயர் நீதிமன்றம் முன்னால் பெண்கள் கல்லால் எறிந்து கொல்லப்படுகின்றார்கள். எவரும் குரலெழுப்பவில்லை. யாருக்கு யார் எதிரி?



**- வினோதன் -**

ஐ.எஸ்சின் தோற்றத்துக்கு காரணமே மேற்குலக நாடுகள். ஜோர்டானிய Abu Musab al-Zarqawidhy ஐ.எஸ் தோற்றுவிக்கப்பட்டது. இவர் முன்னாள் அல் கைடா வீரர். ஈராக்கின் சதாம் வீழ்த்தப்பட்ட பின்னர் ஈராக் இராணுவத்திலிருந்து சுனி முஸ்லீம் வீரர்களை இராணுவத்திலிருந்து வெளியேற்றுமாறு அமெரிக்காவின் புஸ் அரசு ஆலோசனை வழங்கியது. அவ்வாறு வெளியேறியவர்கள் சுனி முஸ்லீம் அமைப்பான ஐ.எஸ்சுடன் இணைந்து கொள்கின்றனர். சிரியாவுக்கு எதிராக ஆரம்பகட்ட போர்நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்ட போது மேற்கு நாடுகள் ஆயுதங்கள் வழங்கின. பெருமளவு சுனி மக்கள் வாழும் சவூதி பல வகைகளில் உதவிபுரிகின்றது. இவர்கள் தங்களது வளர்ச்சியை திட்டமிட்டு நகர்த்துகின்றார்கள். ஈராக்கில் அமெரிக்க வெளியேற்றம் இவர்களுக்கு மேலும் உதவி புரிகின்றது. மேற்கு நாடுகளில் வாழும் பல சுனி முஸ்லீம்கள் இவர்களுடன் இணைகின்றனர். ஈராக்கின் மசூல் நகரத்தை கைப்பற்றிய போது அங்குள்ள ஈராக்கிய வங்கியிலிருந்த பல கோடிகளும் இவர்களுக்குச் செல்கின்றன. எண்ணெய் கிணறுகளையும் விட்டு வைக்கவில்லை. இதன் மூலமும் பணம் கிடைக்கின்றது. இவர்களது எழுச்சியையும் இவர்கள் அமைத்த புதிய நாட்டையும் உலகம் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தது. இதே காலகட்டத்தில் உக்கிரெயினில் ருசியாவின் ஆதிக்கம் அதிகரிக்கின்றது. மேற்கு அங்கு தனது வாய் வீரத்தைக் காட்டியபோதும் எதுவும் அவர்களால் செய்ய முடியவில்லை. காசாவை இஸ்ரேல் ஆக்கிரமிக்கின்றது. உலகம் கைதட்டி வரவேற்கின்றது. பிரபல அரசியல் ஆய்வாளர் கலாநிதி Christof Lehmann ரூட் சஞ்சிகைக்கு அளித்த பேட்டி இப்போரின் வேறொரு பக்கத்தை வெளிப்படுத்துகின்றது. சில காலங்களின் முன்னர் ருசியாவில் இயற்கை வாயு ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இது அமெரிக்காவிற்கு பெரும் எச்சரிக்கையை கொடுக்கின்றது. ஐரோப்பாவிற்கு பெருமளவு இயற்கை வாயு ருசியாவிலிருந்தே பெறப்படுக ின்றது. புதிதாக கட்டார் மற்றும் ஈரானில் 70 வீதம் அதிகளவு இயற்கை வாயு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எண்ணெயுடன் இயற்கை வாயுவும் இப்பொழுது மத்திய கிழக்கிற்கு வளமும் செலவமும் சேர்க்கின்றன. காசாவிற்கு அருகில் உள்ள கடற்பிரதேசத்தை அண்டிய பகுதிகளிலும் இயற்கை வாயு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது உங்களுக்கு புரிந்திருக்கும் மத்திய கிழக்குப் போருக்கான காரணங்கள். இவ்வாறு தனது பேட்டியில் கூறியுள்ளார் கலாநிதி கிறிஸ்ரோப் லேமன்.

அமெரிக்காவிற்கோ மேற்குலக நாடுகளுக்கோ மத்திய கிழக்கில் எந்தவித கொள்கைகளும் இல்லை. இவர்களது கொள்கைககள் எல்லாம் வர்த்தக விரிவாக்கமே. ஓட்டமான் எம்பயர் போன்று அமெரிக்க சாம்ராச்சியம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது. அதன் வெளிச்சமே இப்போர்.

# சீனி (Sugar) எமது உடலைச் சீராக்குமா?

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

நாம் நாளாந்தம் பாவனைக்குப் பாவிக்கும் சீனியை வெள்ளைச் சர்க்கரை என அழைப்பதுண்டு. எனவே இது ஒரு சத்து நிறைந்த உணவாகக் கருத வேண்டாம். எமக்கு சுவையுணர்வை நாவிற்கு ஏற்படுத்தித் தீங்கினை விளைவிக்கும் பொருள் எனக் கூறலாம். இதனை ஆய்வு செய்துள்ள 'ஜான் யூட்சின்' என்பவர் இதை ஒரு 'வெண்நஞ்சு' எனக் கூறுகின்றார். எனவே இதனைத் தவிர்த்து உடம்புக்கும் உடலுக்கும் தேவையான கலோரியுள்ள சத்தான காய்கறிவகை, பழவகை, தானிய வகை போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். சீனியை விரும்பி எடுக்கும் போது அளவை மிக குறைத்து உடல் நிலைக்கு ஏற்றவாறு பாவிப்பது நன்மையாக இருக்கும்.

சீனியை நாம் பாவித்து வருவதினால் பற்கள் தொடக்கம் சிறுநீரகம், இருதயம், தோல் போன்றவற்றைத் தாக்குவதுடன் அஜீரண நிலையும் ஏற்பட ஏதுவாகும் என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

சீனியில் எந்த வகையான சத்தும் அடங்கவில்லை. சீனியை ஆய்வு செய்த ஆய்வாளர் இருதய நோய்க்கு முக்கிய பங்குண்டு எனக்கூறுகின்றார். அடுத்து நீண்ட நாட்களுக்கு இந்த சர்க்கரை என்னும்



சீனியை தொடர்ந்து பாவித்து வந்தால் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரித்து காணப்படும் எனவும் இதனால் திடீரென இரத்தத்தின் சர்க்கரையின் அளவு உயரும் எனவும் இதனால் இரத்தத்தில் சர்க்கரையின் அளவும் உயரும் எனக்கூறி தகுந்த சிகிச்சை செய்யாது விடில் இரத்தத்திற்குரிய சீனி என்கின்ற சர்க்கரையின் அளவு குறைந்து Hypoglycemia நிலை ஏற்படும். உரியவருக்கு மயக்க நிலையும் தென்படும்.

வெள்ளைச் சர்க்கரை எனக் கூறப்படும் சீனியை பாவித்து வரும்போது அஜீரண நிலை ஏற்பட்டு சீரணிக்கும் போது உற்பத்தியாகும் அமிலங்கள் இரைப்பையில் உள்ள உட்புறச் சவ்வுப் படலங்களையும், குடல் பகுதியில் காணப்படும் உட்புறச் சவ்வையும் மற்றைய பகுதிகளையும் அமிலத் தன்மையால் அரித்து தாக்கத்தை விளைவிக்கும் எனவும் அறிய முடிகின்றது.

பற்களின் ஈறுகளில் தங்கியுள்ள சத்தும், சர்க்கரையும் சீனிப்பொருளாக மாற்றலாகி 'பக்ரீயா' கிருமிகளை ஏற்படும். இது அமிலங்களாகி விடும். இதனால் தோல்களிலும் அழற்சிநிலை ஏற்படலாம் எனவும் கூறப்படுகின்றது. எனவே சீனிப் பொருட்களைப் பாவிக்கும் போது சிறு பிள்ளைகளுக்கு பற்சிதைவு, தோல்புரை நோய்கள் ஏற்பட ஏதுவாகும். எனவே சீனி சேர்ந்த பொருட்களை அதிகம் பாவிக்காமல் கட்டுப்பாடுகள் இருப்பது உடல்நிலைக்கு உத்தமமாகும். உ+ம்: சீனி பிஸ்கட் இனிப்புப்

வைத்திய கலாநிதி

**கே.ரி. கோபால்**



D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

**வேலாயுதம் மகாவித்தியாலயம் ஒன்றிய ஏழாவது வருடாந்தப் பொதுக்கூட்டம்**

காலம்: ஐப்பசி 5ஆம் திகதி *(Sunday, October 05, 2014)*
நேரம் : காலை 9:30 தொடக்கம் பிற்பகல் 1:00மணி வரை
இடம் : *Scarborough Civic Centre Rooms 1 , 2*

வேலாயுதம் மகாவித்தியாலம் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர்.

*416.454.6360 / 416.282.0376 / 416.335.3738*

# SPECIAL DEAL FOR BUYERS & SELLERS

என் மூலம் வீடு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை அல்லது இந்தியா சென்று வர இலவச விமானச்சீட்டுகள் எந்தவொரு குலுக்கலும் இன்றி வழங்கப்படும். அல்லது வேண்டுமானால் அதற்கு சமமான பணம் வழங்கப்படும்.

| Purchase Price | Number of free tickets |
|---|---|
| 400,000 - 674,999 | 1 |
| 675,000 - 849,999 | 2 |
| 850,000 - 999,000 | 3 |
| 1,000,000+ | 4 |

**Also Free Moving**

## March Special For Sellers

My listing Commission is Flate Rate of - $2,999 + HST
My listing Commission For Condo. is Flate Rate of - $999 + HST

**Services Offered:**

- Open Houses
- Professional Photography
- Flyer Distribution for Your Property
- Home Staging
- Free Moving

**Get More $$$ For Your House By Calling Me!**

என்னை அழைப்பதன் மூலம் உங்கள் கட்டணங்களை எவ்வாறு குறைப்பது உங்களின் வருமானத்துக்கு ஏற்ப வீடுகளை எவ்வாறு தெரிவு செய்வது போன்ற பல்வேறு விடயங்களுக்கான ஆலோசனைகளை வழங்கி உங்கள் முதலீட்டுக்கான உச்ச பயனை அடைய என்னை அழையுங்கள்.

(This Deal Start From March 01st to November 30th)



## Lourdson Antonipillai

(Sales Representative)

**Dir: 416.738.8824**

**Offi: 905.201.9977**

HomeLife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, #205, Markham ON, L3S 4N8

HOMELIFE HIGHER STANDARDS

*Independently Owned & Operated

நகைச்சுவைத் தொடர் 295

# ராசம்மா ராச்சியம்



ஒன்ராறியோ 2014 லெக்சன்.




சிட்டுக்குருவிக்கென்ன கட்டுப்பாடு?
தென்றலே உனக்கேது சொந்தவீடு
உலகம் முழுதும் பறந்து பறந்து
ஊர்வலம் வந்து விளையாடு...



அந்தக்காலத்தில் சக்கை போடு போட்ட பாடலைக் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தனர்.
ஓ..ஜெயலலிதா வெரி யங்! யு சீ ரூபன் என
ரூபி சொல்ல உலகருக்கு ரத்தக்கொதிப்பு உச்சத்துக்கு போனது.



உலகம் முழுவதும் அம்மாவை கைது செய்துவிட்டார்கள்.
10 வருடத்திற்கு லெக்சன் கேக்கேலாது என செய்தி பரபரப்பாக பேசப்படுகிறது. பஸ்கள் கடைகள் எரிப்பு. கடையடைப்பு உண்ணாவிரதம். கண்ட நிண்ட இடமெல்லாம் கண்டனர் பலர் தீக்குளிப்பு உண்ணாவிரதம். அத்தனையும் தெரியாமல் சிட்டுக்குருவிக்கென்ன கட்டுப்பாடு?... பாடல்.



சொந்த வீடேயில்லாமல் சிறைப்பறவையாக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா வாடிக்கொண்டிருப்பது தெரியாமல் ரூபனும் பாட்டை ரசித்துக் கொண்டிருப்பது உலகருக்கு ரத்தக்கொதிப்பை அதிகரிக்க காரணம். இன்று பலருக்கு தம்மைச் சுற்றியோ ஊரில் உலகத்தில் என்ன நடக்கிறதென்றே தெரியாமல் வாழப் பழகிவிட்டனர்.



மாமி நீங்கள் சுண்டல் குக் பண்ணுங்கோ
நானும் ரூபனும் அவல் பிறிப்பெயர் பண்ணுறம் என்றபடி கழுவிய அவலை எடுத்து சமையல் கலை புத்தகத்தில் அவல் குழைப்பது எப்படி என்றதைப் பார்த்து அவல் குழைத்துக்கொண்டிருந்தனர்.

கொஞ்சம் பிரித்து எடுத்து அதில் கூடிய சக்கரை போட்டுவிட்டு ரூபன் இது எங்களுக்கு என்று சொல்லிவிட்டு மீதிக்கு சம்பிரதாயத்துக்கு கொஞ்ச சக்கரை ரூபன் எடுக்க, கொஞ்சம் குறையும் அவைக்கு சுகர் கூட சக்கரை போடவேண்டாம் என்று உலகரையும் ராசம்மாவையும் அவரின் குழாமையும் பார்த்து சொல்ல உப்பிடி மாமன் மாமியை கவனிக்கிற மருமேள் கிடைக்க குடுத்து வைக்க வேணுமென்று செக்கண்ட் புளோர் செல்லம்மா சொல்ல ஆட்டிலறி அன்னம்மா தமக்குள் சிரித்துக்கொண்டனர்.



இத்தனை அமளி துமளிக்குள்ளும் சோபாவில் குறட்டை விட்டு தூங்கிக்கொண்டிருந்தா ஐ பொட் அகிலாண்டேஸ்வரி.
திடீரென தாங்யூ தாங்யூ என்றபடி திடுக்கிட்டெழுந்தா!
எல்லோரும் சிரித்தவுடன்... என்ன அகிலா கனவு கண்டனியே எனக்கேட்க....

வெக்கத்துடன் நான் லெக்சன் கேட்டு வெண்ட பிறகு நன்றி சொல்லுற கூட்டத்தில பேசுற மாதிரி கனவு கண்டனான் என்று வெட்கத்துடன் சொல்ல எல்லோரும் சொல்ல...
உவ அகி.ஈஸ்வரி.கொம் ஈ..மெயில் ஒரு வருசத்துக்கு முன் ஓப்பின் பண்ணி இண்டைக்கு வரைக்கும் றிப்பிளை பண்ணுறதுமில்லை... அதுக்குள்ளை லெக்சன் கனவு என முணு முணுத்தபடி சக்கரை குறைந்த அவலை வாயில் போட்டா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

ஞாபகம் இருக்கிறதா? ஒக்ரோபா 1 - 15



01. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பிறந்தநாள்.(1927 – 2001)

01. உலக முதியோர் நாள்.




02. மகாத்மா காந்தி பிறந்ததினம் (1869 - 1948)

02. அனைத்துலக வன்முறையற்ற நாள்.



03. விஜயதசமி வித்தியாரம்பம் ஏடு தொடக்குதல்.

04. 1957 ல் பண்டா செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராக கண்டிக்கு ஊர்வலம் நடத்தப்பட்டது.



04. புரட்டாதி சனி 3ம் வாரம்.

08. இணுவில் வீரமணி ஐயர் நினைவு தினம். (1931 - 2003) (கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்)

11. புரட்டாதிச்சனி கடைசிச்சனி.



13. Thanksgiving

# சீனி...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

பண்டங்களை, ஐஸ்கிறீம், இனிப்பு பானங்கள் என்பனவற்றை அதிகம் எடுப்பதை தவிர்ப்பது உத்தமாகும்.

இயற்கையான சர்க்கரையில் 2.6% இருக்க வேண்டிய சுண்ணாம்புச்சத்து (கல்சியம்) மாறாக வெண்மையாக்கப்பட்ட நிலையில் காணப்படும் சர்க்கரையில் 10.9% அதிகரித்துக் காணப்படுகிறது. இது உடம்பிற்கு வெப்பத்தையும், தீங்கையும் விளைவிக்கும்.

மேலும் சீனி என்னும் சர்க்கரைப் பொருட்களைப் பாவிக்கும் குழந்தைகள் அமைதியற்று விரைவில் உணர்ச்சி வசப்பட்டு, முகபாவனையில் பொலிவு குன்றி காணப்படுவர். அத்துடன் உறக்க நிலையில் சிறுநீரும் கழிந்து காணப்படும். பற்கள் பழுதாகலாம். மலச்சிக்கல் அடிக்கடி ஏற்பட்டு வயிற்றோட்டமும் ஏற்படலாம். நாள் செல்லச் செல்ல தொண்டை அழற்சி, முடக்குவாதம், மூச்சுக்குழல் அழற்சி போன்றவை ஏற்பட இடம் உண்டு எனவும் அறிய முடிகின்றது.

சீனி என்னும் சர்க்கரைப் பொருள் உணர்ச்சியைத் தூண்டும் கிளர்ச்சிப் பொருள் எனவும் அறிய முடிகின்றது. கரும்பு, பீட்றூட் என்பவற்றில் இருந்து சீனி என்னும் சர்க்கரை தயாரிக்கும் போது காணப்படும் ஊட்டப் பொருட்களின் அளவும் பாதிக்கப்படுகின்றது. சர்க்கரையும் பாலும் சேரும்போது கந்தகமும் சுண்ணாம்பும் கலக்கப்படுகின்றன. இதனால் புரதம், உயிர்ச்சத்து, தாது உப்புக்கள் பாலில் இருந்து மறையக்கூடிய நிலை ஏற்படுவதாகவும் அறிய முடிகின்றது. எனவே இத்தன்மை எமக்கு கிளர்ச்சியை உண்டு பண்ணுவதாக் கூறப்படுகின்றது.

இப்படியான இனிப்பு தீனிப்பொருட்களை சாப்பிடும்போது பிராணவாயுவுடன் சேர்ந்து தீவிரமான இரசாயன மாற்றத்தை அடைந்து உணவு மண்டல உறுப்புகளை திடீரெனத் தூண்டி வேலையை அதிகரிக்கச் செய்கின்றது.

கூடுதலான வெப்பத்தையும், சக்தியையும் தந்து விரைவில் மறையும் தன்மையுண்டு. இதனால் நரம்பு மண்டலங்கள் அதிர்ச்சியால் தாக்கப்படலாம் எனவும் அறியமுடிகின்றது. வெப்பநிலையில் உள் உறுப்புக்களும் பாதிக்கப்படுகின்றன. கணைய உறுப்பும் அளவுக்கு மிஞ்சி செயல்படுகின்றது. இந்நிலையில் நீரழிவு வியாதியும் ஏற்பட ஏதுவாகின்றது என அறிய முடிகின்றது. எனவே எதற்கும் எம்மை நாம் பாதுகாக்க வழியமைத்துக் கொள்ள வேண்டும்.



## யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

## COMMERCIAL UNITS FOR SALE

Main Floor. Retail commercial. Units for quick sale in a reputable. Indoor mall. Tenented. Vacant position Possible. Price included one parking. Heart of scarborough. Close to all amenities. Only a few units available for your business. Only $148,888. (Don't miss)

**Pl. call: 416.315.9397**

## YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**

# GAS STATIONS/BUSINESSES FOR SALE




**Colombia Way/ Hwy 50**
Sale Of Business
Without Property
Gas Stations
$199,000
Golden Opportunity To Own Operate
Family Gas Bar In Gta




**Peterborough**
Sale Of Business
With Property
Convenience/Variety
$375,000
Excellent Location, Rare Opportunity To Own & Operate A Well Established (35 Yrs) Branded C Store, "Daisy Mart".

AMCO PETROLEUM
PRICE REDUCED
**Minden Hills**
Sale Of Business
With Property
Gas Stations
$459,000
with 7 Acre Land
&2-1BR Apt
Well Established Enroute Stop Over
On Busy Hwy 503




**GTA**
3 Bay
Coin Car Wash
with 2 vacuum
& Vending Machine
Asking only $259,000
Lease 10+10 , Rent $4000+TMI/ Month




**Waterloo**
Beverly/Wellingto
Sale Of Business
With Property
Gas Stations
$1.3M
Plus Stock
Busy Corner Location Next To City Hall Surrounded By Appts&Houses. Lots Of Walk In Loyal Customer




**Kingston**
Division St /Benson St
Sale Of Business
With Property
Gas Stations
$1.8M
Plus Stock
Well Established And Maintained Busy Shell Gas Station In Fast Growing Kingston City



**Brantford**
King George Rd/HWY 403
Sale Of Business
With Property
Gas Stations
$1.9M
Plus Stock
Excellent Opportunity To Own A # 1 Branded Esso Otr Gas Station In Urban Town



**Taviscott ESSO**
Oxford County
Gas Station,
Plaza
& 2 storey house
$2.5M
Plus Stock
Totally Renovated and Just an Hour from GTA



**Toronto**
Dundas / Windermere
Sale Of Business
With Property
Gas Station & More
$6.5M
Plus Stock
CANGO Gas Station. Leased for 30,000/Month



**Peterborough**
Park Rd / Monaghan
Gas Station
and Plaza
with Property
$1.5M
Plus Stock
well maintained and managed



**GTA Square Beauty Salon With Property**
$369,00
Plus Stock
Well Established Beauty,
Spa & Salon In A Busy High
Traffic Indoor Mall



## Nel Ketha
Sales Representative
**416.677.4707**

Smart Real Estate Solutions

HomeLife GTA Realty Inc. Brokerage
Tel: 416.321.6969, Fax: 416.321.6963
www. homelifegtarealty.com
203-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2

CCIM Individual Member
A Member of Commercial Division



உங்கள் பிள்ளைகளின் முன்னேற்றமான எதிர்காலம் இங்கு ஆரம்பமாகிறது

# NETKRAM
GIVING THE GIFT OF EDUCATION




கணித வகுப்புகள், ஆங்கில வகுப்புகள், பிரெஞ்சு வகுப்புகள், பாடசாலை வீட்டுவேலை வகுப்புகள்.

## MATH CLASSES
For Grade 1 - 12
INDIVIDUAL APPROACH FOR EACH STUDENT
(ADVANCE EXPLANATION)
தனிப்பட்ட முறையிலும் வகுப்புகள் நடத்தப்படும்

SPECIAL KIDS COMPUTER CLASS
> PROGRAMING LOGIC
> SKILL BUILDING ACTIVITIES

## ADVANCE CLASSES
- UML
- PHP
- ASP.NET
- ASP
- JAVA
- C++, C#
- VISUALBASIC.NET
- DATABASES
- PC-TECHNICIAN
- A+ CERTIFICATION

OFFICE 2010/2007
WORD
EXCEL
POWERPOINT
ACCESS
OUTLOOK
Microsoft Office Specialist (MOS) Certification

INTERNET PROGRAMMING ( I )
HTML
CSS
XML
INTERNET PROGRAMMING ( II )
Javascript
Server Side Web Development
Internet Webmaster Certification

JOB TRAINING FOR QUALIFIED STUDENTS

FRENCH & ENGLISH READING CLASSES

## HOME WORK CLASSES
Math
English
French
Other Subjects
GRADE 1 TO GRADE 6
ENGLISH AND FRENCH MEDIUM

மாதாந்தத் தேர்வுகள் கணினி மூலம் கற்பிக்கப்படும்
உயர்தர வகுப்புகள்
Math for HIGH SCHOOL
French for HIGH SCHOOL
English for HIGH SCHOOL
எமது உயர்வகுப்பு மாணவர்கள் அதி உயர் புள்ளிகள் பெற்று (Honor) சித்தியடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது

சிறந்த முறையில் வடிவமைக்கப்பெற்ற பாடநெறி முறைகளும், வழிநடத்தலும் அதி உயர் புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு தொழிற் பயிற்சியளிக்கப்படும்

COMPUTER
மின்கணனியில் பிரச்சனையா?
சிறந்த முறையில்
திருத்தி அமைத்து கொடுக்கப்படும்
-REPAIR -SALES
-UPGRADE
-SERVICES

opening hours
Mon - Thu : 4:00 PM - 9:00 PM
Sat - Sun : 9:00 AM - 5:00 PM
www.netkram.com

Contact : 905 - 471 - 1230
30 New Delhi Drive, Unit 68
Markham and 14th Avenue



















**Free Real Estate Class** - Call: **416.321.6969**

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

**www.vlambaram.com www.tamilvanakkam.com**













